# உலாக்கொண்ட மூவர்

THE MADURA TAMIL SANGAM

வித்துவான் டி. ஆர். ஸ்ரீநிவாசன், பி. ஏ.
எழுதியது.

ஸ்டாண்டர்ட் பப்ளிஷர்ஸ் லிமிடெட்,
சென்னை.

[காப்புரிமை] 1947 [விலை ரூ. 1-14-0.

Printed at The Jupiter Press, Madras.

# உள்ளுறை

அத்தியாயம் பக்கம்


| | | | |
|---|---|---|---|
| 1. | சோழர் தொன்மை | ... | 1 |
| 2. | முந்திய சோழ மன்னர் | ... | 21 |
| 3. | முதல் குலோத்துங்கனும் வேங்கி நாட்டுப் பிரதிநிதி விக்கிரம சோழனும் | ... | 42 |
| 4. | விக்கிரம சோழன் ஆட்சி | ... | 52 |
| 5. | இரண்டாம் குலோத்துங்கன் ஆட்சி | ... | 67 |
| 6. | இரண்டாம் இராஜ ராஜன் ஆட்சி | ... | 77 |
| 7. | அரசியல் நிலை | ... | 85 |
| 8. | முப்பெருஞ் சான்றோர் | ... | 104 |
| 9. | பிந்திய சோழ மன்னர் | ... | 125 |

அநுபந்தம் :

| | | | |
|---|---|---|---|
| I | சோழர்களின் வழி முறை | ... | 129 |
| II | மெய்க்கீர்த்திகள் | ... | 130 |

# நான்முகம்

"புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின்
வலவ னேவா வான வூர்தி
எய்துப என்பதஞ் செய்வினை முடித்து."

(புறநானூறு 27)

என்ற சான்றோர் வாக்குக்கிணங்கக் கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தரால் பாட்டுண்டு, மூவருலாவில் தமது பேரும் புகழும் மணிகள்போல் பதிக்கப் பெற்றுள்ள விக்கிரம சோழன், குலோத்துங்க சோழன் II, இராஜராஜ சோழன் II ஆகிய மூவரது வரலாற்றையும் இதுகாறும் ஒருவரும் தனிப்பட வெளியிடாததை நோக்கி, ஒருவாறு இச்சிறு நூலை எழுதத் துணிந்தேன். முதன் முதல் தமிழில் 'சோழவமிச சரித்திரச் சுருக்கம்' என வரைந்திட்ட, ஸ்ரீமான் T. A. கோபிநாத ராவ் அவர்களும் 'குலோத்துங்கன் II, இராஜராஜன் II ஆகிய இவர்களைப்பற்றி ஒன்றும் தெரியவில்லை' என்றே கூறிப் போந்துள்ளார். ஆதலால் இந் நூலிலுள்ள செய்திகள் பல, இதுவரை விளக்க மெய்தாச் செய்திகள் எனக் கூறலும் தகும்.

புலவர் பெரு மக்கள் திகழ்ந்த இம் மூவரசர் காலத்தையும், தமிழன்னை முடியரசு சூடிய காலம் (The Augustine Age in Tamil Literature) எனின் மிகையாகாது. இந் நூலை இயற்றுதற்குச் சென்னைப் பல்கலைக் கழகச் சரித்திர இலாகா தலைமை யாசிரியர் ஸ்ரீமான் கே. ஏ. நீலகண்ட சாஸ்திரியார், M. A. அவர்களது 'சோழர்களும் அவர் ஆட்சி முறையும்' என்ற ஆங்கில நூல் பெரிதும் பயன்ளித்தமையால் அன்னாருக்கு நான் பெரிதும் கடப்பாடுடையேன்.

இளைஞர்களுக்குத் தாய் நாட்டுப் பற்று வேரூன்றத் தாய் நாட்டுச் சரித்திர அறிவே சிறந்த கருவியாதலால், இந் நூல் எனைத்துணையாதல் மாணவர்களுக்குப் பயன்படுமாயின் அதுவே எனது இச்சிறு முயற்சிக்குக் கைம்மாறாகும்.

சென்னை, }
20-10-40 }

ஆக்கியோன்.

# உலாக்கொண்ட மூவர்

MADURA TA

## 1. சோழர் தொன்மை

---

### 1. சோழரின் பழங் குறிப்பு

*"வடவேங்கடந் தென்குமரி*
*ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகம்"*

(தொல்-சிறப்புப் பாயிரம்)

என வீறுடன் மொழியும் நம் 'தமிழகம்'[1] ஆன தமிழ் நாட்டில், பண்டைக் காலந் தொட்டே சேரசோழ பாண்டியர் என்ற தமிழ் வேந்தர் மூவரும் ஆண்டு வந்தனர் என்பதில் தற்போது, யாதொரு ஐயமு மில்லை. வால்மீக முனிவர் இயற்றிய ஆதி காவிய மாகிய இராமாயணத்திலும், இம்மூவரசரைப் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன.[2] பாரதப் போரிலும், ஒரு சோழன் பாண்டவ சேனைக்குத் துணைபுரிந்த செய்தியை,

---

[1] 'இமிழ்கடல் வரைப்பில் தமிழகம்'

(சிலப்பதிகாரம் - அரங்கேற்று காதை. வரி 37.)

[2] கவியரசான சுக்கிரீவன் சீதையைத் தேடத் தென்னாட்டுக்கு அனுப்பப்போகும் குரங்குகளை நோக்கி, 'தண்டகாரண்யத்திலுள்ள பர்வதங்களிலும், நதிக்கரைகளிலும் குகைகளிலும் தேடுங்கள். அதேமாதிரி, ஆந்திரநாட்டிலும், புண்டர நாட்டிலும், சோள நாட்டிலும் பாண்டிய நாட்டிலும், கேரள நாட்டிலும், தேடுங்கள்' எனக் கூறுகிறான். (கிஷ்கிந்தா காண்டம்)

" தாங்கு பாரத முடிப்பளவு நின்று தருமன்
தன்கடற்படை தனக்குணவு தந்த வவனும் "
(கலிங்கத்துப் பரணி-இராசபாரம்பரியம் 17.)

என்ற கவிச்சக்கரவர்த்தி சயங்கொண்டார் வாக்கால் தெளியலாம்.

சோழர்களைப்பற்றிச் சாசன வாயிலாக, கி. மு. மூன்றாம் நூற்றாண்டில் வடபால் இமயமுதல் தென்பால் மைசூர்வரையில், தன் ஒரு குடைக்கீழ் வைத்துச் செங்கோல் நடாத்திய ராஜரிஷியான அசோக சக்கரவர்த்தி காலத்தில் அறிகிறோம். இம்மன்னன் ஏறக்குறைய இந்தியாவின் முக்காற்பங்கை ஆண்டும், அமையாது கலிங்க நாட்டை[1] வென்றவன், தமிழகத்தையும் வெல்லக்கருதி யிருப்பது இயல்பன்றோ? அன்னணம் அவன் செய்யாது, தமிழரசர்களின் வலியும் வன்மையுங் கருதி, கிரேக்க ரோமம் போன்ற வெளி நாட்டரசர்களோ டொப்ப மதித்து, அவர் நாட்டுக்குத் தன்னிரு மகளிரான சங்கமித்திரையையும், மகேந்துவையும் சமய தூதுவராக அனுப்பிப் பௌத்த மதத்தைப் பரவச்செய்தது,[2] தமிழரசரின் பெருமைக்குப் போதிய சான்றாம். அசோகர் சாசனங்கள், சோழமன்னர் மாட்சியை விளக்கமாய்க் கூறுகின்றன.

இதன் பிறகு யவனாசிரியர்களாகிய, பிளினி (Pliny) டாலமி (Ptolemy) பெரிபுளூஸ் (Periplus) ஸ்டராபோ (Strabbo) முதலியோர், வாணிபத்தின்

[1] தற்கால ஒரிஸ்ஸா மாகாணமாகும்.
[2] அசோகன் சிலாசாசனங்கள் 2 & 3.

நிமித்தம் ஈண்டுப்போந்தோர், தாம் கண்கூடாகக் கண்டதொன்றைத் தமது நாட்டேட்டில் பொறித்து வைத்துள்ள குறிப்புக்களால், அக்காலச் சோழரின் பொலிவைப்பற்றியும் வாணிபத்தின் பெருக்கைப் பற்றியும் உணரலாம்.[1]

MADURA TAMIL SANGAM

சோழவர்மன் என்ற இயற்பெயருடைய ஒரு மன்னன், துஷ்யந்தனது மகனான பரதன் பிள்ளை என்று, திருவாலங்காட்டுச் செப்பேட்டின் மூலம் அறியக்கிடக்கிறது. அவ்வடநாட்டு வேந்தன் எங்ஙனம் தென்னாடு போந்தான் என்ற வரலாறொன்று வருமாறு வழங்குகிறது.

வேட்டை யாடக் கானடைந்த அவ்வரசன், மானாய்க் கரந்துரு வெய்தியுள்ள ஒரு அரக்கனைத் துரத்திக்கொண்டு தெற்கே வந்தான். முடிவில் அம்மானைக் கொன்று வீழ்த்திக் காவிரிக்கரை மருங் கடைந்து நீரில் மூழ்கினான். புனலினின்று எழுந்த பின் தானமளிக்க அந்தணர்களை நோக்குழி, ஒருவரையுங் காணாது, பின் ஆர்யா வர்த்தத்திலிருந்து வடமொழியாளரை வருவித்துக் காவிரிக் கரையில் குடியேற்றினான். அப்புறம் காடுகெடுத்து நாடாக்கி அவ்விடத்தைக் கமுகும் தென்னையும் செழிக்கும் பொழிலாகத் திகழுமாறு இயற்றினான். இவன் பின்னோர் சோழர் எனப் பட்டமெய்தினர்.[2]

---

[1] யவனாசிரியர்கள் காலம் கிறிஸ்தவாப்தம் பிறந்த முதல் நூற்றாண்டெனத் தெரிகிறது.

[2] S. I. Inscriptions III கன்னியா குமரிக் கல்வெட்டு : வீர சோழன் காலம்.

இம்மன்னன் வழியே காந்தன் என்ற காவல னொருவன் வந்து தோத்தகைப்பற்றியும், அவன் காவிரி நதியை மண்மிசைக் கொணர்ந்தமை பற்றி யும்,[1] பின் அவன் கணிகை மகன் ககந்தன் ஆண் டதால் காகந்தியெனப் பெயர் பெற்றதைப் பற்றி யும்[2] மணிமேகலையுள் விரித்துக் கூறப்பட்டுள்ளன.

இனிச் சோழர்களுள் ஒருவன், பொதிய மலையி லுள்ள அகத்திய முனிவரின் ஆணையை மேற் கொண்டு, மக்களின் இன்னலை ஒழிக்க, வானின்கண் அசைந்து கொண்டிருந்த மும்மதில்களை அழித்தான். அவ்வாற்றால் அவன் 'தூங்கெயில் எறிந்த தொடித் தோட் செம்பியன்' எனவும் புனைபெயருற்று வழங்கப் பெற்றான் எனப் புறப்பாட்டால் அறிய லாம்.[3]

---

1 "செங்கதிர்ச் செல்வன் திருக்குலம் விளக்குங்
கஞ்ச வேட்கையிற் காந்தமன் வேண்ட
அமர முனிவன் அகத்தியன் தனாது
கரகங் கவிழ்த்த காவிரிப் பாவை
செங்குணக் கொழுகிய சம்பா பதியயல்
பொங்குநீர்ப் பரப்பொடு பொருந்தித் தோன்ற"

(மணிமேகலை. பதிகம் 10-14.)

2 "ககந்தன் காத்தல் காகந்தி யென்றே
இயைந்த நாமமிப் பதிக்கிட் டீங்கு"

(மணிமேகலை. காதை 22-வரி. 37-38.)

3 "ஒன்னார் உட்குந் துன்னருங் கடுந்திறல்
தூங்கெயில் எறிந்தநின் னூங்கணோர் நினைப்பின்
அடுதல்நின் புகழு மன்றே" (புறநானூறு 39.)

சிலப்பதிகாரம்-வாழ்த்துக் காதை-அம்மானை வரியிலும் இவ னைப்பற்றிக் காணலாம்.

## 2. சோழர் என்ற பெயர்

[1]" புள்ளுறு புன்கண் டீர்த்த வெள்வேல்
சினங்கெழு தானைச் செம்பியன் "

ஆன சிபி என்னும் மன்னனது வழித் தோன்றல்கள் 'சைப்பியர்' என வடமொழியிலும், அம்மொழியே திரிந்து தமிழிலும் 'செம்பியர்' எனவும் சோழர் எனவும் வழங்கிற்று என்பர்.[2]

சோழர் என்பது ஒரு குடிப் பெயர் என்றும், அது காலத் தொன்மை வாய்ந்த குடி என்றும்,

' வழங்குவது உள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பில் தலைப்பிரித லின்று '

(குறள்—பொருட்பால்—ஒழிபியல்—குடிமை 5.)

என்ற குறளுக்கு ஆசிரியர் பரிமேலழகியார், 'பழங்குடி என்பது, தொன்று தொட்டு வருகிற குடியின் கண் பிறந்தார். தொன்று தொட்டு வருதலாவது, சேர சோழ பாண்டியர் என்றாற்போலப் படைப்புக் காலந் தொடங்கி மேம்பட்டு வருதல்' என உரை வரைந்து போந்தமையால் கண்கூடு. சோழர்கட்குப் பொதுவாக வழங்கும் பெயர்களை,

" சென்னி வளவன் கிள்ளி செம்பியன்
பொன்னித் துறைவன் புலிக்கொடிப் புரவலன்
நேரியன் ஆர்க்கோன் நேரிறை அபயன்
நேரி வெற்பன் கோழி வேந்தன்
சூரியன் புனல்நாடன் சோழன்பெயரே."

---

[1] புறநானூறு 37

[2] வீரசோழியம் தத்திதப்படலம் செ. 2 & 3

எனக் கூறும் திவாகரத்தால் அறிக. இப்பெயர்கள் பெரும்பாலும் அவருடைய நாடு, நகர், மலை, யாறு, கொடி, மாலை, குலமுதல் என்பவற்றைப் பற்றி யவை என்றும் காணலாம்.

## 3. சோழர் குலம்

சோழ மன்னர்களைச் சூரிய குலத்தவர் என்றும், சந்திர வமிசத்தினர் என்றும் இருவகையாகப் புகல்கின்றனர். ஆசிரியர் இளங்கோவடிகள்,

[1] 'திங்கட் செல்வன் திருக்குலம் விளங்கச்
செங்கணு யிரத்தோன் திறல்விளங் காரம்
பொங்கொளி மார்பில் பூண்டோன் வாழி'

எனவும், ஆசிரியர் மதுரைக் கூலவாணிகன் சாத்தனார்,

[2] 'செங்கதிர்ச் செல்வன் திருக்குலம் விளங்கும்
கஞ்ச வேட்கையின் காந்தமன்'

எனவும், சயங்கொண்டார் தம் பரணியில்,

[3] 'இருள்முழுதும் புவியகல இரவிகுலம்
இனிதோங்க இராச ராசன்
அருள்திருவின் திருவயிறு மாலிலையின்
அவதரித்தான் அவனே மீள'

---

[1] சிலப்பதிகாரம்-காடுகாண்காதை. 23-25.
[2] மணிமேகலை-பதிகம்-10-11.
[3] கலிங்கத்துப்பரணி-அவதாரம்-3.

எனவும், ஒட்டக்கூத்தர் இயற்றிய மூவருலாக்களி லும், சோழர்களுக்குக் குலமுதல் சூரியனே எனவும் புகலுதல் காணலாம்.

ஆயின், அரிவம்சம் முதலிய சில வடமொழி நூல்கள் சோழர்களை மதிகுலத்தோரெனக் கூறி நம்மை மயக்குகின்றன. எனினும், சோழர் சரிதத்தை முதன் முதல் ஆராய்ந்து ஒரு முகப்படுத்திக் கோத்த ஸ்ரீமான், T. A. கோபிநாத ராவ் அவர்கள், "சோழர்கள் சூரிய வமிசத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் வைவச்சுத மனுவின் பரம்பரையில் வந்தவர்கள் என்று, அடியில்வரும் பௌராணிக வழியைத் தமக்குக் கற்பித்துக் கொள்ளுகிறார்கள்" என்றார்.

வைவச்சுத மனு
|
சூரிய வம்ச ஸ்தாபகனை இக்ஷுவாகு
|
முசுகுந்தன்
|
வல்லபன்
|
சிபி.[1]

இனிக் கலிங்கத்துப் பரணி இராஜபாரம்பரியத்திலும் மூவர் உலா முதலிய நூல்களிலும் கூறப்படும் மன்னரான சிபி, காந்தன், தூங்கெயிலெறிந்த செம்பியன், கரிகாலன், கோச்செங்கண்ணன் முதலியோ ரனைவரும் சோழ வம்சத்தரசர்களாகவே

[1] சோழ வம்ச சரித்திரச் சுருக்கம்-பக்கம் 5. இந்தச் சிபியிலிருந்துதான் செம்பியர் எனப்பெயர் கொண்டது என்ப.

திகழ்வதாலும், அவர்கள் ஆதித்தமரபினர் எனவே ஏற்படுவதாலும், அவர்களைச் சந்திர குலத்தினர் என்பதற்குப் பண்டைத் தமிழாதாரம் ஒன்றும் இன்மையானும், அவர்களை இரவி மரபினர் எனக் கொள்ளலே பொருத்தமுடைத்தாம்.

## 4. சோழர் நாடு

சோழமண்டலம், தற்காலத்திய தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி ஆகிய இரு ஜில்லாக்களுடன், தென்னாற்காட்டின் ஓர் பகுதியும், புதுக்கோட்டைச் சீமையின் ஓர் பகுதியும் அடங்கிய நாடென்று நாம் உணர இடமுள்ளது. சோழர்கள் ஒரோ காலத்தில் ஒரோ இடத்தைத் தலை நகராகக்கொண்டு அரசாட்சி செய்து வந்தனர் என்றும், சில சமயங்களில் அவர்களுக்குள்ளே பிளவு உண்டாகி நாட்டைப் பகுத்துக் கொண்டு ஈரிடத்தே தலை நகரமைத்து ஆண்டு வந்தனர் எனவும் இலக்கிய வாயிலாக அறிகிறோம். அவையிற்றுள் தலையாய உள்நாட்டுத் தலை நகர் உறந்தையும், துறைமுகப்பட்டினம் புகார் என்ற காவிரிப்பூம் பட்டினமுமாகும்.[1]

இந்நாட்டைப் பொன்னைக் கொழிக்துவரும் பொன்னியாறு, குடதிசையிலுள்ள வளமனைத்தை

[1] 'மாடமதுரையும் பீடாருறந்தையும்
கலிகெழு வஞ்சியும் ஒலிபுனற் புகாரும்
அரைசுவீற் றிருந்த உரைசால் சிறப்பின்'
(சிலப்—வேனிற் காதை (3-5)

யும், 'வான் பொய்ப்பினுந் தான் பொய்யாது'[1] பெருக் கெடுத்துக் கொணர்ந்து, பல கிளையாய்ப் பிரிந்து, கால் காலாய்ப் பாய்ந்து, வளமுறச் செய் கிறது. இக்காவிரி கடலுள் கலக்கும் இடத்தே தான் 'பட்டினம்'[2] எனச் சிறப்புடன் புகலுறும் காவிரிப் பூம்பட்டினம் அமைந்திருந்தது. உறந்தை என்பது, திருச்சிராப்பள்ளி நகருக்கு அருகுள்ள உறையூர் என்ற ஊராகும். பின்னைக் காவிரிப்பூம்பட்டினம் கடல் கொள்ளப்பட்டது.[3] உறந்தையில் முன்காலங் களில் சீரும் பேரும் பெற்று விளங்கிய, அரசர் அரண்மனைகளும் மாட மாளிகைகளும், நமது தேசீய கவி தேசிக விநயகம் பிள்ளை வாக்கின்படி,

[4]'கொற்ற மன்னர் முடிசூடிக்
கொலுவில் அமர்ந்த திருக்கோயில்
முற்றுங் கூகை ஆந்தையொடு
முதுபேய் வாழுங் காடாய்'

மாறிவிட்டன போலும். ஆர் (ஆத்தி) என்பது சோழமன்னர்கள் முடியிலும் மார்பிலும் அணியும், கண்ணியும் தாருமாகும்[5]. புலிப்போத்து இவர்கட்குக் கொடியாத லோடு இலச்சினையுமாகும்.[6]

---

[1] பட்டினப் பாலை.—வரி 5. [2] பட்டினப்பாலை.—வரி 217

[3] மணிமேகலை காதை. 25 வரி 201-2.

[4] 'மலரும் - மாலையும் - பாரசீகக் கவியமுதம் 6.

[5] 'நின்னகண்ணியும் ஆர்மிடைந் தன்றே
நின்னொடு பொருவோன் கண்ணியும் ஆர்மிடைந்தன்றே'
(புறநானூறு 45.)

[6]'புலிபொறித்துப் புறம் போக்கி' பட்டினப்பாலை. 135.

# 5. பழங்காலச் சோழ அரசர்கள்

தமிழிலக்கியம் பலவற்றிற்குப் பாட்டுடைத் தலைவனாக மிளிரும் கரிகாற் பெருவளவன் என்பான் உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னியின் புதல்வன். இவன் தாய் நாங்கூர் வேளின் மகள். இவன் மகள் ஆதிமந்தி. இவன் இளம்பிராயத்தே அரியணை யேறியவனாதல் வேண்டும். இளம் பருவந்தொட்டே மிக்க நீதிமானாக இவன் அரசாண்டான் என்பது,

[1]'உரைமுடிவு காணா னிளமையோ னென்ற
நரைமுது மக்க ளுவப்ப—நரைமுடித்துச்
சொல்லான் முறை செய்தான் சோழன் குலவிச்சை
கல்லாமற் பாகம் படும்'

என்ற செய்யுளாலும்,

[2] 'இளமை நாணி முதுமை யெய்தி
உரைமுடிவு காட்டிய உரவோன்'

என்ற வாக்காலும் புலனாம். இவன் இமயம் வரைப் படையெடுத்துச் சென்று, அம்மலையில் தனது புலிக் கொடியைப் பொறித்த செய்தி,

[3] செண்டு கொண்டு கரிகாலனொரு காலினிமயச்
சிமய மால்வரை திரித்தருளி மீளவதனைப்
பண்டு நின்றபடி நிற்கவிது என்று முதுகிற்
பாய்புலிக் குறி பொறித்தது மறித்தபொழுதே'

[1] பழமொழி-செய்யுள் 6. [2] மணிமேகலை - பளிக்கறை புக்க காதை. 107-8. [3] கலிங்கத்துப் பரணி-இராஜபாரம்பரியம் 1.

என்ற செய்யுளாலும், இவன் வெண்ணி என்ற போர்க்களத்தே சேரமான் பெருஞ் சேரலாதனோடு பொருது அவனைப் புறங்காண, அச் சேரலாதன் புறப்புண்ணிற்கு வெட்கி வடக்கிருந்தான் என்பதும், அதேகளத்தில் பாண்டியனையும் வென்றான் என்பதும்,

[1] 'இருபெரு வேந்தரும் ஒருகளத் தவிய
வெண்ணித் தாக்கிய வெருவரு நோன்தாள்
கண்ணார் கண்ணிக் கரிகால் வளவன்.'

என்ற அடிகளாலும், பின் வாகைப் பறந்தலை என்னுமிடத்தே இவனுடன் பொருத ஒன்பது மன்னர்களை ஒரு பகலில் வென்றான் என்பதும்,[2] போதருகின்றன. இவன் காவிரிக்குக் கரை வகுத்தான் என்ற செய்தி,

[3] 'சென்னிப் புலியே திருத்திக் கிரிதிரித்துப்
பொன்னிக் கரைகண்ட பூபதியும்'

என்ற அடிகளால் விளங்கும். அங்ஙனம் காவிரிக்குக் கரையெடுக்கத் தன்கீழுள்ள அரசர்களுக்கு ஆணைபோக்க, அவ்வழி மூன்று கண்களையுடைய ஒரு தெலுங்கு நாட்டரசன் வாராது தருக்குற்றிருக்கக் கண்டு, கரிகாலன் அவன் உருவைப் படத்தில் தீட்டி அவனது நெற்றி நயனத்தை யழிக்க, உடனே

---

[1] பொருநராற்றுப்படை 146-48.

[2] அகநானூறு. 125.

[3] விக்கிரம சோழனுலா 25-26.

அவ்வரசன் நுதல் விழியை இழந்து செருக் கொடுங்கினன் என்பது,

[1] 'மண்கொண்ட பொன்னிக் கரைகட்ட வாராதாற்
கண்கொண்ட சென்னி கரிகாலன்'

என்பதாலும்,

[2] 'தொழுது மன்னரே கரைசெய் பொன்னியிற்
தொடர வந்திலா முகரியைப் படத்து
எழுதுகென்று கண்டுஇது மிகைக் கணென்று
இங்கழிக்கவே அங்கழிந்ததும்'

என்பதாலும் உணரலாகும். இவன் காலத்தே வாணிபம் சிறந்திருந்தது என்பதற்கு,

[3] 'நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
காலின் வந்த கருங்கறி மூட்டையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
தென்கடல் முத்தும் குணகடல் துகிரும்
கங்கை வாரியும் காவிரிப் பயனும்.'

நிலமகள் முதுகுநெளியுமாறு புகாரில் குவிந்து கிடக்கும் என்று கூறுவதாலும், இவன் உறந்தைப் பதியைப் புதுப்பித்தான் என்றது,

[4] 'பிறங்குநிலை மாடத்து உறந்தை போக்கி
கோயிலொடு குடிநிறீஇ

---

[1] குலோத்துங்கசோழன் உலா 35-36.
[2] கலிங்கத்துப் பரணி-இராசபாரம்பரியம்-20.
[3] பட்டினப் பாலை 185-90.
[4] பட்டினப் பாலை 285-88.

வாயிலொடு புழையமைத்து
ஞாயில்தொறும் புதைநிறீஇ'

என்ற கூற்றாலும் ஐயந்திரி பற்றதாகும். இவன் கல்வி கேள்விகளிற் சிறந்தவன் என்பதற்கு, கடியலூர் உருத்திரங் கண்ணனார் போன்ற புலவர் பெருமக்கள் இவனைப் பாடி யிருத்தலே சான்றாகும். இவன் கிறிஸ்தவாப்தத்தின் முதல் நூற்றாண்டின் முற்பகுதியில் ஆண்டனன் என்ப.

கரிகாலனுக்குப் பிறகு, புகார் நகரில் இருந்து அரசாண்டவன் கிள்ளி வளவன் என்பான். மணிமேகலையிற் கூறலுறும் சோழன் இவனே. இன்னுனுக்கு, நெடுமுடிக்கிள்ளி,[1] வடிவேற்கிள்ளி,[2] மாவண்கிள்ளி,[3] என்ற புனைபெயர்கள் வழங்கி வந்தன என்பதும், இவன் நாகநாட்டரசன் வளைவணன் மகளாகிய பீலிவளை என்பாளை மணந்து ஓர் மகவைப் பெற்றான் என்ற செய்தியும், மணிமேகலையால் தெளிவெய்தலாம். இவன் மகன் உதய குமாரன், துறவு பூண்டிருந்த மணிமேகலையைக் காதலித்து அவளைக் கைக்கொண்டேக நள்ளிருளில் ஊரம்பலஞ் சென்றுழி, அங்கு ஓர் விஞ்சையன் வாளால் வெட்டுண்டிறந்தான். இச் செய்தி கிள்ளிவளவன் செவியுற்றதும், 'அத்தகைய தீவினையாளன் என் மரபில்

1 மணிமேகலை—ஆபுத்திரன் நாடடைந்த காதை 29.
2 ,, ஆபுத்திரனோடு மணிபல்லவமடைந்த காதை-193.
3 ,, சிறைக்கோட்டம் அறக்கோட்டமாக்கிய காதை-127.

தோன்றினன் என்பதை ஏனை மன்னர் அறியு முன்னர் அவனைப் புறங்காடு அடைவிக்க' எனக் கூறிய மாற்றத்தால் இவன் எத்துணை நீதி வாய்ந்த வன் என்பது தெரிகிறது.[1]

எனினும் இவன் கடையெழு வள்ளல்களுள் ஒருவனை, திருக்கோவலூரிலே அரசு செய்துவந்த மலையமான் திருமுடிக்காரியின் இளமக்களைக் கரியின் காலிலிட்டு இடறத் துணிந்தமை, இவனுக்கு ஒரு மறுவை விளைவிப்பதாகும். இப்பாதகச் செயலை அற வுரை பகர்ந்து தடுக்க, புலவர் பெருமான் கோவூர் கிழாரின் அறிவுறுத்தலுக்கு இணங்கி இவன் தவிர்ந்ததும் வியக்கத் தக்கதே[2]. இச்சோழன் காலத்தே காவிரிப்பூம் பட்டினம் கடல்கொள்ளப் பட்ட தென்றும், இவன் வேற்றிடத்தை நாடிச் சென்றான் என்பதும் அறியலாம்.[3] இவன் சேர நாட்டிலுள்ள குளமுற்றம் என்ற ஊரில் நிகழ்ந்த போரில் உயிரிழக்கவே, சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் எனப்பட்டான்.[4]

இவன் தம்பி நலங்கிள்ளி என்பது,

[5] 'சிலைக்கயல் நெடுங்கொடி செருவேற் றடக்கை
ஆர்புனை தெரியல் இளங்கோன் தன்னால்
காரியாற்றுக் கொண்ட மாவண் கிள்ளி'

---

1 மணிமேகலை - சிறைசெய் காதை. 176-215.

2 புறநானூறு 46.

3 மணிமேகலை ஆபுத்திரனோடு மணிபல்லவமடைந்த காதை.

4 புறநானூறு 34.

5 மணிமேகலை - சிறைக்கோட்டம் அறக்கோட்டமாக்கிய காதை-வரி 125-27.

என்ற அடிகளால் அறியலாம். இவனுக்குச் சேட்சென்னி, தேர்வண்கிள்ளி என்னும் பெயர்களும் உண்டு. இவன் தன் பகைவனாகிய நெடுங்கிள்ளியை, ஆவூர், உறையூர் முதலிய இடங்களில் பொராது, இறுதியில் காரியாற்றில் பொருது கொன்றான். அங்கே பாண்டியர்களையும் வென்று அவர் கொடிகளையும் கைக்கொண்டான். இவன் பாண்டி நாட்டிலுள்ள ஏழு அரண்களையும்பற்றி அவற்றின்கண் தன் புலி இலச்சினையைப் பொறித்தான் என்பது.

[1] 'தென்னம் பொருப்பன்நன்னாட் டுள்ளும்
ஏழெயிற் கதவ மெறிந்துகைக் கொண்டுநின்
பேழ்வாய் உழுவை பொறிக்கும் ஆற்றலை'

என்பதால் அறியலாம். இவன் உறையூரை முற்றியிருந்தபோது கோவூர் கிழார் என்னும் புலவர்,

[2] 'இரும்பனை வெண்தோடு மலைந்தோ னல்லன்.
கருஞ்சினை வேம்பின் தெரியலோ னல்லன்.
நின்ன கண்ணியும் ஆர்மிடைந் தன்றே நின்னொடு
பொருவோன் கண்ணியும் ஆர்மிடைந் தன்றே
*   *   *   அதனால்
குடிப்பொரு ளன்றுநுஞ் செய்தி'

என்று நல்லுரை மொழிந்து இருவரையும் சந்து செய்வித்தார். இவ்வரசனும் ஒரு புலவன் என்பது இவன் பாடியதாகப் புறநானூற்றில் காணப்படும் இரு செய்யுளால் தெளிவு. இவன் இலவந்திகை என்ற இடத்தில் துஞ்சினன் என்ப.

---

1 புறநானூறு 33.
2 ,, 45.

முற்கூறிய காரியாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளியின் மகன் பெருங்கிள்ளி என்பான். இவனை இராஜசூயம் வேட்ட பெருநற்கிள்ளி எனவும் வழங்குப. இவன் சேரன் செங்குட்டுவனுக்கு அம்மான் சேய். இவன் உறையூரிலிருந்து அரசுபுரிந்து வருகையில், தன் மாமன் பத்தினிக் கடவுளைப் பிரதிட்டை செய்ததை நோக்கி, தானும் உறையூரின் கண்ணே, பத்தினிக்கு ஒரு கோயில் எடுத்து விழவுங்கண்டான் என்பது, 'அது கேட்டுச் சோழன் பெருங் கிள்ளி கோழியகத்து எத்திறத்தானும் வரந்தரு மிவளோர் பத்தினிக் கடவுளாகுமென, நங்கைக்குப் பத்தினிக் கோட்டமுஞ் சமைத்து நித்தல் விழாவணி நிகழ்வித்தோனே'[1] என்ற அடியார்க்கு நல்லார் வாக்கால் உறுதியாம்.

இனிக் கோப்பெருஞ் சோழர் என்பார் ஒருவர், தாமும் இன்கவிபாடும் வன்புலமை வாய்ந்தவராய்ப், புலவர் பெருமக்களையும் பெரிதும் போற்றியவராய் விளங்கினர். இவர் உயிர்த்தோழர் பிசிராந்தையார் என்ற சான்றோர். இக்கோப்பெருஞ் சோழருக்கு இரு மக்கள் உண்டு. அவ்விருவரும் தமது தகப்பனுக்கு அடுத்த பகைஞர். அவர் ஒருகால் தகப்பனுடன் அமர் புரியவும் வேட்டெழுந்தனர். அப்பனும் சினம் முடுகத் தனையர் மீது போருக்குச் சென்றான். அப்போது புல்லாற்றூர் எயிற்றியனார் என்னும் நல்லிசைப் புலவர் தாம் பாடிய அமிழ்தினும் இனிய தமிழ்ச் செய்யுளால், கோப்பெருஞ்சோழன் சின

[1] சிலப்பதிகாரம் - உரைபெறுகட்டுரை.

மவிந்து படையெழுச்சியைத் தவிர்ந்தான்.[1] ஆயினும் மைந்தர்களின் தீச்செயலால் மானமழிந்த மன்னன், பின்னும் உயிர்வாழ உன்னுனய் வடக்கிருந்து உயிர்நீத்தான்.[2]

இச் செய்தியைச் செவியுற்ற பிசிராந்தையாரும், நண்பனைப் பிரிந்து உயிர்தரிய எண்ணாது, பின் வடக்கிருந்தே உயிர் துறந்தார். இதனையே,

> [3] "புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
> நட்பாங் கிழமை தரும்"

என்ற குறளுரையில் பரிமேலழகர், "கோப் பெருஞ் சோழனுக்கும் பிசிராந்தையார்க்கும்போல உணர்ச்சி யொப்பின் அதுவே உயிர் நீங்கும் உரிமைத்தாய நட்பினைப் பயக்கும் என்பதாம்" எனப் பாராட்டுவார்.

இச்சோழர் மரபில், அறனும் மறனும், அறிவும் ஆற்றலும் மிக்கு அரசராய் ஆண்டு, சிவனடியாராய்த் தொண்டு பூண்டு திகழ்ந்து, பின் அறுபத்து மூன்று நாயன்மாருள் ஒருவராக வைத்து எண்ணப் படுபவர் கோச்செங்கட் சோழர் என்பவர். இவர் முற்பிறப்பின் வரலாறு, வருமாறு பெரிய புராணத்தில் விரிக்கப்பட்டுளது.

பழம் பிறப்பில் சிறிய தவ மியற்றிய ஒரு வெள்ளானை, பஞ்ச பூதங்களுள் நீரின் வடிவாயிலங்கும் திருவானைக்காவிலுள்ள சிவபெருமா

---

[1] புறநானூறு-213.
[2] " -214.
[3] திருக்குறள்-பொருட்பால்-நட்பு-5.

னுக்கு, நாடோறும் வழிபாடியற்றி வந்தது. ஒரு நாள் சிவபெருமான்மீது சருகு முதலிய உதிரா வாறு தன் வாயால் நூலிழைத்துக் கூடுகட்டி மேல் விதான மமைத்திருப்பதைக் கண்ணுற்ற உடனே அக்களிறு கடுங்கோபமுற்று, அச்சிலந்தியின் செய லால் எம்பெருமானுக்குக் குறைவு வுண்டு எனக் கரு தித் தன் துதிக்கையால் கூட்டை அழித்தது. மீண்டும் மறுநாள் அச்சிலந்தியும் வேறு கூடிழைக்க, அதை யும் யானை முன்போலவே சிதைக்கக் கண்டு, சிலந்தி யும் வெகுண்டு கரியின் துதிக்கையில் புகுந்து கடிக்க, அத்துயர் பொருத கைக்கரி துதிக்கையைத் தரை யில் அறையச் சிலந்தி இறந்தது. அச்சிலந்தியே பின் சோழ குலத்தரசர் சுபதேவர் என்பவருக்கும், கமல வதி என்பாளுக்கும் மகவாய்த் தோன்றிக் கோச் செங்கண்ணர் என்ற பெயருடன் மிளிர்ந்தது என்பர்.[1]

இச்சோழன், சேர அரசனை சேரமான் கணைக்காலிரும்பொறை என்பானுடன் போர் புரிந்து அவனைப்பற்றிச் சிறையிலிட, அச்சேரமான் அவைக்களப் புலவராகிய பொய்கையார் என்பவர், [2]களவழி நாற்பது, என்னும் நூலை இயற்றி அச்சேர மானைச் சிறைவீடு செய்தனர் என்பது,

1 பெரிய புராணம்.-கோச் செங்கட் சோழ நாயனர்.

2 இது பதினெண்கீழ்க் கணக்கினுள் ஒன்று. இப்பொய்கை யாரே ஆழ்வார் பன்னிருவருள் ஒருவரானவர் என்பர், ராவ்சாகிப் மு. ராகவய்யங்கார் அவர்கள்.—ஆழ்வார்கள் காலநிலை, பக்கம் 23.

[1] 'களவழிக் கவிதை பொய்கையுரை செய்ய உதியன்
கால்தளையை வெட்டி அரசிட்ட அவனும்'

என்பதாலும்,

[2] 'மேதக்க பொய்கை கவிகொண்டு வில்லவனைப்
பாதத் தளைவிட்ட பார்த்திபனும்'

என்பதாலும் உணரலாம். இவனை,

[3] 'இருக்கிலங்கு திருமொழிவாய் எண்தோளீசர்க்கு
எழில்மாடம் எழுபது செய்துலக மாண்ட
திருக்குலத்து வளச்சோழன்'

என்று திருமங்கை யாழ்வார் புகழ்வதாலும், திருநாவுக்கரசரும்,

'பெருக்காறு சடைக்கணிந்த பெருமான் சேரும்
பெருங்கோயில் எழுபதினோ டெட்டும்'

எனப் பாராட்டுவதாலும், இவன் சிவாலயங்கள் பல கட்டுவித்தும், சிலவற்றைப் புதுக்கியும் தொண்டு புரிந்தான் என்பது புலனும். இவன் சேர பாண்டிய மன்னர்களுடனும் பொருது வென்று அவரைத் தன் கீழ்ப்படுத்தி ஆண்டான் என்பது திருமங்கை யாழ்வார்,

---

1 கலிங்கத்துப் பரணி.-இராச பாரம்பரியம்-18.
2 விக்கிரம சோழன் உலா-27-28.
3 பெரிய திருமொழி பத்து 6 பதிகம் 6 பாட்டு 8.
4 அப்பர் தேவாரம்.-அடைவு திருத்தாண்டகம் 5.

[1] 'தென்னாடன் குடகொங்கன் சோழன் சேர்ந்த
திருநறையூர் மணிமாடம்'

என்பதாலும், சுந்தரமூர்த்தி நாயனாரும்,

[2] 'தென்னவனா யுலகாண்ட செங்கணார்க்கு அடியேன்'

எனப் புகன்றுள்ளதாலும் வெளிப்படை.

பரம வைணவ பக்தரான திருமங்கை யாழ்வாரும் புகழுமாறு, இச்சோழன் வேறு மதங்களை வெறாது புரந்து வந்தான் என்பது இச்செய்திகளால் மலை இலக்காம். இவன் பழம் பிறப்பில் சிலந்தியாயிருந்த வரலாறு,

[3] 'தெருண்ட வாயிடை நூல்கொண்டு சிலந்தி
சித்திரப் பந்தர் சிக்கென வியற்றச்
சுருண்ட செஞ்சடை யாரது தன்னைச்
சோழனாக்கிய தொடர்ச்சி கண்டு'

என்ற நம்பி ஆரூரர் வாக்காலும் வெளியாம்.

1 பெரிய திருமொழிப்பத்து 6 பதிகம் 6 பாட்டு 6.

2 சுந்தரமூர்த்திகள் தேவாரம்-திருத்தொண்டர் தொகை-11.

3 திருவாவடுதுறைப் பதிகம்-2.

# 2. முந்திய சோழ மன்னர்கள்

## 1. விஜயாலயனுக்கு முற்பட்ட இடைக்காலச் சோழர்

இங்ஙனம் தமிழ் இலக்கியத்தின் வழி நாம் உணரும் சோழ அரசர்கள் காலத்துக்கும், பின்னல் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் விளங்கிய விஜயாலய மரபினர் என்ற 'பெருஞ் சோழர்' (The Imperial Cholas) காலத்துக்கும், இடைக்காலத்தே சோழ மண்டலத்தை ஆண்ட அரசர்களைக் குறித்து நாம் திட்டமாய் ஒன்றும் கூற முடியவில்லை. ஏனெனில் கி. பி. ஐந்து, ஆறு நூற்றாண்டுகளில், வடக்கே காஞ்சிப் பதியைத் தலைநகராக அமைத்துத் தொண்டை மண்டலம் என்ற நாட்டைக் காடவர் என்றும் பல்லவர் என்றும் பட்டம்பெற்ற, வலிமிக்க மன்னவர்கள் ஆளத் தொடங்கினர். அவர்கள் செப்பேடுகளை நாம் ஆராய்வுழி, சோழ நாட்டையும் அவர்களே கைக் கொண்டு ஆண்டு வந்தனர் என்பதை ஊகிக்கலாம்.

அத்துடன் தமிழ் நாட்டை அக்காலத்தில் களப்பிரர் என்ற ஒரு சாதியினர் வென்று தமிழரசர்களனைவரையும் தங்கீழ்ப்படுத்தி ஆளத் தொடங்கினர் எனவும் அறிகிறோம். எனினும் சோழர்கள் அடியோடு நாட்டை இழந்து ஒழிந்து விடவில்லை. இவர்கள் தமது வலிமை பலபாலும் குன்றிவிடவே, பல்லவர் கீழ்ச் சிற்றரசர்களாக இருந்து காலங்கழித்து

வந்தனர். இவர்களில் ஒரு வகுப்பினர், வடக்கே கடப்பை, கர்நூல் ஜில்லாக்களுக்குச் சென்று, அங்கு ஒரு சிறிய நாட்டைப் படைத்துக்கொண்டு, 'தெலுங்கு சோடர்' என்ற பட்டப் பெயர் பூண்டு ஆண்டு வந்தனர் எனச் சாசனங்கள் வாயிலாக அறியலாம்.

## 2. சளுக்கர்களின் வரலாறு

இவ்வமயத்தே, சோழ நாட்டின் வடமேற்கே சளுக்கர் என்ற ஒரு வமிசத்தினர் ஆண்டு வந்தனர். இச்சளுக்கர்கள் வடதேசத்திலிருந்து தெற்கு நோக்கி வந்தவர் என்பது திண்ணமாக விளங்குகிறது.[1] இவர்கள் ராஜ்யம், துங்கபத்திரை தொடங்கி வடக்கே நருமதை நதி வரையில் பரந்து விளங்கியது. இந்நாட்டுக்கு, நருமதையைக் கடந்து உள்ள வாதாபி (Badami in Nizam's State) என்ற ஊர் தலைநகராகும். இம்மரபின் முதல் முதல் கீர்த்தி பெற்று விளங்கியவன் சத்தியாசிரய ஸ்ரீ புலகேசி வல்லப மகாராஜன் (கி. பி. 550-602). இவன் பேரனுகிய இரண்டாம் புலகேசியே இம்மரபில் சிறந்தோங்கித் திகழ்ந்தவன். இவன் கி. பி. 609 முதல் 642 வரையில் அரசாண்டான். இவன் காலத்தில் வடநாட்டில் ஸ்ரீ ஹர்ஷர் என்பாரும், தென்னுட்டில் பல்லவர்களுள் தலைசிறந்த மன்னனுன நரசிம்மவர்மனும் ஆண்டு வந்தனர். இவர்கள் இருவரையும் இரண்டாம் புலகேசி

---

[1] சளுக்கிய விக்கிரமாதித்திய சரித்திரம், பக்கம் 4.

போரில் வென்று தன்கீழ்ப்படுத்தி ஆண்டுவந்தான். இக்காலத்தில் (கி. பி. 638-ல்) சீன தேசத்து யாத்திரிகரான யுவான் ச்வாங் (Yuan chwang) என்பவர் இந்தியாவைச் சுற்றிப்பிரயாணம் செய்தார். மேற்கூறிய அரசர்களது ஒவ்வொரு தலைநகரிலும் இந்த யாத்திரிகர் தங்கி, அங்கங்குத்தாம் கண்டவற்றைக் குறித்து வைத்துள்ளார். வடஇந்தியாவில் கன்யாகுப்ஜத்தை இராஜதானியாகக் கொண்டு ஏகசக்ராதிபதியாக விளங்கிய சீலாதித்தன் என்னும் ஹர்ஷவர்த்தனனைத் தென்னாட்டிற்கு வரவொட்டாமல் புலகேசி தடுத்துவிட்டான். பின்னும் இரண்டாம் புலகேசியைப் பற்றி அவர் வருமாறு கூறுகிறார், "அவன் க்ஷத்திரிய வமிசத்தினன். அவன் பெயர் புலகேசி. அவன் மிக்க கல்விமான். தயாளு. குடிகளும், அவன்பால் மிக்க ராஜபக்தி வாய்ந்தவராய் விளங்கினர். அவன் வீரம் நிரம்பிய பெருஞ் சேனையை வைத்துள்ளான். அவன் தனது சதுரங்கப் படைவலியால் அருகிலுள்ள அரசர்களை எள்ளி வந்தான். அவன் புகழ் பாரசீகத்துக்கும் பரவி இருந்தது. பாரசீக மன்னனும் புலகேசியின் தர்ப்பாருக்குத் தூதனை விடுத்தான்."[1]

இப்புலகேசியின் காலத்திலேயே இவன் தம்பியாகிய குப்ஜ விஷ்ணுவர்த்தனன், கோதாவரி, கிருஷ்ண நதி இரண்டுக்கும் இடையிலுள்ள வேங்கி நாட்டின்மேற் கி. பி. 642-ல் படை எடுத்துச் சென்று அதனை ஜயித்துக் கீழைச் சளுக்கிய நாடு ஒன்றை ஏற்

[1] Mysore Gazaeer. Vol. II, Part II, Pages 708-10.

படுத்தினன்.[1] இதை ஆண்ட அரசர்கள் கீழைச்சளுக்க மன்னர்கள் என்று கூறப்பெறுவர். மற்றைய இவர் வமிசத்தினரை மேலைச் சளுக்க மன்னர் என்ப. இவர்கள் சந்திர வமிசத்தினர் என்றும், இவர் கொடியும் இலச்சினையும் பன்றி என்றும், கல்வெட்டுக்கள் கூறும்.

## 3. ஆதித்தனும்—பராந்தகனும்

இவ்வண்ணம் பல்லவர்களும் சளுக்கர்களும் மேனிலை எய்தி அரசு செலுத்தி வருங்கால், சோழ பாண்டியர்கள் தாழ்நிலையுற்றுச் சிற்றரசர்களாய் வாழ்ந்து வந்தனர். பின் எட்டாம் நூற்றாண்டின் இறுதியில் பல்லவர் செல்வாக்குக் குறையத் தலைப்பட்டது. அப்போழ்து முதலில் பாண்டியரே தலை நிமிர்த்தித் தமது ஆட்சியைப் பரப்ப எண்ணினவர். பாண்டியன் நெடுஞ்செழியன் என்பான் கி. பி. 770-ல், பண்டு தான் இழந்த சில நாடுகளைக் கைப்பற்றிச் சிறிது சிறப்புடன் தெற்கே ஆளத்தொடங்கினன். இதற்கு எண்பது ஆண்டுகளுக்குப் பின்னர் அதாவது கி. பி. 850-ல், சோழன் விஜயாலயன் என்பான் தனது பழைய நாடாகிய தஞ்சாவூரைக் கைக்கொண்டு, சோழர்குலம் மீண்டும் தழைத்தோங்குமாறு பெருஞ் சோழர் ஆட்சிக்கு அடிக்கோலினன். எனினும் சோழர் ஆதிக்கத்தை நிலைநாட்டியவன், இருபது ஆண்டுகளுக்குப் பின்வந்த இவன்மகன் ஆதித்த சோழனே ஆவான்.

[1] சளுக்கிய விக்கிரமாதித்ய சரித்திரம். பக்கம் 5.

இறுதிப் பல்லவ அரசனுன நிருபதுங்கன் என்ற அபராஜிதனைத் திருப்புறம்பியம், அரசூர், வேம்பில் முதலிய இடங்களில் ஆதித்தன் தோற்கடித்து, அவன் நாட்டைக் கைப்பற்றினுன் எனத் திருவாலங் காட்டுச் செப்பேடுகள் கூறும்.[1] இத்துடன் பல்லவர் ஆட்சி முடிவெய்தியது. இந்த ஆதித்தன் காவேரி நதிக்கரையில் பல பெரிய சிவாலயங்களைக் கட்டினுன் என்று அன்பில் சாசனங்கள் தெரிவிக்கின்றன. இவனுக்குக் 'கோதண்ட ராமன்' என்ற பெயரும் வழங்கி வந்தது என்றும்,[2] இவன் தொண்டை மண்டலத்தைக் கைப்பற்றித் தன் நாட்டை மேற்கே இரட்டர்கள் நாடு வரையில் பரப்பினதாகவும், கல்வெட்டுக்கள் மூலம் அறியலாம்.[3] ஆதித்தன் ஆட்சியில் 23-வது ஆண்டில் பிறந்த ஒரு சாசனத்தால், இவன் ஒரு பல்லவ மன்னன் பெண்ணை மணந்ததாக உணரலாம். இச் செய்தியைக் கொங்குதேச ராஜாக்கள் சரிதமும் உறுதிப் படுத்துகிறது. பின் இவன் கொங்கு நாட்டையும் வென்ருன். 36 வருஷங்கள் ஆண்டு கடைசியில் காளஹஸ்திரி நகரில் இறந்தான். இவனை அடக்கஞ் செய்த இடத்தில் இவன் மகன் பராந்தகன் ஒரு சிரிய கோயில் கட்டி அதற்கு 'ஆதித்யேசுவரம்'

---

[1] முதல் இராஜேந்திர சோழனின் திருவாலங் காட்டுச் செப்பேடுகள். S. I. I. Vol. III, No. 205. கன்னியாகுமரிச் சாசனங் களும் கூறும்.

[2] கன்னியா குமரிச் சாசனம்.

[3] தில்லை ஸ்தானம் சாசனம்,

என்றும் 'கோதண்ட ராமேசுவரம்' எனவும் பெயரிட்டதாகத் தெரிகிறது.

இவன் மகன் பராந்தகன் என்பான் ஒரு பெரிய வீரன். இவன் பட்டமெய்தியதும், மதுரையை யாண்டுவந்த இராஜசிம்ம பரகேசரியை வென்று, பின் ஈழ மண்டலத்தை யாண்டுவந்த ஐந்தாம் காசியபனையும் கீழ்ப்படுத்தி 'மதுரையும் ஈழமுங் கொண்ட பரகேச்ரி' எனப் பெயர் புனைந்தான். இவன் கேரளராஜன் மகளை மணந்தான். அவளே பட்டத்தரசி. அவளன்றி இன்னும் பல காதல் கிழத்திகளும் இவனுக்குண்டு. இவன் கான்முளையான இராஜாதித்தன், இவன் பன்னியருள் கோக்கிழானடிகள் என்பவளுக்குப் பிறந்தவன்.[1] இராஜாதித்தனைத் தவிர இவனுக்குக் கண்ட ராதித்தன், அரிஞ்சயன், கோதண்டராமன் என்ற மூன்று குமாரரும் இருந்தனர். இவன் சுமார் 40 ஆண்டுகள் ஆட்சிபுரிந்து, தன் நாட்டைப் பெரிதும் பரப்பி, கி. பி. 953-ல் காலஞ் சென்ருன்.

## 4. கி. பி. 953-985-க்கு இடையிலாண்ட மன்னர்கள்

பராந்தகன் இறுதிக் காலத்திலேயே தன் மகன் இராஜாதித்தனுக்கு முடிசூட்டினன். இம் மன்னன் ஆட்சியில் இரண்டாம் ஆண்டு, துங்கபத்திரை நதிக்கரையிலுள்ள நாட்டையாண்ட இராஷ்டிரகூட அரசன் கிருஷ்ணன் என்ற கன்னர தேவன்,

[1] Ep. Indica. Vol. VII, Page 133.

இவன் மீது படை எடுத்துவந்து, தக்கோலம்[1] என்ற ஊரில் யுத்தம் செய்து தோற்றோடினான்.[2] வென்ற மன்னனும் பின் பல காலம் உயிருடனில்லை. அக் கன்னர தேவன் உடன் பிறந்தாள் கணவனான மேலைக்கங்க அரசன் இரண்டாவது பூதுகன் அல்லது பூதராஜன் என்பவனால் இவன் வஞ்சிக்கப்பட்டு உயிர் துறந்தான் என்ப. இவனுடன் தக்கோலப் போருக்கு உதவி செய்யச் சென்ற சிற்றரசர் ஒவ்வொருவரும், இவன் முன்னரே கட்டிய திருநாவலூரிலுள்ள 'இராஜாதித்தேசுவரம்' என்னும் கோவிலில் இவன் பெயரால் பல திருநந்தா விளக்குகள் வைத்துள்ளனர்.

இராஜாதித்தன் இறந்த பின், சோழ ராஜ்யம் மேற்கூறிய கன்னர தேவன் வயப்பட்டதாகவே, 'கச்சியும் தஞ்சையுங் கொண்ட கன்னர தேவர்க்கு யாண்டு' என்று தொடங்கும் கல்வெட்டுக்களைச்சோழ நாட்டின் வடபாகங்களில் பலவிடங்களிற் காணலாம். இவை யொழிய எஞ்சிய சோணாட்டின் சிலபாகங்களைக் கண்டராதித்யன், அரிஞ்சயன், இரண்டாம் பராந்தகன், இரண்டாம் ஆதித்யன், மதுராந்தகன் ஆகிய ஐந்து சோழ அரசர்கள் முறையே ஆண்டதாகத் திருவாலங்காட்டுச் செப்பேட்டினாலும், லீடன் பட்டயங்களாலும் அறியலாம். அவர்கள் உறவு முறை வருமாறு.

---

1 அரக்கோணம் ஜங்ஷனுக்கு அருகே ஆறு மைலில் உள்ள ஓர் ஊர்.

2 Ep. Indica. Vol. VII, Page 495.

பராந்தகன்

இராஜாதித்யன் (முக்கோக்கிழான் மகன்.)
கண்டராதித்யன்
அரிஞ்சயன் (கேரளநாட்டு மனைவியின் மகன்.)

மதுராந்தக உத்தம பரகேசரி

சுந்தர பராந்தகன்

ஆதித்யன் II
ராஜராஜன் I

ராஜாதித்யனுக்குப் பின் அவன் தம்பி கண்டராதித்யன் சிம்மாசன மேறினன். இவன் காலத்தில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகள் ஒன்றும் இல்லை. இவன் அறுபத்து மூன்று நாயன்மாருள் ஒருவனாகத் திகழ்கிறான். இதனால் இவன் அரசனே யாயினும் சிறந்த சிவ பக்தன் என்பது தெற்றெனெ விளங்கும். இவன் மனைவி செம்பியன் மாதேவியார். அன்னாளும் சிவபெருமான் மீது எல்லையற்ற மால் பூண்டவள். இவள் செய்த சிவத் திருப்பணிகளும், விட்ட நிவந்தங்களும் நமது நாட்டுக் கோயில்களில் இன்றும் உள்ளன. இவன் பெயரால் கண்டராதித்த சதுர்வேதி மங்கலம் என்னும் ஓர் ஊரும், சோழ நாட்டில் உள்ளது. இவனுடையவும், இவன் மனைவியுடையவும் திரு உருவங்களைக் கோனேரி ராஜபுரம் சிவாலயத்தில் இன்றும் நாம் காணலாம். இவன் நீண்டகாலம் ஆளவில்லை.

இவன் இறந்த பின் இவன் மைந்தன் இளையனயிருந்தமையால், இவன் தம்பி அரிஞ்சயன் என்பான் பட்டம் எய்தினன். முன் கன்னர தேவனல்

இழந்த தொண்டை மண்டலத்தை மீண்டும் வெல்ல அரிஞ்சயன் படையெடுத்துச் சென்றான். ஆற்றூர்[1] என்னும் தலத்தில் இரு திறத்தினருக்கும் கடும்போர் நிகழ்ந்தது. அப் போரில் அரிஞ்சயன் இறந்து விட்டான். இவனுக்கு, இராஜராஜன்மேல்பாடி என்ற இடத்தில் ஒரு பள்ளிப்படையும் உள்ளது.[2]

இவனுக்குப்பின் இவன் மகன் சுந்தர சோழன் என்பான், இரண்டாம் பராந்தகன் என்ற பட்டத்துடன் அரசெய்தினன். சுந்தர சோழன் தனது மகன் இரண்டாம் ஆதித்யனுடன் சேர்ந்தே ஆட்சி புரிந்தான். அக் காலத்தில் பாண்டி மண்டலத்தை வீரபாண்டியன் என்பான் சிறப்பாக ஆண்டு வந்தான். அப்பாண்டியன் சோழர்களின் எளிமையைக் கண்டு, அவர்மீது படையெடுத்து வந்தபோது, சேவூர் என்ற இடத்தில் பெரும்போர் நிகழ, அதில் தோல்வியுற்றான். வென்ற சோழன் 'மதுராந்தகன்' என்றும் 'பாண்டியனைச் சுரம் இறக்கின சோழன்' எனவும் பட்டம் பெற்றான்.[3] இவன்மகன் ஆதித்தனுக்கும் 'வீரபாண்டியனைத் தலை கொண்டவன்' என்ற பட்டம் இருந்ததாலும் அறியலாம். சுந்தர சோழன் பின்பு இலங்கையின் மீது படை எடுத்துச் சென்ற காலத்தில் உயிர்நீத்தான்.[4]

வடக்கே கன்னர தேவன் கி. பி. 965 வரையில் ஆண்டு வந்தான். ஆதித்தன் II அவன் மேல் படை

---

1 செங்கல்பட்டு ஜில்லாவில் ஒரு கிராமம். 2 S. I. I. III.

3 லீடன் பட்டயங்கள், பக்கம் 17

4 302 of 1900. கன்னியாகுமரிக் கல்வெட்டு.

கொண்டு எதிர்த்துத் தொண்டை மண்டலத்தைக் கைப்பற்றிப் பார்த்திவேந்திர வர்மன் என்னும் பட்டப் பெயருடன் சோணாட்டுக்கு முடிசூட்டவும் பெற்றான். இவன் முடிபெறவே, இவனுடைய தாயாதி உத்தம சோழன், பகைமையால் சூழ்ச்சி செய்து கலகம் விளைத்து, வீரநாராயண சதுர்வேதி மங்கலம் என்னும் ஊரில் இவனைக் கொன்று விட்டான்.[1] சுந்தர சோழனுக்குப் 'பொன் மாளிகைத் துஞ்சிய தேவன்' எனப் பட்டப் பெயர்வழங்குகிறது. இவன் மனைவி வானவன் மாதேவியும் கணவனுடன் சககமனஞ் செய்தாள்.[2] இவன் இறந்த மிகச் சீக்கிரத்தில் இவன் மகனும் கொலை யுண்டான்.

இக்காலத்தில் நாட்டில் அரசுரிமையைப்பற்றிச் சுந்தரன் மகனாகிய இராஜராஜனுக்கும், அவன் பங்காளியாகிய உத்தம சோழனுக்கும் முரண்பாடுநிகழ்ந்தது. குடிகள் இராஜராஜனே அரியணை யெய்த வேண்டுமென விழைந்தனர். ஆயினும் சிற்றப்பனுக்கு அரசுரிமையின் மீதுள்ள வேணவாத் தீரும் வரைத்தான் அவன் அரசாட்சி செய்ய மறுத்ததாக, இராஜேந்திர தேவருடைய திருவாலங்காட்டுச் செப்பேடுகள் கூறும். ஆகவே, உத்தமசோழன் சிம்மாசன மேறிப் பதினறு ஆண்டுகள் ஆண்டு வந்தான். இக்காலத்தில் இராஜராஜன் இளவரசனுகை முடிசூட்டப்பெற்று இருந்தான். உத்தம சோழன் சாசனங்கள் இரண்டில் இவனுக்குப் பரகேசரி

1 577 of 1920.

2 திருவாலங்காட்டுச் செப்பேடுகள்.

என்ற பட்டம் உண்டு எனவும், அவை கலி 4083 (981-2)ல் பொறிக்கப்பட்டன எனவும் தெளிவாகக் கூறுதலால், இவன் ஆண்ட காலம் திட்டமாக விளங்குகிறது. இவன் இராஜராஜனுக்கு முன் ஆண்டவன் என்பதும் தெளிவு.

## 5. முதல் இராஜ ராஜன்

உத்தம சோழனுக்குப் பிறகு, அருண்மொழித் தேவன் என்ற இயற்பெயருள்ள இராஜராஜன், 25-6-985-ல் அரசு கட்டில் ஏறினன். இவன் சுமார் 29 ஆண்டுகள் சிறப்புடன் ஆண்டான். சோழவமிசத்தரசர்கள் இராஜகேசரி என்றும், பரகேசரி என்றும் மாறி மாறிப் பட்டம் பூண்பது இயற்கை. இதனல் பாட்டன் தரித்த பட்டத்தையே பேரன் தரிப்பான் என்பது போதரும். இப்பாட்டன் பெயர்களுள், ஒரே பட்டப் பெயர் பெற்ற பல அரசர்கள் வருவாராயின், அவர்களுள் முன்பின் இருந்த முறைமையையும், இடையில் யாரேனும் வேறு பட்டப் பெயர் பெற்றவர் இருந்தனரோ என்பதையும் ஊகித்துணரக் கூடும். அங்ஙனமே நமது இராஜராஜன் இராஜகேசரி என்ற பட்டப் பெயர் பூண்டு விளங்கினன். இவன் மெய்க்கீர்த்தியில் ஒன்று வருமாறு.

[1] "திருமகள் போலப் பெருநிலச் செல்வியுந்
தனக்கே யுரிமை பூண்டமை மனக்கொளக்
காந்தளூர்ச் சாலை கலமறுத் தருளி
வேங்கை நாடுங் கங்க பாடியும்

குடமலை நாடுங் கொல்லமும் கலிங்கமு
முரட்டொழிற் சிங்களர் ஈழ மண்டலமும்
இரட்ட பாடி ஏழரை இலக்கமும்
முன்னீர்ப் பழந்தீவு பன்னீ ராயிரமுந்
திண்டிறல் வென்றித் தண்டாற் கொண்டதன்
எழில்வளர் ஊழியு ளெல்லா யாண்டுந்
தொழுதக விளங்கும் யாண்டே செழியரைத்
தேசுகொள் கோஇராஜ கேசரி வர்மனான
உடையார் ஸ்ரீராஜராஜ தேவர்க்கு யாண்டு."

இதனால் இராஜராஜன் கங்கபாடி, குடமலைநாடு, கொல்லம், கலிங்கம், ஈழமண்டலம், இரட்டபாடி இவைகளைக் கைப்பற்றி அடக்கி ஆண்டான் என்பது புலனும். இவன் பாண்டியன் அமர புஜங்கனை வென்றும், கேரளனைக் காந்தளூர்ச் சாலை என்னுமிடத்தில் கப்பற்படையுடன் அழித்தருளியும், தன் வீரத்தை விளக்கினான். இவன் பெற்ற வெற்றிகள் பல, இவன்மகன் இராஜேந்திரன் என்போனாலேயே எய்தப் பெற்றன. இராஜராஜன் முடிசூட்டிக் கொண்ட காலத்தில் இவன் மகன் தக்க வயது நிரம்பப் பெற்றவனாதலால் அவனும் இளவரசு பட்டமெய்தித் தந்தையின் ஆட்சியில் கலந்து கொண்டவனாதல் கருத்ததகும். இராஜராஜன் பஞ்சவன், மாராயன், மாதண்ட நாய்கன் முதலிய பட்டங்கள் தரித்துள்ளான்.

இராஜராஜன், ஈழ மண்டலத்தை யாண்ட ஐந்தாம் மஹிந்தன் என்பவனைப் பின்னும் தெற்கே துரத்திவிட்டு அந்நாட்டைப் பிடித்து அதற்கு, 'மும்

மடி சோழ மண்டலம்' எனப் பெயர் மாற்றம் புனைந்து, அதன் தலைநகரையும் பொலன்னருவா என்னும் இடத்துக்கு மாற்றி விட்டான்.[1] இது மேற் காட்டிய சாசனத்தாலும் தெற்றெனப் புலனும்.

இவன் மேலைச் சளுக்கிய அரசனை சத்தி யாசிரயன் என்பவனையும் புறங்காட்டச் செய்து துரத்தினன் என்பதும் அறியக் கிடக்கிறது. கீழைச் சளுக்கர் வசம் உள்ள வேங்கி நாட்டு அரச குமார ருள் அரசுரிமையைக் குறித்து வழக்கு நிகழ, அதில் ஒரு சார்பினர் சோழன் இராஜ ராஜன் உதவியை நாடினர். அவர் தலைவன் சக்திவர்மன் என்பான் வேண்டுகோட்கிணங்கி, இராஜராஜன் வேங்கி நாட் டின் மீது படைதிரட்டிச் சென்று, அதை வென்று சக்திவர்மனுக்கு முடிசூட்டிவிட்டு, அவன் தம்பியான விமலாதித்தனுக்குத் தன் பெண் குந்தவை என்பா ளையும் மணமுடித்துப்பின் தன் நாட்டுக்குத் திரும்பி னன். அக்காலத்தில் இவன் நாடு தற்காலச் சென்னை இராஜதானியில் முக்காற் பங்கு பரப்புடையதா யிருந்தது.

இங்ஙனம் பல வெற்றிகளைப் பெற்ற இராஜ ராஜன் 31-ஆண்டுகள் அரசாண்டான். இவனே நம்பியாண்டார் நம்பியைக்கொண்டு, தேவாரங்களைத் திருமுறைகளாக வகுத்தவன். இவன் 'திருமுறை கண்ட சோழன்' எனவும் பட்டம் சூட்டப்பெற்றான். தஞ்சாவூரிலுள்ள, 'இராஜ ராஜேசுவரம்' எனவும் 'பிரகதீசுவரராலயம்'எனவும் சிறப்புற்று விளங்கும்

[1] Archæological Survey of Ceylon-1906, Page 27.

கோயிலைக் கட்டுவித்தவன் இவனே. இவனுக்குத் தந்திசக்திவிடங்கி, திரைலோக்கிய மாதேவி, பஞ்வன் மாதேவி, அபிமான வல்லி, சோழமாதேவி என மனைவியர் ஐவருண்டு. தன் ஆட்சியில் 29-ம் ஆண்டில் இவன் துலாபாரம் புகுந்தான். இவன் கற்புடைப்பன்னி தந்திசக்திவிடங்கி இரண்ய கர்ப்பமும் புகுந்தாள்[1]. இத்துணைச் சிறப்புடன் ஆண்டு, தன் மகன் இராஜேந்திரனுக்கு கி. பி. 1012-ல் முடிசூட்டிவிட்டுப் பின் இரண்டு ஆண்டுகள் கழித்து இவன் பரலோக மெய்தினன் எனத்தெரிகிறது.

## 6. இராஜேந்திரன்

கோப்பரகேசரி இராஜேந்திரன் முடி சூட்டப் பெற்ற பின்னர் இரண்டு அரிய செயல்களை ஆற்றினன். அவை, வட திசைச் சென்று வெற்றி கொண்டு கங்கை கொணர்ந்ததும், கடல் கடந்து கடாரம் கொண்டதுமாகும்.

இவன் கங்கா விஜயம் புரிந்த செயல் கி. பி. 1023-க்கு முந்தியே நடந்திருக்க வேண்டும். இப்படை எடுப்பின் போது இவன் முதலில் சக்கரக்

---

[1] திருவிசலூர்ச் சாசனம் கூறுமாறு:—"கோராஜகேசரி வர்மரான ஸ்ரீ. ராஜ ராஜ சோழதேவர்க்கு யாண்டு 29-வது × × நம்முடைய சக்கரவர்த்தி உடையார் ஸ்ரீ ராஜ ராஜ தேவர் இவ்வூர் திருவிசலூர் மகாதேவர் ஸ்ரீ கோயிலிலே துலாபாரம் புக்கருளின அன்று, நம்பிராட்டியார் தந்தி சக்தி விடங்கியார் இரண்யகர்ப்பம் புக்கருளி இத்திரு விசலூர் மகாதேவர்க்கு அக்காரடலை அமுதுக்கு வேண்டும் நிவந்தங்களுக்காக வைச்சகாசு 4508"

கோட்டத்தையும்[1], அடுத்து ஒட்டர விஷயத்தையும்[2], பின் தண்ட புத்தியையும்[3], அப்புறம் லாட தேசத்தையும்[4], இறுதியில் வங்காள தேசத்தையும் வென்று கீழ்ப்படுத்தி விட்டுக் கங்கைக் கரையை அடைந்தான். ஆனால் வென்ற சோழரது படையே கங்கை நீரை எடுத்துக்கொண்டு சோழ நாட்டுக்குத் திரும்பவில்லை. தோல்வியுற்ற அரசர்கள் கங்கை நீரைத் தமது தலை மிசைத் தாங்கிச் சோழ நாட்டுக்கு எடுத்துப் போந்தனர். இது போழ்து இராஜேந்திரன் திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் பெரிய ஒரு ஏரி வெட்டுவித்துக் கங்கை நீரை அதில் ஊற்றி, அந்த ஏரிக்குச் 'சோழ கங்கம்' எனப் பெயரிட்டான்[5]. தற்போது இதனை அவ்வூரார் 'பொன்னேரி' என வழங்குகின்றனர். தான் பெற்ற வெற்றிக்கு அறிகுறியாக இதன் அருகே 'கங்கை கொண்ட சோழபுரம்' என்ற ஓர் நகரங் கட்டி அதில் 'கங்கைகொண்ட சோழீசுவரம்' என்னும் ஓர் ஆலயமும் எடுப்பித்தான். இவ்வூர் பிற்காலச் சோழர் பலருக்கும் தலைநகராகத் திகழ்ந்தது. இவ்வூருக்கு வைணவ ஆசாரியருள் தலையாயவரான ஸ்ரீமந் நாதமுனிகள் என்ற ஒரு மகா யோகி

---

[1] S. I. I. Vol. III, No. 68. இது சித்திரகூடம் என்று தற்போது வழங்கும், இந்திராவதி ஆற்றின் தென் கரையிலுள்ள ஓர் ஊர். Chitrakut in Baster State in Central Provinces.

[2] South Kosala.

[3] Modern Bihar.

[4] A portion of Bengal.

[5] See கன்னியாகுமரி inscription & திருவாலங்காடு plates. S. I. I. Vol. III, No. 205 & Epi Indica Vol. XVIII, No. 4.

யார், அடிக்கடி போய்க்கொண்டிருந்து, கடைசியில் இவ்வூரிலேயே நித்ய விபூதியை எய்தினர் என்ப[1]. இவ்வூர், கருவூர்த் தேவரால் திருவிசைப் பாவிலும் பாடப் பெற்றுள்ளது[2]. இப் படையெடுப்புத் தீர்த்த யாத்திரையாய்த் தொடங்கித் திக்கு விஜயமாக முடிந்தது எனின் மிகையாகாது.

இவன் கடாரங் கொண்டது, தன் ஆட்சியின் 13-வது ஆண்டு கல்வெட்டுக்களில் பொறிக்கப் பெற்றுள்ளதால் அதற்கு முன்னரே, அதாவது கி. பி. 1025-க்கு முன்பே இது நிகழ்ந்ததாதல் கொள்ளத் தகும். இவன் கடாரத்தரசனைப் பிடித்து, அவன் யானை, நிதி, வித்தியாதரத் தோரணம் முதலியவற்றைப் பறித்து, அவன் நாட்டையுங் கைக்கொண்டான் என இவன் மெய்க்கீர்த்திகள் கூறும்[3]. இப் படை எடுப்புக்குக் காரணம் தெளிவாய் அறிய முடியவில்லை.

இராஜேந்திரனுக்கு, திரிபுவனமாதேவியார், முக்கோக் கிழானடிகள், பஞ்சவன்மாதேவியார், வீரமாதேவியார் ஆகிய நால்வர் மனைவியர் இருந்தனர் எனக் கல்வெட்டுக்களால் உணரலாம். இவனுக்குப் பல மக்கள் இருப்பினும் இவற்குப் பின் முறையாகப் பட்டம் எய்தினோர், இராஜாதி ராஜன், இராஜேந்திர தேவன், வீர ராஜேந்திரன் ஆகிய

---

1 பின்பழகிய ஜீயர் குருபரம்பரா பிரபாவம்.

2 ‘ அன்னமாய் ’ என்று தொடங்கும் பதிகம்.

3 கடாரம் என்பது மலேயா தீபகற்பமும், சுமத்திரா, ஜாவா முதலிய தீவுகளுமாகும்.

மூவரேயாவர். இராஜேந்திரன், தஞ்சைக் கோவிலுக்குப் பல நிவந்தங்கள் அமைத்துளான். இவன் சைவத்தில் மிகப் பற்றுள்ளவனுயினும், பிற மதங்களை வெறுத்தானல்லன். இவன் காலத்தில் நாகப்பட்டினத்தில் "சூடாமணிவர்ம விஹாரம்" என்ற ஒரு பௌத்த விஹாரம் கட்டி, அதன் பரிபாலனத்துக்கு ஆனைமங்கலம் என்னும் கிராமத்தைப் பள்ளிச் சந்தமாகவும் விடுத்தான்[1]. இவன் சீன தேசத்துக்கும் தன் பிரதிநிதிகளை அனுப்பினுன் என்று சீன நூல்கள் வாயிலாக அறிகிறோம். இராஜேந்திரன் தன் பெயரால் 'இராஜேந்திர சோழக்காசு' என்ற நாணயங்களையும் அச்சிட்டுள்ளான்.

இராஜேந்திரன் தனது ஆட்சியின் முற்கூற்றிலேயே தன் மகன் இராஜாதி ராஜனுக்கு முடி சூட்டி வைத்து, அதுமுதல் சுமார் 25 ஆண்டுகள் இருவரும் ஒருமிக்கக் கலந்தே ஆண்டு வந்தனர்[2]. அதே காலத்தில் மற்றொரு மகனைப் பாண்டி நாட்டுக்குப் பிரதிநிதியாக அனுப்பி ஆளுமாறு செய்தான். அவன் பாண்டி நாட்டை ஆண்டதால் ஜடாவர்மன் சுந்தரசோழபாண்டியன் என்று பட்டம் பெற்றுன்.

இங்ஙனம் அரச குமாரர்களை மண்டலாதி பதிகளாக நியமிப்பது, இராஜேந்திரன் ஏற்படுத்திய புதியதொரு நெறியாகும். இந்நெறியால் பல நலங்க

---

1 இத்தான பத்திரம் லீடன் பட்டயம் (Leyden Grant என வழங்குகிறது.

2 75 of 1895 S. I. I. Vol. V, 633.

ளுண்டு. பின்னல் அரசுரிமை எய்த இருக்கும் அரசிளங் குமரர்கள், அச்சுமையைத் தாங்குதற்கு அரசாங்க விஷயங்களில் முன்னரே போதிய பயிற்சிபெற வேண்டியது இன்றியமையாததன்றோ? இம்மண்டலாதிபதிப் பதவி அத்தகைய பயிற்சியை அளித்தது. அத்துடன் அரசகுமாரர் பலர் குழுமி ஓரிடத்தில் இருப்பாராயின், துன்மந்திரிகளின் கூற்றுக்களாலும், ஒருவர்மீது மற்றொருவருக்குத் தோன்றும் பொச்சாப்பாலும், அரசாட்சிக்கு இடையூறாகப் பல சூழ்ச்சிகள் செய்து, ஆளும் அரசனுக்கு இன்னல் இழைக்கக்கூடு மன்றோ? இன்னணம் இவர்கள் வேற்று நாடுகளுக்குத் தனித்தனியாய்ப் போக்கப்படுவதால், இச்சூழ்ச்சிகள் வீழ்ச்சியுறுகின்றன. இராஜ்யத்தின் எல்லாப் பாகங்களும் சரிவரப் பரிபாலனமுற்றுக் கட்டுத் தளராது, கோப்புக்குலையாது செவ்வனே ஆட்சி அடைகின்றன. ஆயின் இவ்வழக்கம், மொகலாய அரசர்கள் கைக்கொண்ட காலத்து மிக்க தீமையை விளைத்து, ஆளும் அரசனதுஉயிர்க்கு உலையாயிற்று என்பதைச் சரித்திரத்தில் காணலாம். எனினும் இது சோழர்களுக்கு நலமேபுரிந்தது. இம்முறையை இவனுக்குப் பின் வந்த சோழ அரசர்களும் கைப்பற்றி வந்தனர். இவன் தன் மகன் இராஜாதி ராஜனது ஆட்சியில் 26-ம் ஆண்டில் விண்ணுல கெய்தினன். அவ்வுழி இவன் தேவிகளுள் வீரமாதேவி என்பாள் உடன் கட்டை ஏறினள் எனத்தெரிகிறது.[1]

[1] No. 260 of 1915 S. I. I.

# 7. இராஜாதி ராஜன் முதலியோர்

இராஜாதி ராஜன் பட்டம் பெற்றதும், மானு பரணன், வீரகேரளன், சுந்தரபாண்டியன் என்ற பாண்டியர் மூவருடன் பொருது, தலையாயவனைத் தலைகொய்தும், இடையாயவனை யானையால் மிதிப் பித்தும், கடையாயவனை முல்லையூர் புக ஒல்லைத் துரத்தியும் பரிபவப் படுத்தினன் என இவன் மெய்க் கீர்த்தி கூறும்.

இவன் சளுக்கவேந்தனை முதல் ஆஹமவல்ல சோமீசுவரனுடன் (கி. பி. 1046 - 1068) போர் செய்து, கொள்ளிப்பாகை (Kulburga in Hyderabad State) என்னும் இடத்தைத் தீக்கிரையாக்கி விட்டுத் திரும்பினன். மீண்டுமொருமுறை இவனும் இவன் தம்பி இராஜேந்திரனும் குந்தளச் சளுக்கர்களுடன் போரியற்றுகையில், கொப்பம் என்னும் இடத்தில் நடந்த போரில் இராஜாதி ராஜன் கி. பி. 1052-ல் உயிரிழந்தான். இவனுக்கு ஜயங்கொண்ட சோழன் எனவும் பெயருண்டு.

பிறகு இவன் தம்பி இரண்டாம் இராஜேந்தி ரன் பட்டமெய்திச் சுமார் 12-ஆண்டுகள் ஆண்டான். இவனும் அரியணை ஏறிய நாள்தொட்டுச் சளுக்கியர்க ளுடன் போரிடநேர்ந்தது. இவன் பின்னுமொருகால் ஆஹமவல்லனை எதிர்த்துப் போர்புரிந்து, அவனை யும் அவன் தண்ட நாயகர்களையும் தோற்கடித்து, சத்ருபயங்கரம், கரபத்ரம், மூலபத்ரம் என்ற அவன் மூன்று பட்டத்து யானைகளையும் கைப்பற்றி, அவன்

இல்லக்கிழத்தியரான சத்தியவ்வை சாங்கப்பை என்பவர்களையும் அகப்படுத்திக் கொண்டு திரும்பினன். இவனை, 'ஆனைமேல் துஞ்சின பெருமாள்'[1] எனச் சாசனங்கள் கூறுவதால், இவனும் போர்க்களத்தே யானைமீது இவர்ந்து பொருகையிலே மடிந்திருக்க வேண்டும் என ஊகிக்கக் கிடக்கிறது.

இரண்டாம் இராஜேந்திரனுக்குப்பின் இவன் தம்பி வீர ராஜேந்திரன் பட்டமெய்தினன். முதல் இராஜ ராஜன் தொடங்கிய சளுக்கியப் போர் இன்னும் முடிவு பெற்றிலது. வீர ராஜேந்திரன், சளுக்கிய ஆஹமவல்லன் மகன் விக்கிரமாதித்தனைத் தூங்கபத்திரைக் கப்பால் துரத்திவிட்டு, அவன் மகன் இருகையன் மனைவி நாகலை என்பாளை மூக்கறுத்து மீண்டான். மற்றுமொருகால் கூடல் சங்கமம் என்னும் இடத்தில் இருதிறத்தினருக்கும் ஒரு பெருஞ் செருவிளைய, அதில் வீர ராஜேந்திரன் வெற்றி பெற்றுக் கம்பிலி என்னும் நகரைக் கொளுத்தி, அதனருகில் கரடிக்கல் என்னுமிடத்தே ஒரு வெற்றித் தூணமும் நிறுவி விட்டுத் திரும்பினன். இதன்பின் சளுக்கிய விக்கிரமாதித்தன் வீர சோழனைச் சரணமடைய, அவனுக்கு இரட்டபாடியைக் கொடுத்துத் தன் மகளையும் மணம் புரிவித்தான்.

முதல் இராஜ ராஜன் தன்மகள் குந்தவையை வேங்கி நாட்டரசன் விமலாதித்தனுக்கு மணஞ்செய்து கொடுத்தான் என முன்னமே கூறியுள்

---

[1] No. 9 of 1899.

ளோம். அவ்விமலாதித்தன் கி.பி. 1022-ல் மரிக்க, அவன் மகன் இராஜ நரேந்திரன் என்பான் முடி சூடினன். இந்த இராஜ நரேந்திரன் கங்கை கொண்ட சோழன் மகள் அம்மங்கை என்பவளை மணந்துகொண்டான். அவள் கருத்தரித்துப்பின் கருவுயிர்க்கத் தாய்வீடாகிய கங்கை கொண்ட சோழ புரத்துக்கு வந்திருக்கையில், கி. பி. 1043-ல் ஒரு ஆண்மகவை ஈன்றாள். அவனே வீரசோழனுக்குப் பிறகு இராஜேந்திரனது பெண் வயிற்றுப் பேரனாகி, சோழ நாட்டுக்கு உரிமை கொண்டாடி, முதல் குலோத்துங்கன் என்னும் பட்டப் பெயருடன் முடிசூடி அரசாண்டவனாவான்.

# 3. முதல் குலோத்துங்கனும் வேங்கி நாட்டுப் பிரதிநிதி விக்கிரம சோழனும்

---

## 1. வீரசோழன் வேங்கி நாட்டைப் பற்றல்

கீழைச் சளுக்க மன்னனை இராஜநரேந்திரன் வேங்கி நாட்டில் ஆளுகையில், மேலைச் சளுக்க நாட்டில் ஆறும் விக்கிரமாதித்தன் எனப் பட்டம்பெற்ற சளுக்க விக்கிரமாதித்தன் ஆண்டு வந்தான். சோழர்களுக்கும், சளுக்கர்களுக்கும் நெடுங் காலமாகப் பகைமை உண்டென்பது முன்னமே நன்கறிவோம். சளுக்கர்கள் அடிக்கடி சோழர்மீது படை எடுத்து வந்து அவர் நாட்டைக் கைப்பற்ற முயலுதலும், அம்முயற்சிகள் பயனற்றவையாய் முடிந்தமையும், முன்னமே கூறப்பெற்றுள்ளன. சளுக்கர்களுடைய பகைமையைப் போக்கி அவர் மாட்டு உறவு கொண்டாடுவான் கருதியே, சோழ அரசர்கள் தமது பெண்களைக் கீழைச் சளுக்கர்களுக்குக் கொடுத்து மணமுடிப்பது, முதல் இராஜராஜன் காலம் தொட்டு வழக்கமாயிற்று. இதுபற்றிக் கீழைச் சளுக்கர்கள், சோழர்களிடம் நேயம் பாராட்டி உதவினரே யன்றி, மேலைச் சளுக்கர்களுக்கு உதவி புரிந்திலர்.

இப்போது வேங்கி மன்னனை இராஜநரேந்திரன் இறந்ததை அறிந்த சளுக்க விக்கிரமாதித்

தன், மேலைச் சளுக்கர்களை அடக்கித் தன் பக்கல் இணைத்துக் கொள்ள எண்ணித் தன் தண்டநாயகனை சாமுண்டராயன் தலைமையின்கீழ் ஒரு படையை வேங்கி நாட்டுக்கு அனுப்பினன். இதை அறிந்த வீர ராஜேந்திரனும் ஒரு பெரும் படையோடு எதிர்த்துச் சென்றான். சென்றவன் அத் தண்ட நாயகனைக் கொன்று, மேலைச் சளுக்கப் படையையும் துரத்திவிட்டுத் தன் மருமகனை இராஜேந்திரனை வேங்கிக்கு அரசனாக முடிசூட்டிவிட்டுத் திரும்பினன். பின் சிலகாலம் சென்றதும் தனக்கு உடல் வலிமை குறைவதை உன்னி, இராஜேந்திரனை வேங்கியினின்றும் வருவித்துச் சோழமண்டலத்திலேயே தங்குமாறு செய்து, அவனுக்கு இளவரசு பட்டமும் முடித்தான்.

## 2. குலோத்துங்கன் முடிசூடல்

இங்ஙனம் இளவரசு பட்டமெய்திய இராஜேந்திரன் வடபாலுள்ள சக்கரக் கோட்ட மண்டலாதிபதியாகிய தாராவர்ஷன் என்பவனை அடக்கக் கருதியும், திக்கு விஜயம் செய்ய எண்ணியும், படை எடுத்து வடக்கு நோக்கிச் சென்றான். அங்கு வயிராகரம் என்ற ஊரிலுள்ள களிற்று நிரைகளைக் கைக்கொண்டு, பின் தாராவர்ஷனையும் பொருது திறலழித்துத் திறையிடுமாறு செய்தான். இவ்விதம் போர் செய்து வருகையில் தெற்கே சோணாட்டில் தன் மாமன் மரித்தான் என்ற செய்தி கிடைத்தது. இராஜேந்திரன் வடக்கிருந்து இங்குத் திரும்பி வரு

வதற்குள் உள்நாட்டில் பெருங் கலகமும் குழப்பமும் உண்டாயது. இதைச் சயங் கொண்டார்,

[1] 'மறையவர் வேள்வி குன்றி மனுநெறி யனைத்து மாறி
துறைகளோர் ஆறு மாறிச் சுருதியு முழக்க மோய்ந்தே'

'சாதிகள் ஒன்றோ டொன்று தலைதடுமாறி யாரும்
ஓதிய நெறியில் நில்லாது ஒழுக்கமு மறந்து போயே'

'ஒருவரை யொருவர் கைம்மிக்கு உம்பர்தம் கோயில் சாம்பி
அரிவையர் கற்புச் சோம்பி அரண்களும் அழிய வாங்கே'

என அழகுறப் புகன்றுளார். உடனே இராஜேந்திரன் விரைந்து வந்து, குழப்பத்தை ஒழித்து, அமைதி நிலவுமாறு செய்துவிட்டுச் சோழ வளநாட்டு அரசனைக் குலோத்துங்கன் என்ற பட்டத்துடன் கி. பி. 1070-ல் முடிசூட்டிக் கொண்டான். இப்பெயரேயன்றி இவனுக்கு அபயன், விசயதரன், சயதுங்கன், விருதராச பயங்கரன், உலகுய்ய வந்தான் முதலிய புனைபெயர்கள் பலஉண்டு. அவைகளைக் கல்வெட்டுக்களாலும் கலிங்கத்துப் பரணியாலும் அறியலாம்.

## 3. துங்கபத்திரைப் போர்

இவன் காலத்தில் நடந்த போர்கள் பலவாம். அவற்றுள் முதல் நிகழ்ந்தது, மேலைச் சளுக்க அரசன் ஆறும் விக்கிரமாதித்தனோடு கி. பி. 1076-ல் நடந்த முதல் துங்க பத்திரைப் போராகும். இக்கா

[1] கலிங்கத்துப் பரணி-அவதாரம். 27, 28, 29.

லத்தில் விக்கிரமாதித்தனுக்கும் அவன் தமயன் இரண்டாம் சோமேசுவரனுக்கும் ஒற்றுமையற்றிருக்கவே, சோமேசுவரன் குலோத்துங்கன் பக்கம் சேர்ந்து பொருதான். ஆயின் விக்கிரமாதித்தனுக்குப் பாண்டிய மன்னன் திரிபுவன மல்லனும், சளுக்கன் தம்பி ஜயசிம்மனும் துணைபுரிந்து நிற்க, அவன் துங்கபத்திரைக் கரையில் குலோத்துங்கனை எதிர்த்துப் பொருதான். இதில் சோமேசுவரன் தோல்வியுற்றுத் தன் தம்பி விக்கிரமாதித்தனால் சிறைக்கோட்பட்டுத் தன் இரட்ட மண்டல நாட்டையும் இழந்தான்.[1] இதில் குலோத்துங்கன் வெற்றியாதல் தோல்வியாதல் அடைந்ததாகத் தெரியவில்லை. இப்போரால் விக்கிரமாதித்தனுக்கு இரட்டபாடி ஏழரை இலக்கம் கிடைத்தது.

பிறகு குலோத்துங்கன் தன் ஆட்சியில் 11-ம் ஆண்டில் மீண்டும் விக்கிரமாதித்தனோடும் அவன் தம்பி ஜயசிம்மனோடும் போர் புரிந்தான். முதலில் கோலார் ஜில்லாவிலுள்ள நங்கிலி என்னுமிடத்தில் போர் நடந்தது. இதில் குலோத்துங்கன் வென்று, விக்கிரமாதித்தனையும் துங்கபத்திரை யாற்றுக்கப்பால் ஓட்டிவிட்டான்[2]. பின்னும் மணலூர், அளத்தி முதலிய இடங்களிலும் போர் நடந்து விக்கிரமாதித்தன் தோற்றோடினன். இறுதியில் மற்றுமொரு தரம் துங்கபத்திரைக் கரையில் போர் நிகழ்ந்தது.

---

[1] சளுக்கிய விக்கிரமாதித்தன் சரிதம், Page 34.
[2] Do Page 39.

அதிலும் விக்கிரமாதித்தனும் அவன் தம்பியும் தோற்று ஓடி ஒளிந்தனர்.

அப்பால் குலோத்துங்கன் பாண்டியர்களையும் வென்று அந்நாட்டின் பல பகுதிகளைக் கைப்பற்றி, ஆண்டு, வெற்றித் தூண்களையும் நிறுவினான். சேரர்களையும் தன் ஆட்சியில் 14-ம் ஆண்டில் விழிஞம்,கோட்டாறு என்ற இடங்களில் நடந்த சமரில்வென்று,காந்தளூர்ச் சாலையிலும் கப்பற் படையை இருமுறை அழித்துச் சேர அரசனைத் தன் கீழ்ச் சிற்றரசனுக்கிக் கொண்டான். 'கோட்டாறு' என்னுமிடத்தில் ஒரு 'நிலைப் படையையும்' ஏற்படுத்தினான்[1].

## 4. விக்கிரம சோழன் வேங்கிக்கு அரசப் பிரதிநிதியாதல்

வடக்கே வேங்கி நாட்டை ஆண்டு வந்த விஜயாதித்யன் என்பான் இறந்ததும், குலோத்துங்கன் தன் மகனை இராஜ ராஜ மும்மடி சோழன் என்பானை, கி. பி. 1076-ல் தனக்குப் பிரதிநிதியாக அதைப் பாலித்து வருமாறு அனுப்பினான். அவன் ஓராண்டு ஆண்டிருந்தான். அது வேற்று நாடானதால் அங்குத்தங்கவெறுப்புற்றுச் சோழ நாட்டுக்கே திரும்பி விட்டான். பின் அவன் தம்பி வீர சோழன் என்பானைக் குலோத்துங்கன் அனுப்ப, அவன் சுமார் 20 வருடங்கள் சோழப் பிரதிநிதியாகப் பரிபாலித்து வந்தான். அதன் பிறகு குலோத்துங்

---

[1] நிலைப் படை = Military Camp.

கன் தனது மற்றொரு மகனை விக்கிரம சோழனை 1096-ல், தன் ஆட்சியின் 26-ம் ஆண்டில் அரசப் பிரதிநிதியாக வேங்கி நாட்டுக்கு அனுப்பினான். விக்கிரமன் அன்றுதொட்டுப் பின் சோணாட்டுக்கு இளவரசு சூடும் வரை வேங்கியை ஆண்டுவந்தான்.

## 5. தெலுங்க வீமன் படை எழுச்சி

வேங்கி நாடென்பது விஜயவாடி (Bezwada) என்னும் ஊருக்கு அருகே, கிருஷ்ணை நதியும் கோதாவரி நதியும் கடலொடு கலக்கும் இடங்களுக்கு மத்தியிலுள்ள பாகமாகும். கோதாவரிக்கு வடக்கே மஹேந்திர மலை வரையிலுள்ள பாகம் தென் கலிங்கம் எனப்படும்[1]. வேங்கி நாட்டின் வடவெல்லையில் தெலுங்க வீமன் என்பான் ஒருவன் சிற்றரசனாய்ச் சோழப் பிரதிநிதிகளுக்கு உட்பட்டு இருந்துவந்தான். அதற்கு அருகிலுள்ள கொலனு (Modern Eliore) என்னும் நாட்டுக்குத் தலைவனாக ஒரு சிற்றரசனும் இருந்தான். அவர்கள் இருவரும் செறிந்த கேண்மை வாய்ந்தவர்கள். ஆதலால் அன்னோர் இருவரும் கூடி வேங்கியில் சோழர் ஆட்சியை ஒழிக்க அடிக்கடி சூழ்ச்சி செய்து வந்தனர்.

சளுக்க விக்கிரமாதித்தன் பன்முறையும் துங்கபத்திரையில் நிகழ்ந்த கடும் போரில் பெருந் தோல்வி எய்தி ஓடினான் அல்லவா? அத்துடன் சோழ அரசர்களுக்கும் சளுக்க மன்னர்களுக்கும் நெடுங்கால

---

[1] Cunningham's Ancient Geography, Page 391.

மாய்த் தீராப் பகை உண்டு என்றும் முன்னரே அறிவோம். தோற்ற விக்கிரமாதித்தன் இழந்த மானத்தைப் பெறுவதற்கு ஏற்ற உபாயங்களைச் சூழ்ந்து வந்தான். அதற்கு இத்தெலுங்க வீமன் எண்ணமானது நந்தும் துரும்பாக இருந்தது. ஆகவே அவர்களைத் தூண்டிவிட, அதனால் உள் நாட்டில் ஒரு கலகம் நிகழ்ந்தது. அது விக்கிரம சோழன் வேங்கி நாட்டுக்கு அரசப் பிரதிநிதியாக வந்த சமயத்திலாகும்.

## 6. விக்கிரமன் கலகத்தை அடக்கல்

இவ்வெழுச்சியை அடக்க விக்கிரம சோழன் படையைத் திரட்டிக் கொண்டு வடக்கு நோக்கிச் சென்றான். அப்பொழுது விக்கிரமன் சாலவும் வாலிபப் பருவத்தன். இருப்பினும் மிக்க ஆற்றலுடன் படை எடுத்துச் சென்றான். தெலுங்க வீமனும் தானை கொண்டு தாக்கச் சென்றான். இவ் வீமனுக்குத் துணையாகத் தென் கலிங்க அரசனும் போந்தான். விக்கிரம சோழனுக்குத் துணையாகச் சோழர்களுக்கு கீழப்பட்ட பராந்தக பாண்டியன் என்பான் ஒருவன் போந்து பொருதான்.

ஆகத் தெலுங்க வீமன், கொலனு நாட்டுத் தலைவன், தென் கலிங்க அரசன் என மூவர் ஒருபாலும், விக்கிரமனும் பாண்டியனும் மற்றொரு பாலும் நின்று பொருமாறாயிற்று. இந்தப் போரில் விக்கிரமன் இரு முனையில் நின்று போரிட நேர்ந்தது. ஆகவே பாண்டியனுடைய துணைப் பலம் விக்கிரமனுக்கு மிக்க பயனை அளித்தது.

இருதிறத்தினருக்கும் குளம் என்ற ஊரில் கடும்போர் நிகழ்ந்தது. அதில் வீமன் தோற்று மலை முழைஞ்சுகளில் ஓடி ஒளியும்படி நேர்ந்தது. ஆகவே விக்கிரமன் குளநகரைக் கைப்பற்றிக் கொண்டான். பின் தென் கலிங்கத்துக்கும் விக்கிரமன் தொடர்ந்து சென்றான். அங்கு நடந்த போரிலும் வெற்றியுற்றுக் கலிங்க நாட்டை எரியிட்டுக் கொளுத்தினன். இன்னணம் தெலுங்க வீமனுடனும் தென் கலிங்க அரசனுடனும் பொருது வெற்றி கொண்ட விக்கிரமன், பின் வேங்கியை அடைந்து மகிழ்ச்சியுடன் வீற்றிருந்தான். இவ்விஷயம் பின் காணும் விக்கிரம சோழன் மெய்க்கீர்த்தியால் தெளிவாம்.

" குளத்திடைத்
தெலுங்க வீமன் விலங்கல் மிசை யேறவும்
கலிங்க பூமியைக் கனலெரி பருகவும்
ஐம்படைப் பருவத்து வெம்படை தாங்கி
வேங்கை மண்டலத்து ஆர்த்தினி திருந்து
வடதிசை அடிப்படுத் தருளி."

இச் செய்தியைப் பராந்தக பாண்டியன் சாசனங்களிலும் நன்கு காணலாம்[1]. இவன் சோழனுடன் துணையாய் இருந்து பொருது வெற்றியுற்றதால், தன் சாசனங்களிலும் அவ் வெற்றியைப் பொறித்து வைத்துள்ளான் போலும்.

இவைகளுடன் சிம்மாசலத்தில் காணப்படும் குலோத்துங்கனுடைய சகம் 1021 (1098-9 கி.பி.) வருஷத்திய சாசனமும்[2] இன்னும் பிற சாசனங்

[1] T. A. S. I, Page 22. [2] 363 of 1899.

களும் தெலுங்க வீமன் நிகழ்த்திய கலகத்தை விக்கிரமசோழன் அடக்கியதைப் பற்றி விரித்துக் கூறுவனவாம்.

## 7. வட கலிங்கப் போர்

பிறகு குலோத்துங்கனது 45-வது ஆண்டில் வட கலிங்கத்தரசன் அனந்தவர்மன் என்பான் திறை கொட மறுத்ததால், அவன் இறுமாப்பை அடக்கக் குலோத்துங்கன் தன் தண்டத் தலைவருள் தலைவனை கருணாகரத் தொண்டைமான் என்பானை யும், அவனுக்குத் துணையாக வாணகோவரையன், முடிகொண்ட சோழன் என்ற வேறு இரு உப படைத் தலைவர்களையும், படையுடன் அனுப்பி னான். அக் கலிங்கப் போர் இலங்கைப் போரி னும் கொடுமையில் இரட்டியது என்பர். இதுவே குலோத்துங்கன் ஆட்சியில் இறுதியில் நடந்த பெரும் போராகும். இப் போர் நிகழ்ச்சியைக் குலோத்துங்கன் அவைக்களப் புலவரான, சயங் கொண்டார் கலிங்கத்துப் பரணியில் மிக அழகா கப் பாடியுள்ளார்.

குலோத்துங்கன் கி. பி. 1084-ல் 'சக்கரவர்த்தி' என்ற பட்டமும், பின் ஆறுண்டுகள் சென்றவாறே 'திரிபுவன சக்கரவர்த்திகள்' என்ற பட்டமும் புனைந்து கொண்டான். இவன் தனது குடிகள் ஆண்டு தோறும் தவறாது செலுத்திவந்த சில சுங் கங்களை நீக்கினான். ஆதலால் இவனைச் 'சுங்கந்

தவிர்த்த சோழன்' என வழங்கலாயினர். உலாவும் 'தவிராத சுங்கந் தவிர்த்தோன்'[1] எனப் புகழ்ந்துரைக்கும். தஞ்சையைச் சார்ந்த ஓர் ஊரும் இவன் ஆட்சியில் 'சுங்கந் தவிர்த்த சோழ நல்லூர்' என்ற பெயருற்றது. இவன் சோணாடு முழுதையும் அளக்குமாறும், குடி மக்களை ஆறிலொரு கடமை வரி கொடுக்குமாறும் ஆணையிட்டான். இவன் காலத்தில் விளை புலங்களுக்கு மட்டுமே வரி விதிக்கப்பட்டது. ஏனைய நிலங்கள் வரி ஒதுக்கப் பெற்ற இறையிலிப் புலங்களாகும்.

இவன் நாடு வடக்கே மகாநதி முதல் தெற்கே குமரி வரையிலும் பரவி இருந்தது. தன் ஆட்சியின் இறுதியில், குலோத்துங்கனுக்கு உடல்நலனும் உள்ளக் கிளர்ச்சியும் குன்றி விட்டமையால், விக்கிரம சோழனை ஆட்சி முறையில் நேரில் பழக்க அவாக் கொண்டு, வேங்கியிலிருந்து கங்கை கொண்ட சோழபுரத்துக்கு, கி. பி. 1118-ல் வரவழைத்து, அவனுக்கு இளவரசுப் பட்டமும் சூட்டினான்.

வேங்கியைவிட்டு விக்கிரமசோழன் வந்தபிறகு, அந்நாட்டை நெடுங்காலமாகத் தன்னாட்டுடன் இணைக்க வேண்டுமெனக் கருதியிருந்த சளுக்க விக்கிரமாதித்தன், சோழர் வலிக்குறைவை ஓர்ந்து சிறிது சிறிதாகத் தன் நாட்டுடன் சேர்த்துக் கொண்டு விட்டதாக அறிகிறோம். குலோத்துங்கன் சுமார் 52 ஆண்டுகள் மிக்க சீருஞ் சிறப்புமுற்று ஆண்டபின் விண்ணுலகெய்தினான்.

[1] குலோத்துங்க சோழன் உலா-வரி 52.

# 4. விக்கிரம சோழன் ஆட்சி

## 1. விக்கிரமன் அரசு கட்டில் ஏறுதல்

குலோத்துங்கனுடைய மகன் விக்கிரமசோழன் ஆனித் திங்கள் உத்திராடம் நாளில் தோன்றினன்[1]. இவன் இளமையிலேயே மிக்க எழிலும் ஆற்றலும் அடைந்திருந்தான். ஆதலால் இவன் தகப்பன் இவனை முதலில் வேங்கி நாட்டுக்குப் பிரதிநிதியாக அரசு செய்ய அனுப்பி இருந்தான். பின் தனது மரண காலத்துக்கு அண்மையில், குலோத்துங்கன் அங்கு நின்றும் அழைத்துச் சோழநாட்டுக்கு இளவரசாய் முடிபுனைந்தான். அந்நாள் 29-6-1118 என்பதாகக் கணக்கிடப் பட்டுள்ளது.[2] அங்ஙனம் முடிபுனைந்தபிறகு குலோத்துங்கனுடன் இவன் இரண்டு அல்லது நான்கு ஆண்டுகள் அரசியல் கருமங்களனைத்திலும் கலந்து ஆண்டிருக்க வேண்டும். ஏனெனில் குலோத்துங்கன் ஐம்பது அல்லது ஐம்பத்திரண்டு ஆண்டுகள் அரசு புரிந்திருப்பதாகச் சாசனங்கள் கூறுவதால் அவன் கி. பி. 1120 அல்லது 1122-ல் தான் உயிர் நீத்தவனாதல் கருதத்தகும்[3]. இங்ஙனம் மகனும் தந்தையும் சேர்ந்து அரசுபுரிதல் சோழர்களுக்குள் இராஜராஜன் நாள் தொட்டுப் பெரு வழக்காயுள்ளது.

[1] 285 of 1912. [2] Epi Indica. Vol. VII, Page 4-5.
[3] 284 of 1923

விக்கிரமசோழன் ஆளத் தொடங்கிய ராஜ்யம் குலோத்துங்கன் ஆண்டதிலும் சில வகையில் குன்றிய நாடேயாகும். தன் தகப்பன் இறுதிக்காலத்தில் இழந்த சில நாடுகளை, இவன் கைப்பற்ற முயன்றதாகக் கங்கநாட்டில் காணப்படும் சில சாசனங்களாலும், தெலுங்கு நாட்டில் அகப்பட்ட பல சாசனங்களாலும் அறியலாம்.

## 2. விக்கிரமன் போர்ச் செயல்கள்

விக்கிரம சோழன் இளம்பருவத்தே வேங்கி நாட்டில் குலோத்துங்கனுக்குப் பிரதிநிதியாக ஆண்டு வந்ததையும், அக்காலத்துத் தெலுங்க வீமனுடனும் தென்கலிங்க மன்னனுடனும் நிகழ்ந்த போரையும், முன்னமே விரித்துள்ளோம். பின் வேங்கியை நீத்துச் சோழ நாட்டுக்கு வருங்கால், வெலநாண்டு நாட்டரசனை முதல் கங்கன் என்பவன் மகன் சோடன் என்பவனைத் தன் தகப்பன் உத்தரவின் பேரில் வேங்கியை ஆளுமாறு அமர்த்தி விட்டுப் போந்தான்.[1] வேங்கிநாட்டு ஆட்சி இங்ஙனம் வேறொருவன் கையில் மாறிவிடவே, சளுக்கிய விக்கிரமாதித்தன் மெள்ளப் புதியனுடன் கலந்து கொண்டு, தன் ஆட்சியை அந்நாட்டில் புகுத்தி விட்டு, அந்த வெலநாண்டு சிற்றரசனையும் தனக்குக் கீழ்ப்பட்டவனாக ஆக்கிக்கொண்டான். ஆனால் விக்கிரமாதித்தன் கி. பி. 1126-ல் இறந்துவிட்

[1] Epi. Indica Vol. IV, Page 42.

டான். இறந்த உடனே தனக்கு மாற்றானின்மையை உணர்ந்து விக்கிரமசோழன், வடக்கே படைஎடுத்துச் சென்று மீண்டும் தன் ஆதிக்கத்தை வேங்கி நாட்டின் தென் பாதியில் நிலவுமாறு புரிந்துவிட்டுத் திரும்பினான். இச்செய்தி குண்டூர் ஜில்லாவிலுள்ள சேப்ரோலு என்னும் ஊரில் அகப்பட்ட ஒரு கல்வெட்டில், கொள்ளிப்பாகைக்கும் ஷட்ஸஹஸ்ர தேசத்துக்கும் தலைவனான மகாமண்டலேசுவரன் நம்பயனும், அவனுக்குச் சிறிது காலம்முன் தலைவனாயிருந்த தண்ட நாயகன் அனந்தபாலனும், விக்கிரம சோழன் ஆட்சிக்கு உட்பட்டுத் தாங்கள் இருந்தனராக, கி. பி. 1127-ல் செதுக்கியிருக்கின்ற கல்வெட்டால் தெளிவாகிறது[1]. அத்துடன் சக வருஷம் 1054-ல் விக்கிரமசோழன் ஆட்சிப் பதினேழாம் ஆண்டில், அதே ஜில்லா நிடுப்ரோலு என்னும் ஊரில் அகப்பட்ட ஒரு கல்வெட்டில், மேற்கண்ட வெலநாண்டு சிற்றரசர்களும் அவர்கள் வழியோரும் தென்னாட்டுச் சோழமன்னர்களுக்கே தாங்கள் உட்பட்டிருப்பதாகக் கூறுவதால், மேற்கண்ட செய்தி வலியுறுகிறது.[2] ஆனால் சோழர்கள் எங்ஙனம் இப்பாகத்தை மீண்டும் வென்றனர் என்ற விரிவு ஒன்றும் தெற்றெனக் கூற இயலவில்லை. ஒருகால் சளுக்கிய விக்கிரமாதித்தன் இறந்துவிடவே, இறையும் தாழ்க்காது விக்கிரமசோழன் படை திரட்டிச் சென்றதால், அந்த வெலநாண்டு சிற்றரசர்கள்,

[1] 153 of 1897.
[2] 163 of 1897.

சளுக்கர் ஆதிக்கத்தைவிடச் சோழர் வசம் இருப்பதே சிறந்ததெனக் கருதிப் பணிந்திருக்கலாம்.

விக்கிரம சோழன் மைசூர் நாட்டின் கீழ்ப் பகுதியிலும் தன் ஆட்சியைப் பரப்பியுள்ளான். இச் செய்தி அவன் ஆட்சியின் இரண்டாம் வருஷத்தில் பொறிக்கப் பெற்ற ஒரு சாசனத்தில், சுகத்தூர் என்ற ஊரில், விக்கிரம சோழனுக்குக் கீழ்ப்பட்ட படைத் தலைவன் ஒருவன் ஒரு கோவில் கட்டுவித்திருப்பதாகக் கூறுவதால் தெரிகிறது.[1] மேலும் அவன் ஆட்சியில் பத்தாம் ஆண்டில் பொறித்துள்ள அதே பிரதேசத்தில் அகப்பட்ட மற்றொரு சாசனத்தில், கோலார் ஜில்லாவில், மட்டிவாளா பீராக் என்னும் ஊரில் ஒரு கோவிலுக்கு அவன் கீழ் உள்ள ஒருவன் விமானம் கட்டுவித்ததாகக் கூறுவதாலும் ஏற்படுகிறது.[2]

இவைகளால் தன் தகப்பன் அந்திம காலத்தில் இழந்த மைசூரின் சில பாகங்களையும், விக்கிரம சோழன் பெற முயன்றுள்ளான் என நன்கு ஏற்படும்.

## 3. நாட்டில் வற்கடம் நிகழ்தல்

விக்கிரம சோழன் ஆட்சி ஆரும் ஆண்டில் சோழ நாட்டில் ஒரு பெரிய வற்கடம் தோன்றி இருப்பதாகக் கல் வெட்டுக்களால் அறியலாம். வட

[1] 175 of 1911.
[2] 467 of 1911.

தஞ்சை ஜில்லா, கோவிலடி என்ற ஊர்ச் சாசனம் கூறுவது வருமாறு.

"திருப்பேர் நகரப் பெருங்குறி மகா சபை யோம் :—இவ்வூர் வட பிடாகை திருச்சடை முடி மகா தேவர் கோயிலிற் கூட்டங் குறைவறக் கூடி யிருந்து சிலாலேகை பண்ணின பரிசாவது காலம் பொல்லாதாய் நம்மூர் அழிந்து குடியோடிப் போய்க் கிடந்தமையில்."[1]

மற்றும் உடையார் கோவில் சாசனம் ஒன்று கூறுவது வருமாறு.

"இக் காசு பதின்மூன்றும் இவ்வானி மாசத்து இப்படிக் கொள்ள வேண்டித்து காலம் பொல்லாங் கைப் பரிஹரித்துக் கொண்டு ஊர் இரக்ஷித்துக் கொடுக்கைக்காக."[2]

பின்னும் திருவோத்தூர் சாசன மொன்று கூறுவது.

"இவ்வூர் யாண்டு ஆறுவது பெரு வெள்ளங் கொண்டு ஊரும் போக்மும் அழிந்து, அனந்தரப் பட்டு இவ்வூரிறை இறுக்கைக் குடலில்லாமையால் இவ்வூர் நீர் நிலம் விற்றுகிலும்."[3]

இன்னும் தென்னாற்காடு ஜில்லா திருவதிகை சாசனமொன்றில் கூறியுள்ளது.

"நம்மூர் யாண்டு ஆறுவது கடமைத் தட்டுண் டாய் இத் தட்டுக்கும் பழுதாய் பாங்நிலத்திலே சிறிது

---

[1] Epig Indica 1900—1. No. 276 of 1901.
[2] do 1901—2. No. 404 of 1902.
do 1899—1900. No. 87 of 1900.

விற்ருகிலும் கடமைத் தட்டுப் போக்கறுக்க வேணு மென்று மகா சபையோம் சம்மதித்து"[1] என்பதாம்.

மேற்கண்ட கல்வெட்டுக்களை ஆராய்வுழி, மழை மிகுதியால் வெள்ளப் பாழ் உண்டாய் நாட்டின் பல பாகங்களில் பயிர் பாழுடைந்தமையின் பெரிய பஞ்ச மொன்று, வட ஆற்காடு, தென் ஆற்காடு, தஞ்சாவூரின் சில பாகங்கள் ஆகிய எல்லைகளில் உண்டாயிற் றென்றும், குடிகள் இறைப் பணம் செலுத்த இயலாது நிலத்தை விற்கவும் நேர்ந்தது என்றும், கருத இடந்தருகின்றன.

## 4. விக்கிரம சோழனது கோயில் திருப்பணிகள்

இவன் தனது ஆட்சியின் பத்தாம் ஆண்டில் தனது குலத்தோர் வழி வழியாகத் தொழுதும் தொண்டு செய்தும் வரும் ஆடியபாதர், அம்பலக் கூத்தர் தில்லை நடராஜப் பெருமானது கோயிலைப் புதுப்பிக்கத் தனக்கு அவ்வாட்டை இறுக்கப் பெற்ற இறைப் பணத்தில் பெரும் பகுதியைச் செலவிட்டதாகத் தெரிகிறது. அத்துடன் பல நிவந்தங்களும் அப் பெருமானுக்கு ஏற்படுத்தி யிருப்பதாகவும் அறியக் கிடக்கிறது. அவன் ஆட்சியின் 11-ஆம் ஆண்டில் பிறந்த கல்வெட்டுக் கூறுமாறு.

" திருமணிப் பொற்றேரட் டெழுபத் தாண்டு
வருதிறை முன்னே மன்னவர் சுமந்து
திறை நிறைத்துச் சொரிந்த செம்பொற் குவையால்
தன்குல நாயகன் தாண்டவம் பயிலுஞ்

[1] Epig Indica 1902—3. No. 30 of 1903.

செம்பொன் னம்பலஞ் சூழ்திரு மாளிகையும்
கோபுர வாசல்கூட சாலைகளும்
உலகு வலங்கொண் டொளிவிளங்கு நேமிக்
குலவரை உதைய குன்றமொடு நின்றெனப்
பசும்பொன் வேய்ந்த பலிவளர் பீடமும்
விசும்பொளி தழைப்ப விளங்குபொன் வேய்ந்து
இருநிலந் தழைப்ப இமையவர் களிப்பப்
பெரிய திருநாள் பெரும்பெயர் விழாவெனும்
உயர்பூரட் டாதி உத்திரட் டாதியில்
அம்பல நிறைந்த அற்புதக் கூத்தர்
இம்பர்வாழ எழுந்தரு ளுவதற்குத்
திருத்தேர்க் கோயில் செம்பொன் வேய்ந்து
பருந்திரள் முத்தின் பயில்வடம் பரப்பி
நிறைமணி மாளிகை நெடுந்திரு வீதிதன்
திருவளர் பெயராற் செய்து சமைத்தருளி
பைம்பொற் குழித்த பரிகல முதலாச்
செம்பொற் கற்பகத் தொடுபரிச் சிந்நமும்
அளவில் லாதன வொளிபெற வமைத்துப்
பத்தாமாண்டில் சித்திரைத் திங்கள்
அத்தம் பெற்ற ஆதிவாரத்துத்
திருவளர் மதியின் திரயோதசி பக்கத்து
இன்ன பலவும் இனிதுசமைத் தருளி.''

இதன் பொழிப்பு வருமாறு.

'விக்கிரம சோழன் ஆட்சிப் பத்தாவது ஆண்டுக்கிறைப்பகுதியாகச் சிற்றசர்களால் இடப் பட்ட ஆடகக் குவியலைக்கொண்டு ஆனந்தத் தாண் டவ நடராஜப் பெருமானுக்கு, மதிலும், கோபுர வாயிலும், கூட சாலைகளும் இயற்றினன். மேரு

பர்வதமே சுற்றிலும் வளைத்த தொப்பப் பலிபீடத்துக்கும் பொன் வேய்ந்தான். உலகோர் சுகமுற இமையோர் களிக்கப் பெரிய திருநாள் பெரும் பெயர் விழாவில், நடராஜப் பெருமான் வீதியில் பவனி வரும் தேருக்கும் பொன் வேய்ந்தான். தன் பெயரால் மாட மாளிகைகள் அமைந்த வீதிகளைக் கோயிலைச் சுற்றி அமைத்தான். சித்திரைத் திங்கள், அத்த நாளில் ஞாயிற்றுக்கிழமையில் சுக்லபக்ஷம் திரயோதசியில் மேற்கண்ட திருப்பணிகளை நடராஜப் பெருமானுக்குச் சமைத்தான்'. இதில் குறிக்கப்பட்ட நாளைப்பற்றிய செய்தியைக் கணக்கிட்டு, கீல்ஹாரன் என்பார், இது 15-4-1128 ஆகும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இம் மெய்க்கீர்த்தியில் கூறியுள்ள விஷயங்கள் சிறிது உயர்வு நவிற்சியின்பாற் பட்டனவாயினும், முழுதும் ஒருசேர நோக்குங்கால், இவன் முன்னோர் முதல்பராந்தகன் நாள்தொட்டுத் தில்லை நடராஜப் பெருமானுக்குச் செய்துவந்த திருப்பணிகளை, இவனும் சிறப்புறச் செய்தான் என்பதில் இறையும் ஐயமின்று.

பெருஞ் சோழ வம்சத்தை நிலைநாட்டிய விஜயாலயன் நாளிலிருந்து வெகு காலம் தஞ்சாவூரே சோழர்களுக்குத் தலை நகராக விளங்கி வந்தது. அப்பொழுது திருவாரூர்க் கோயிலே அரசர்களுக்கு முக்கிய சிவாலயமாகத் தோன்றியது. பிறகு முதல் இராஜேந்திரன் கங்கா விஜயத்துக்குப்பின் கங்கை கொண்ட சோழபுரம் கட்டப்பெறவே தலைநகரும்

தஞ்சையிலிருந்து அவ்விடத்துக்கு மாற்றப்பட்டது. இதன் பிறகு தில்லையம்பதிக் கோவிலே சோழ அரசர்களுக்கு அண்மையிலுள்ள சிவாலயமாகத் தோன்றியது. ஆகவே பின்னிட்ட சோழ அரசர்கள் தம் தேவிமாருடன் தில்லைக்கு அடிக்கடி சென்று தொழுது வரலாயினர். அதுபற்றி அத்தலத்தும் பல விதமான திருப்பணிகள் இயற்றுவாராயினர். பிற் காலத்திய சோழ அரசர் நாட்களில், தஞ்சையும் திருவாரூரும் சிறிது பெருமையில் குன்றியவையாக வும், கங்கைகொண்ட சோழபுரமும், சிதம்பரமும் மேதக்க சிறப்புடன் திகழ்பவையாகவும் ஆயின. குலோத்துங்க சோழன் காலத்தே அவன் கீழ்ப்பட்ட நரலோக வீரன் என்று ஒரு சிற்றரசன் தில்லைக் கோயிலுக்குப் புதிதாகச் சில பணிகள் புரியத் தொடங்கி இருந்தான். அத்திருப்பணிகளை விக்கிரம சோழன் தன் தகப்பன் காலத்துக்குப் பின், செய்து முடிக்கவேண்டும் என்ற ஆர்வமுற்றவனாய், மேலே மெய்க் கீர்த்தியில் பாரித் துரைக்கப்பட்டவாறு புரிந்து முற்றுவித்திருக்கலாம்.

இத் திருப்பணிகள் இயற்றிய காலத்துக்குப் பிற்பட்ட கல்வெட்டுக்களில் சிதம்பரம் கோயிலின் முதல் பிராகாரத்துக்கு 'விக்கிரம சோழன் திரு மாளிகை' எனப் பெயரிட்டிருப்பதைக் காணலாம். மேலும் அக் கோயிலைச் சுற்றியுள்ள மாடவீதிக்கு 'விக்கிரம சோழன் தெற்குத் திருவீதி' எனப் பெய ரிட்டிருப்பதையும் காணலாம். சிவபெருமானுக்கு இவன் இயற்றிய இத்துணைத் திருப்பணிகளுடன்,

ஸ்ரீ ரங்கத்திலுள்ள அரங்கநாதன் கோயிலுக்கும் சில பணிகள் இயற்றி யுள்ளதாகக் கோயிலொழுகு என்னும் நூலிலிருந்து அறிகிறோம். அரங்கநாதன் கோயிலைச் சுற்றி இவன் பெயரால் இரண்டு திரு வீதிகள் கட்டப்பெற்றுள்ளன. அவற்றிற்கு அக ளங்கன்[1] திருவீதி என்றும், திருவிக்கிரமன் திருவீதி என்றும் பெயராம். இத்துடன் அக் கோயிலின் ஐந்தாம் பிராகாரத்தையும் அக் கோயிலிலுள்ள இராமன் சன்னதியையும் இவன் கட்டினதாக அந்நூல் கூறும்.

இத் திருப்பணிகளால் இவன் வைஷ்ணவ மதத் திலும் அபிமான முடையவன் என்பது தெற்றென விளங்கும். இவ்விஷயத்தில் யாதொரு இரும்பூதும் இல்லை. இவன் முன்னோனை முதல் இராஜ ராஜன் சிவமதத்தில் அபிமானம் மிக்கவனாக விளங் கினனாயினும், பிற மதங்களை வெறுக்காமல் அவை களுக்கு மிக்க உதவி அளித்துள்ளான். அவன் மகன் முதல் இராஜேந்திரனும் அம்மாதிரியே வேதத்துக்குப் புறம்பான சமண பௌத்த மதங் களையும் ஆதரித்தான் என முன்னமே அறிவோம். முன்னோரின் அடிச் சுவட்டைப் பின்பற்றியே இவ னும் தான் சிவபக்தனாயினும் பிற மதத்தை வெறா தவனாய் இயன்ற உதவி புரிந்துள்ளமை, இவனது சமரச மனப்பான்மையை விளக்குகிறது.

---

[1] அகளங்கன் என்பது விக்கிரமன் பட்டப்பெயர்களுள் ஒன்றாகும்.

## 5. விக்கிரம சோழன் சுற்றுப்பிரயாணங்கள்

விக்கிரம சோழன் மெய்க்கீர்த்திகள் இவன் ஆளத்தொடங்கின இரண்டாம் ஆண்டிலிருந்து உள்ளன. சில மெய்க்கீர்த்திகள் சிறியவையாயும் சில பெரியவையாயும் காணப்படுகின்றன. சிறிய மெய்க்கீர்த்திகள் 'பூமாது புணர' எனத் தொடங்கும். பெரிய மெய்க்கீர்த்திகள் 'பூமாலை மிடைந்து' எனத் தொடங்குவனவாம். எடுத்துக் காட்டாக அனுபந்தத்தில் ஒரு மெய்க்கீர்த்தி கொடுக்கப்பட்டுள்ளது.

இவன் ஆட்சிக் காலத்தில் கிடைத்துள்ள சாசனங்கள் வாயிலாக நாம் இவன் செய்த சுற்றுப் பிரயாணத்தைக் குறித்து ஒருவாறு அறியக்கிடக்கிறது. இவனுக்கும் கங்கைகொண்ட சோழ புரமே தலைநகராயிருந்தது என விளங்குகிறது. ஆண்டுள்ள அரண்மனையின் புறவாயிலில் ஒரு சேனைபதி நிற்க ஏற்பாடுள்ளதாக ஒரு கல்வெட்டுத் தெரிவிக்கிறது.[1] இவன் ஆட்சியில் கி. பி. 1122-ல் ஏற்பட்ட ஒரு கல்வெட்டில், விக்கிரமசோழன் கும்பகோணத்துக்கு அருகிலுள்ள பழையாறை என்ற சிவஸ்தலமாகிய முடிகொண்ட சோழபுரத்திலிருந்து ஓர் ஆணை பிறப்பித்ததாகக் கூறப்பெற்றுள்ளது[2]. மறுஆண்டு செங்கற்பட்டு ஜில்லாவிலுள்ள காழியூர் கோட்டத்தைச் சார்ந்த வாசானு அல்லது குனிவளநல்லூர் என்னும் ஊரின்கண் ஒரு குளக்கரையிலுள்ள மண்டபத்தில் சிறிதுபோழ்து மன்னன் தங்கி இருந்ததாக

[1] 71 of 1926. [2] 168 of 1906.

ஆண்டுள்ள ஒரு கல்வெட்டுக் கூறும். அண்ணல் அரசன் நண்ணிய நிலையை பின்னோர்க்கு நினைவுறுத்த அக்கல்வெட்டு எழுந்தது போலும். மற்றும் கி. பி. 1124-ல் அரசன் தென்னாற்காடு ஜில்லா வீரநாராயண சதுர்வேதி மங்கலம் என்ற காட்டுமன்னார் கோவிலில் ஒரு அரண்மனையில் இருக்கை கொண்டிருந்தாக ஒரு கல்வெட்டு அறிவுறுத்தும்.[1] பின்னும் கி. பி. 1130ல் கண்ட ஒரு சாசனம், அரசன் சிதம்பரத்துக்கு அருகிலுள்ள ஒரு அரண்மனையில் வாசம் செய்ததாகக் கூறும்.

இக்கல்வெட்டுக்களால், விக்கிரமசோழன் தன் கீழுள்ள அதிகாரிகள் செவ்வனே பரிபாலனம் புரிகின்றனரா என அறிவான் கருதி அடிக்கடி தன் னாட்டில் பல இடங்களுக்கும் சுற்றுப் பிரயாணம் செய்து வந்தான் என்று நாம் கருதலாம். அத்துடன் அரசன் நேரில் சென்று காண்பதால் குடிகளின் குற்றங் குறைகளையும் நன்கு உணர்ந்து அவைகளுக்குப் பரிகாரம் விரைவில் செய்யக்கூடும். அரசன் ஆட்சி நன்கு நடப்பதற்கு இத்தகைய மேற்பார்வைப் பிரயாணங்கள் அத்யாவசியம். இத்துடன் பல முக்கிய தலங்களில் அரசனுக்கு அரண்மனை இருந்தது எனவும் நாம் அறியலாம். இவைகளால் ஏனைச் சோழ மன்னர்கள் சென்ற முறையையே விக்கிரம சோழனும் பின்பற்றினன் எனவும் தெரியலாம்.

---

[1] 63 of 1918.

## 6. விக்கிரமன் மனைவியரும் பட்டப் பெயர்களும்

விக்கிரம சோழனுக்கு மனைவியர் இருவர் அவர்களுள் முக்கோக்கிழானடிகள் என்பாள் அரசன் பட்டம் பெற்றதிலிருந்து எட்டு ஆண்டுகள் பட்ட மஹிஷியாக இருந்தாள் என்றும், அவள் மரித்தபின் தியாகபதாகை என்பாள் பட்டத் தரசியாக அமர்ந்திருந்ததாகவும், சாசனங்களால் அறியலாம். ஆனால் இவன் ஆட்சி ஆறும் ஆண்டில் எழுந்த திருவிடைமருதூரிலுள்ள ஒரு கல்வெட்டில் 'நம் பிராட்டியார் நீரியன் மாதேவியார்' என்றொரு பெயர் காணப் படுவதால் அவளும், மற்றொரு மனைவியாய் இருக்கலாம் எனக் கருத இடமுண்டு. ஆனால் அவளைப் பற்றி வேறு சாசனங்கள் ஒன்றும் கிடைத்தில.

இம்மன்னன், "தியாக சமுத்திரம்" என்ற பட்டப் பெயர் பூண்டிருந்ததாக, கல்வெட்டுக்களாலும், விக்கிரம சோழன் உலா,

"போர்த்தொழிலா லேனைக் கலிங்கங்களே ழினையும்
போய்க்கொண்ட தானைத் தியாக சமுத்திரமே."
(660-62)

எனக்கூறுவதாலும் தெளியலாம். இவன் ஆட்சி 16-ம் ஆண்டில் பிறந்துள்ள காஞ்சீபுரத்துக்கு அருகுள்ள செவிலிமேட்டில் கண்ட ஒரு வடமொழிக் கல்வெட்டால் இவனுக்குத் 'தியாகவாராகரன்' எனவும் 'அகளங்கன்' (The Spotless one)

எனவும் புனைபெயர்கள் இருந்ததாக ஏற்படுகின்றது. பின்னும் சில கல்வெட்டுக்களில், முதல் குலோத்துங்கன் பூண்டிருந்த சில பட்டப் பெயர்களையும் இவன் அணிந்திருக்கக் காண்கிறோம். இவன் முறைப்படி பரகேசரியாக இருந்த போதிலும், இவனுக்கு 'இராஜகேசரி' என்ற பட்டமும் அளிக்கப் பட்டுள்ளதையும் அறியக்கூடும்.

## 7. அரசியல் தலைவர்களும் சிற்றரசர்களும்

ஒட்டக் கூத்தர் இயற்றிய விக்கிரம சோழன் உலாவில் பல சிற்றரசர்களுடைய பெயர்கள் குறிக்கப் பெற்றுள்ளன. முதலில் கலிங்க மெறிந்த கருணாகரத் தொண்டைமான் பெயருள்ளது. பின் வில் வித்தையில் வல்லவனான வாணன் பெயருள்ளது. இவனே மகாபலி வமிசத்தைச் சேர்ந்த வாணகோவரையன் போலும். இவன் மனைவி ஏழ்வர்குழலி என்பாள், கி.பி. 1120-ல் திருவாடுதுறையில், ஒரு விளக்கு எரிவதற்காக நிவந்தம் அமைத்துளாள். கலிங்கத்துப்போரில் மிக்க வீரத்துடன் பொருது புகழ்பெற்ற நரலோகவீரன் என்ற ஒரு கலிங்கர் தலைவனும் சிறந்தவனாக விளங்கினான்.[1] கங்கையிலிருந்து குமரிவரையில் பல தருமங்கள் இயற்றியுள்ளவனும், திருவாடுதுறைக் கோயிலுக்கு மிகுந்த கட்டளைகள் ஏற்படுத்தியுள்ளவனுமான, சேனாபதி சங்கரன் அம்பலம் கோயில் கொண்டான் என்ற புனைபெயர் பெற்ற

[1] 159 of 1930.

அனந்தபாலன் என்பான் ஒருவன் சிறப்பாகக் குறிக்கப் படுகிறான்.[1]

இவன் காலத்துத் தெலுங்கு நாட்டில் ஆண்டு வந்த சிற்றரசர் சிலர் வருமாறு.

1. மகா மண்டலேசுவரன் பெத்தராசன். இவன் ஆண்ட நாடு பொத்தப்பி நாடாகும். ஆண்ட காலம் கி. பி. 1121-க்குச் சமீபமாகும். இவன் கரிகாலன் வமிசத்தில்வந்த சித்தராஜன் மகனான மஹாமண்டலேசுவரன் விமலாதித்ய தேவன் என்ற மதுராந்தக பொத்தப்பி சோழன் மகன்.[2]

2. ராஜேந்திர சோழன் பொத்தப்பி சோழன் என்ற கன்னர தேவன். இவன் காமராஜன் மகன். இவன் பெயர் காளஹஸ்திரியில் கி. பி. 1130-ல் பொறிக்கப்பட்ட கல்வெட்டில் உள்ளது.[3]

இங்ஙனம் விக்கிரம சோழன் பதினேழு ஆண்டுகள் ஆண்டான். தன் ஆட்சியின் இறுதிக் காலத்திலேயே தன் மகன் இரண்டாம் குலோத்துங்கனுக்கு இளவரசுமுடி கவித்துவிட்டு, அவனையும் உடன் வைத்து ஆண்டு வந்தான். இவன் காலத்தில் மிக்க சீருஞ் சிறப்பும் பெற்று விளங்கிய அவைக்களப் புலவர், கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர். அவரைப் பற்றித் தனியே முன்னர்க் கூறுதும்.

---

[1] 71 of 1926. [2] 583 of 1907. [3] 102 of 1922.

# 5. இரண்டாம் குலோத்துங்கன் ஆட்சி

## 1. ஆட்சியின் சிறப்பு

குலோத்துங்கன் II தன் தகப்பனாரால் கி. பி. 1133-ம் ஆண்டில் பட்டத்துக்கு உரியவனாக இளவரசுப் பட்டம் சூட்டப் பெற்று, விக்கிரம சோழனுடன் சேர்ந்து இரண்டு வருஷங்கள் ஆண்டு வந்தான். விக்கிரம சோழன் கி. பி. 1135-ல் இறக்க, உடனே இவன் அரசனாக முடியும் தரித்தான்.

இவன் ஆட்சி முழுதிலும் அமைதியே முற்றும் நிலவியிருந்தது. குடிகள் யாதொரு இன்னலுமின்றி இருக்க, நாடு செழித் தோங்கி, மறம் ஒழிய அறம் வளர இவன் அரசாண்டான் என்பது,

> " பசிப்பகை யானது நீங்கு நீங்க
> மன்னுயிர் தழைப்ப மனுவாறு விளங்க
> மாதவர் தவமும் மங்கையர் கற்பும்
> ஆதி அந்தணர் ஆகுதிக் கனலும்
> மீதெழு கொண்டல் வீசுதண் புனலு
> மேதினி வளருஞ் சாதி ஒழுக்கமும்
> நீதி அறமும் பிறழாது நிகழ."

என மெய்க்கீர்த்தி கூறுவதால் தெளிவாகும். இவன் காலத்தில் யாதொரு போரும் நிகழ்ந்ததாகச் சாசனங்கள் கூறவில்லை. இவன் மெய்க்கீர்த்தி,

"பாவுப் பழனப் பரப்பும் பணைக்கை
மாவு மல்லது வன்றளைப் படுதல்
கனவிலுங் காண்டற் கரிதென வருந்திப்
புடையினும் பல்வேறு புள்ளினு மல்லது
சிறையெனப் படுத லின்றி."

எனக் கூறுதலால் மாற்றார் போரில் தோற்று இவன் கையிற் சிறைப்பட்டனர் என்பதில்லை என அறியலாம். ஆகவே யாதொரு போரும் நிகழ்ந்திருக்க ஏதுவில்லை. இவன் ஆட்சி வடபால் வேங்கி நாட்டிலும் வலுவாக இருந்தது என்றும் அறியலாம். ஏனெனில் இவன் முன்னோர் காலத்தைவிட இவன் காலத்திய சாசனங்கள் பல தெலுங்கு நாட்டில் காணப்படுகின்றன.

இங்ஙனம் யாதொரு கலக்கமுமின்றி நாட்டில் அமைதியும் அறனும் நிலவி வந்ததால் தான், கல்வித் துறையில் மக்கள் தமது காலம் முழுதையும் செலுத்திப் பல சீரிய இலக்கியங்களை இயற்றலாயினர். அக்காலத்தில் போர்ப்பறையினது முழக்கஞ் செவிப்படாவிடினும், கம்பர், சேக்கிழார், ஒட்டக்கூத்தர் போன்ற கவிச்சிங்கங்களின் வாக்கின் முழக்கம் எங்கும் ஒலித்தது. இவர்களைப் பற்றி முன்னர்க் கூறுவாம்.

## 2. தில்லைப் பெருமானுக்குச் செய்த திருப்பணி

குலோத்துங்க சோழன் II-னுடைய மெய்க்கீர்த்திகள் 'பூமன்னு பாவை'[1] 'பூமருவிய புவி ஏழும்'[2]

[1] 56 of 1893. [2] 85 of 1895.

'பூமன்னுயாணர்'[1] 'பூமேவி வளர்'[2] 'பூமன்னு பதுமம்'[3] 'பூமேவு திருமகள்'[4] எனப் பலவிதமாகத் தொடங்குகின்றன. இம்மெய்க் கீர்த்திகள் அரசனை அதிசயோக்தியால் புகழ்கின்றனவே யன்றிச் சரித்திர சம்பந்தமாக யாதொரு குறிப்பும் கொடுக்கவில்லை. ஒரு மெய்க்கீர்த்தியில் 'தில்லைநகருக்குப் பெருமை விளங்குமாறு முடிசூடினன்'[5] எனக் காணப்படுவதால், அவனுக்கு முடிசூட்டு விழாவே அங்கு நிகழ்ந்ததோ என ஐயுறற்கிடனாகிறது. இதனால் தில்லைநகரில் நடராஜப் பெருமான் கோயிலுக்கு இவன் தகப்பனரால் குறையுற்றிருந்த சில திருப்பணிகளை இவன் செய்து முற்றுவித்துச் சிறப்பித்தான் எனக் கருதவும் இடந்தருகிறது. இச்செயலும் இவனால் நடந்தது உண்மையே.

இவன் காலத்து ஏழாவது ஆண்டில் ஏற்பட்ட திருப்புறம்பிய சாசனத்தில்[6] இச்செய்தி குறிக்கப்பட்டுள்ளது. குலோத்துங்க சோழன் உலாவிலும் (கண்ணி 69-116) இது விரித்துக் கூறப்பெற்றுள்ளது. அதன் கருத்து வருமாறு:—"குலோத்துங்கன் தில்லை நடராஜப் பெருமான் கோயிலுக்குத் தன் மனைவியருடன் சென்று, அங்கு அம்பலத்திலிருந்த அரவணை மிசை அறிதுயிலமர் மூர்த்தியை அப்புறப்படுத்திவிட்டுக் கோயிலைப் புதுப்பித்துக் கட்டினன். ஏழுநிலைக் கோபுரங்களையும், அம்மன் சன்னதியையும்

[1] 83 of 1895. [2] 422 of 1904. [3] 255 of 1929.
[4] 572 of 1907. [5] 155 of 1902. [6] 363 of 1907.

புதுப்பித்துக் கட்டி, விமானத்தின் சில பாகங் களுக்கும் பொன் வேய்ந்தான்."

இங்ஙனம் குலோத்துங்கன் II அம்பலத்துள் இருந்த கோவிந்தராஜன் திருவுருவை அப்புறப் படுத்திக் கடலிலிட்டான் என்றது பின்வரும் குலோத்துங்க சோழன் உலாவாலும்,

'போத்தின்மேற்
தில்லைத் திருமன்றின் முன்றிற் சிறுதெய்வத்
தொல்லைக் குறும்பு தொகுத்தெடுத்து' (77 - 79.)

இராஜராஜன் சோழன் உலாவாலும்,

" தூயசெம்
பொன்னிற் குயிற்றிப் புறம்பிற் குறும்பனைத்து
முன்னர்க் கடலகழின் மூழ்குவித்த—சென்னி"
(65 - 67)

தெளிவாக அறியக் கிடக்கிறது. பின்வரும் தக்க யாகபரணித் தாழிசையாலும் இது நன்கு விளங்கும்.

"முன்றிற்கிடந்த கருங்கடல்போய் முன்னைக் கடல்புகப் பின்னைத்தில்லை
மன்றுக்கிடங்கண்ட கொண்டல்பெற்ற மரகத மேருவை வாழ்த்தினவே"
(777)

முற்காலத்தில் சங்கர நாராயணரது ஒற்றுமை யைத் தெள்ளென விளக்கவும், சைவ வைணவ மதத் தினர்கள் தம்முள் வீணாகச் சமயப் பிணக்கிட்டுக் காலங் கழித்தல் அவம் எனக் காட்டவும், இப்பெருஞ்

சிவஸ்தலத்துள் திருமால் படிவத்தை நடராஜன் கர்ப் பக்கிரகத்திலேயே அமைத்திருந்தனர் போலும். சைவமதப்பற்று மிக்கவனை நமது குலோத்துங் கன் II மதவெறியுற்று, சமயப்போருக்கு இடந் தருமாறு, கோவிந்தராஜன் திருவுருவை வெளிப் படுத்திக் கடலி லெறிந்தான். இச்செய்தி வைணவர் குரு பரம்பரையிலும் விரித்துரைக்கப்பெற்று, இவ னைக் கிருமிகண்ட சோழன் என்று வெறுத்து வழங் கியதாலும் புலனும். இவன் காலத்தே இவ்வால யத்துத் தொடங்கிய சமயப்போர் இன்னும் முடிவு பெற்றிலது. இன்னணம் கோவிந்தராஜ நடராஜ ஒற்றுமை சிதம்பரம் கோயிற்கண் அமைந்திருந்தது என்பதற்கு, திருக்கோவையார் செய்யுள் ஒன்றே சாலும்.

"புரங்கடந் தானடி காண்பான் புவிவிண்டு புக்கறியா
திரங்கிடெந் தாயென்றிரப்பத் தன்னீ ரடிக்கென்
னிரண்டு
கரங்கடந் தானொன்று காட்டமற் றாங்கதுங் காட்டிடென்று
வரங்கிடந் தான்றில்லை யம்பல முன்றிலம் மாயவனே"
(86)

இவன் தில்லை ஆலயத்துக்குப் பொன் வேய்ந்த செய்தி தக்கயாக பரணியிலும் வருமாறு குறிக்கப் பெற்றுள்ளது.

'நீடிய வெண்டிசை நீழல் வாய்ப்ப
நேரிய தெக்கண மேருவென்ன
மூடிய தில்லை வனததமைத்த
பெரிய பெருமாளை வாழ்த்தினவே' (773)

இவனுக்குப் பெரிய பெருமாள் என்ற பட்டம் உண்மையை,

" பெரிய பெருமாள் பெரும்பவனி வீதி
இரிய வெதிரே விழுந்தாள் — வரிவளை "
(குலோ - உலா 145 - 146)

என்பதாலறியலாம்.

இவைகளால் விக்கிரம சோழன் புரியத் தொடங்கிய திருப்பணிகளை, இவன் பின்னும் செவ்வனே ஆற்றி முற்றுவித்திருக்கலாம் எனத் தோன்றுகிறது. எனினும் தகப்பனைப்போல் இவன் சமய விஷயத்தில் பரந்த கடும்பற்றற்ற உள்ளத்தினன் அல்லன் என்பது புலனும்.

## 3. மனைவியர், பட்டப்பெயர் முதலியன

திருமலைவாடி சாசனத்தால் இவனுக்கு இரு மனைவியர் இருந்தனர் என்று அறிகிறோம். ஆனல் பட்டத்தரசி, தியாகவல்லி என்ற புவனமுழுதுடையாளாகும். மற்றொருத்தி, மலையமான் வமிசத்தைச் சேர்ந்த முக்கோக்கிழான் என்பாள்.[1] குலோத்துங்கன் II-க்குத் தலைநகர் கங்கைகொண்ட சோழபுரமேயாகும். இவன் ஆட்சியின் மூன்றாவது ஆண்டில், விக்கிரம சோழபுரத்தில் உள்ள ஒரு அரண்மனையில் வசித்து வந்ததாகக் கூறப்படுகிறது.[2]

இவன் சிறப்பாகப் பெற்றிருந்த பட்டப் பெயர் 'அநபாயன்' என்பதாகும். இதைப் பின்கண்ட

[1] 85 of 1895. [2] 271 of 1915.

குலோத்துங்க சோழன் உலா வடிகளாலும் தெளிய லாம்.

"ஆழிப் பெருமா ளபய னனபாயன்
சூழிக் கடாயானை தோன்றுதலும்" (317-18)

"பெருமா னனபாயன் பேரிய மூன்றும்
தருமார வாரந் தழங்க" (627-28)

இவனுடைய ஓலைநாயகனும், 'அநபாய மூவேந்த வேளான்' எனப் பட்டப் பெயர் பூண்டுளான். சோழர்கள் காலத்தில் அரசர்கள் தங்களது பட்டப் பெயர்களைத் தமது கீழுள்ள அதிகாரிகளுக்கும் படைத்தலைவர்களுக்கும், சிற்றரசர்களுக்கும் சூட்ட அப்பெயரை அவர்கள் தமது இயற் பெயருடன் சேர்த்து வைத்துக்கொள்வது பெரு வழக்காக இருந்தது எனச் சாசனங்களால் அறிகிறோம். இதற்கு மேற்கண்ட பெயரே தக்க எடுத்துக் காட்டாகும்.

பின்னும் ஒரு ஊர் அரசன் பட்டப் பெயருடன் சேர்ந்து, 'அநபாயநல்லூர்[1]' என வழங்கிவந்ததும் இதைத் தெளிவிக்கும். இவனுக்குப் 'பொன்னம்பலத்தைப் பொன் வேய்ந்த பெருமாள்[2] என்றும், 'திருநீற்றுச் சோழன்' என்றும் புனை பெயர்கள் இருந்தனவாகத் தெரிகிறது. ஒரு ஊரின் பழம் பெயரை மாற்றி "நம்பேரால் திருநீற்றுச் சோழன் திருமடை விளாகம்"[3] என்று இடுமாறும்,

[1] 271 of 1915.
[2] 157 of 1902.
[3] 106 of 1901

* அநபாயநல்லூர்—இது வடஆற்காடு ஜில்லா செய்யாறு தாலூக்காவிலுள்ள பிரம்மதேசம் உருத்திரகோடீசுவரர் சிவாலயத்துக்கு விடப் பட்டது. (371 of 1915).

"பழம்பேர் தவிர்ந்து குலோத்துங்கசோழன்
திருநீற்றுச் சோழநல்லூர் என்று பேரிட்டு"[1]

என்று கூறுவதாலும் அப்பெயர் வழங்கினமை தெளிவாகும். இவன் தன் கீழுள்ள அதிகாரிகளுக்கும் பல தானங்கள் கொடுத்திருப்பதாக அறிகிறோம்.

இவன்கீழிருந்த சில அதிகாரிகள் வருமாறு.

1. மோஹன் ஆழ்க்கொல்லி என்ற குலோத்துங்க சோழக் காடவராயன். இவன் பல்லவர் மரபைச் சேர்ந்தவன். இவன் தென்னாற்காடு ஜில்லா, திருமாணிக்குழி என்ற கிராமத்தைச் சுற்றிலுமுள்ள சில பாகங்களுக்குக் காவல் அதிகாரியாக இருந்தான் எனத் தெரிகிறது.[2]

2. கூடலூர் பள்ளி ஆளப் பிறந்தான் மோஹன். இவன் திருவெண்ணெ நல்லூரைச் சார்ந்த திருத்தொண்டீசுரம் கோயில் எம்பெருமானுக்குப் பொன் நகைகளும், வெள்ளிப் பாத்திரங்களும் கி. பி. 1140-ல் செய்து கொடுத்தான்[3]. இவன் ஐந்து வருஷங்கள் கழித்து, திருவதிகை கோவிலுக்குத் தனக்குச் சொந்தமான சில நிலங்களையும், சொத்துக்களையும் பெரும்பாடிக்காவலாக அளித்துள்ளான். அப்பொழுது 'பன்னைக முத்தரையன் ஆளப்பிறந்தான் அரச நாராயணன்' எனப் பட்டம் புனைந்துள்ளான். கூடலூர் என்பது திருமுனைப்பாடியைச் சேர்ந்த பெருங்கலூர் நாட்டில் இருப்பதாகக் கூறப்பெற்றுள்ளது.

[1] 363 of 1911. [2] 157 of 1902. [3] 374 of 1902.

பிற்றை ஆண்டில் இவன் திருவதிகைக் கோவிலுக்குத் தேவதான கிராமங்களிலிருந்து தனக்கு வரவேண்டிய பின்னும் சில வரிப் பணத்தைத் தானமாக அளித்துள்ளான். அவ்வுழி இவன், 'கூடலூர் பன்னுக முத்தரையன் ஆளப் பிறந்தான் ஏழிசை மோஹன் குலோத்துங்க சோழக் காடவராயன்'[1] எனப் பட்டம் தரித்துள்ளான்.

பின்னும் ஈர் ஆண்டுகள் சென்றவாறே இவன், விருத்தாசலத்துள்ள சிவபெருமானுக்கு 'ஏழிசை மோஹன்' என்ற பெயருள்ள ஒரு மண்டபம் கட்டியிருக்கிறான். அப்பொழுது, 'ஆளப் பிறந்தான் ஏழிசை மோஹன் என்கிற குலோத்துங்க சோழ காடவர் அதிட்டன்' என்ற பெயர் பூண்டுள்ளான்.[2] இங்ஙனம் சிற்றரசர்கள் தமது பட்டப் பெயரைப் பெருக்கிக் கொண்டு போய், நாளடைவில் வலிமையும் ஆளுந் திறமையும் மிக்கவராய் வலுத்தனர். இவர்களே பிற்காலத்தில் சோழ ராஜ்யத்தின் வீழ்ச்சிக்குக் காரணமாயினர்.

3. சீயகங்கன் என்றவன் ஒரு கங்கர் தலைவன். அவன் காளஹஸ்திரியில் சிவபெருமானுக்குச் சில தானங்கள் கி. பி. 1147-ல் அளித்துள்ளான்.[3]

4. கட்டிதேவன் என்கிற குலோத்துங்க சோழ யாதவராயன் என்பவன், ஒரு கிராமம் முழுவதையும், பார்ப்பனரையும் தபஸ்விகளையும் ஆராதிப்பதற்காக, கி. பி. 1139-ல் தானமாகக் கொடுத்துள்ளான்.[4]

[1] 45 & 46 of 1903. [2] 137 of 1900. [3] 93 of 1922. [4] 83 of 1922.

புதுக்கோட்டைச் சமஸ்தானத்திலுள்ள திருகோ கர்ணம் என்னும் ஊரில் கண்ட ஒரு சாசனத்தால், அரசர்களுக்கு முடி சூட்டு விழா முடித்து வைக்கும் உரிமை வாய்ந்த ஒரு பார்ப்பனக் குழுவினரைக் கிள்ளி என்னும் அரசன் தென்கவிர நாட்டில் தனியாக இருக்குமாறு ஏற்பாடு செய்திருப்பதாக அறியலாம்.

இங்ஙனம் குலோத்துங்கன் II பதினாறு அல்லது பதினேழு ஆண்டு சீருஞ் சிறப்பும் பெருக ஆட்சி புரிந்தான். இவன் மரிப்பதற்கு நான்கு ஆண்டு களுக்கு முன்னரே தன் மைந்தன் இரண்டாம் இராஜ ராஜனுக்கு இளவரசு சூட்டித் தன்னுடன் வைத்து ஆண்டு வந்தான்.

# 6. இரண்டாம் இராஜராஜன் ஆட்சி

## 1. மெய்க்கீர்த்தி, மனைவியர் முதலியன

குலோத்துங்கன் II கி. பி. 1150-ல் விண்ணுலகடைய அவன் மகன் இரண்டாம் இராஜராஜன் அரியணை ஏறினன். இவன் பரகேசரி இராஜராஜன் எனப்படுவான். இவனைப்பற்றிப் பல மெய்க்கீர்த்திகள் உள்ளன. அவைகளால் இவன் நாட்டின் பரப்பைப்பற்றியும் அரசியலைப்பற்றியும் நன்கு அறியலாம்.

இம்மெய்க்கீர்த்திகள் இவன் போர்த்திறன் ஒன்றையும் புகலாமையால், தந்தை யொப்பவே, இவனும் வாணளை அமைதியாய் ஆடலிலும், பாடலிலும், அருங்கலை விநோதத்திலும் போக்கினன் என உணரக் கிடக்கிறது.

இவன் மெய்க்கீர்த்திகள் 'பூமருவிய திருமாதும்' எனத்தொடங்கி மிகக இலக்கியச் சுவை ததும்ப, ஆட்சியின் சிறப்பை விரித்துக்கூறுவனவாம். இவைகளில், இவன் மனைவி 'அவனி முழுதுடையாள்' என்பாள் அரசனுடன் அரியணையில் வீற்றிருந்தாள் எனக் காணப்படுகின்றன[1]. மற்றொரு மெய்க் கீர்த்தி 'பூமருவிய பொழில் ஏழும்' எனத் தொடங்கி இவன் காலத்தே தமிழ்

[1] 243 of 1930.

இலக்கியம் மிக்க மேனிலையை எய்தி இருந்ததென்றும், இவனுக்கு 'முத்தமிழ்க்குத் தலைவன்' என்ற பட்டம் உண்டு எனவும், மேற்கண்ட அவனிமுழுதுடையாள் ஒழிய, 'புவன முழுதுடையாள்' 'தரணி முழுதுடையாள்' எனவும் வேறு இருமனைவியர் இவனுக்கு உண்டு எனவும் தெரிவிக்கிறது[1]. இப் புவன முழுதுடையாள் பெயர் பின்வரும் இராஜ ராஜ சோழன் உலா,

"தவன குலதிலகன் றன்பெருந் தேவி
புவன முழுதுடைய பூவை" (77-78)

என்ற அடிகளாலும் தெளியலாம். இன்னுஞ் சில மெய்க் கீர்த்திகள் 'புயல் வாய்த்து வளம்பெருக'[2] எனவும் 'கடல் சூழ்ந்த பார்மாதர்'[3] எனவும் தொடங்குகின்றன. இவன் வைணவ சமயத்தை வெறுத்து, கிளர்ந்தெழச் செய்தான் என்பது 'விழுந்த அரி சமயத்தையும் மீள எடுத்து' என மெய்க்கீர்த்தி கூறுவதால் தேறலாம்.

## 2. நாட்டின் பரப்பு

இவன் காலத்து நாட்டின் எல்லையை, அங்கங்குக் காணப்படும் கல்வெட்டுக்களைக்கொண்டு குறிக்க இயலும். குவலால நாட்டில் (Kolar) சீறூர் என்ற ஊரைச் சார்ந்த, ஒருமலை நாட்டுக் காடுவெட்டித் தலைவன் இவன் ஆட்சி ஏழாம் ஆண்டில் ஒரு கோவில் கட்டினதாக ஒரு கல்வெட்டு இருக்கிறது.[4]

[1] 16 of 1903. [2] 165 of 1908. [3] 219 of 1901. [4] 486 of 1911.

சேலம் ஜில்லா நிகரிலி சோழமண்டலத்துள் கங்க நாட்டைச் சார்ந்த தகடூர் என்ற ஊரில், கி. பி. 1164-ல் தகடூர்க் கிழவன் என்பவன் கொடுத்த தான சாசனத்தி லிருந்து, கங்க நாட்டின் கீழ்ப்பாகமாகிய கொங்கு நாட்டிலும், சோழ அரசாட்சி பரவி இருந்தது என விளங்கும்.[1] தெலுங்கு நாட்டில் காணப்படும் பல சாசனங்களி லிருந்தும், வேங்கி நாடு முழுவதும் இவன் ஆட்சியின்கீழ் இருந்தது எனத் தெளிவாகும். ஆகவே, வடக்கே கோதாவரியிலிருந்து, மேற்கே மைசூர் சில பாகங்களும் உட்பட, தெற்கே குமரி வரையில், இராஜ ராஜன் II ஆண்டு வந்தான் என்பது உறுதியாகத் தெரிகிறது.

## 3. ஆட்சியின் வலிக் குறைவு

முதல் குலோத்துங்கன் மிக்க சிறப்புடன், பெருவெற்றிகளை எய்தி அரசாண்ட போதிலும், அவன் இறுதிக் காலத்தில் வடக்கில் வேங்கி நாட்டிலும், மேற்கே ஹொய்சலர் நாட்டிலும் குழப்பமும் கலகமும் மேலைச் சளுக்கர்களால் நேர்ந்து, அவைகளின் சில பாகங்களை இழக்குமாறு ஆயிற்று என்றும்; பின் விக்கிரம சோழன் இவற்றைக் கைப்பற்றினன் எனவும், முன்னமே கூறினோம். எனினும் சோழநாட்டில் தற்போது சிற்றரசர்கள் வலுத்து வரலாயினர். மத்திய அரசியலின் செங்கோலும், ஆணையும் எல்லையிலுள்ள சிற்றரசர்களுக்கு அத்

[1] 267 of 1901.

துணை உறுதியாய்த் தோற்றவில்லை. ஆகவே, சிற்றரசர்களுக்குச் சுயேச்சை பெருகத் தொடங்கிற்று.

இராஜ ராஜன் II தன் பாட்டனைப்போல் தன் நாட்டில் அடிக்கடி மேற்பார்வைக்காகச் சுற்றுப் பிரயாணம் செய்யவில்லை. அத்துடன் அரசர்கள் வீரம் வாய்ந்தவர்களாய் மேன் மேலும் நாடுகளைக் கைப்பற்ற எண்ணமுடையவராய்ப் படை எடுத்து வந்தாலன்றிச் சிற்றரசர்கள் செவ்வனே அடங்கி ஒழுகார். அங்ஙனம் இராஜ ராஜன் II தன் திறலையும் விறலையும் மக்களுக்குக் காட்டாமையால் மத்திய ஆட்சியின் வலிமை இப்பொழுது குன்றியது என ஊகிக்கலாம்.

குலோத்துங்கன் II, இராஜ ராஜன் II இவர்களுடைய சாசனங்களிலிருந்து அரசர்கள் முன்போல், வெற்றியை நாடுவதும், தமது வாகுவலத்தின் பெருமையை வெளியிடுவதும், குடிகளுக்கு அமைதியை அளிப்பதும், அவர்களுக்கு இன்றியமையா ஆக்கங்களைத் தேடுவதுமாகிய துறைகளில் முயலவில்லை எனத் தெளிவாகக் கூறலாம்.

## 4. தலைநகர், பட்டப்பெயர் முதலியன

கங்காபுரி அல்லது கங்கைகொண்டசோழபுரம் தான் தலைநகராக இக்காலத்திலும் விளங்கிற்று. இவனுக்குச் 'சோளேந்திர சிம்மன்,'[1] எனப் பட்டமுள்ளதாகச் சாசனத்தாலும்,

---

[1] 336 of 1917.

"முனியும்
பொறைவிட் டெயில்விட்டுப் பொய்கை கவிக்குச்
சிறைவிட்ட சோளேந்திர சிங்க" (251-52)

" பழகிய
தோளிரண்டுஞ் சோழேந்த்ர சிங்கன் திருத்தடந்
தோளிரண்டு மென்றென்று சொல்லியும்" (685-86)

என்ற இராஜராஜ சோழன் உலாவாலும் அறியலாம்.

மேலும் தக்கயாகபரணி,

'அலைகொன்று வருகங்கை வாராமன் மேன்மே
லடைக்கின்ற குன்றா டறுக்கின்ற பூதம்
மலைகொன்று பொன்னிக்கு வழிகண்ட கண்டன்
வரராச ராசன்கை வாளென்ன வந்தே'. (549)

எனக் கூறுவதால் 'கண்டன்' என்ற பட்டப்பெயர் இவனுக்கு உண்டு எனவும் அறியலாம். ஆயின் இப்பெயர் சாசனங்களில் கண்டிலம். இராஜராஜ சோழன் உலாவில் இறுதியிலுள்ள,

அன்று தொழுத வரிவை துளவணிவ
தென்று துயில்பெறுவ தெக்காலங்—தென்றிசையி
னீரதிரா வண்ண நெடுஞ்சிலையை நாணெறிந்த
வீரதரா வீரோ தயா.

என்ற வெண்பாவால் இவனுக்கு 'வீரதரன்' என்றும், 'வீரோதயன்' என்றும் பட்டப்பெயர் உள்ளதாகவும் அறியக்கூடும். பின்னும் 'இராஜகம்பீரன்'*

* கும்பகோணத்துக்கு அண்மையில், தாராசுரம் என வழங்கும், இராஜராஜபுரத்திலுள்ள சிவாலயத்தில், ஓவிய நுட்பமமைந்த,

எனவும் 'எதிரில் சோழன்[1]' எனவும் 'நெறியுடைச் சோழன்' எனவும் புனை பெயர்கள் உண்டு என்று தக்கயாக பரணியாலும், மெய்க்கீர்த்திகளாலும் அறியலாம்.

இவன் காலத்துச் சில சிற்றரசர்கள் வருமாறு:—

1. மலையமான் பெரிய உடையான் இராஜராஜ மலையகுலராஜன் என்பானும், மலையமான் ஆதிமல்லன் சொக்கப்பெருமான் என்கிற கிளையூர் ராஜகம்பீர சேதிராயன் என்பானும், திருக்கோவலூரைச் சுற்றியுள்ள மலேமான் நாடு என்னும் பிரதேசத்தில் சிற்றரசர்களாக இருந்தனர் எனத் தெரிகிறது.[2]

2. காரிகைக் குளத்தூர் பல்லவராயர் என்பார், பல்லவராயன் பேட்டையிலுள்ள இராஜராஜேசுவர உடையாருக்கு ஒரு கோவில் கட்டியுள்ளார்.[3]

3. கரிகாலன் குலத்துதித்த திரிபுவன தேவ சோட மஹாராஜு என்பானும், ஜிக்கிதேவ சோட மஹாராஜு என்பானும், தெலுங்கு நாட்டில் ஆண்ட சிற்றரசராவர்.[4]

---

'இராஜ கம்பீரன் திருமண்டபம்' என்ற ஒரு மண்டபமும்; திருப்பனந்தாளிலிருந்து கொள்ளிடத்துக்குப் போகும் வழியில், 'இராஜ கம்பீரன் திருவீதி' என ஒரு தெருவும் உள்ளன.

[1] 128 of 1929. [2] 411 of 1909.
[3] 193 of 1897. [4] 434 & 435 of 1924.

## 5. ஆட்சியின் முடிவு

இராஜராஜன் II இருபத்தாறு ஆண்டுகள் ஆட்சி புரிந்ததாக ஒரு சாசனத்தாலும், மற்றொரு திருஒற்றியூர் சாசனத்தால் இருபத்தேழு ஆண்டுகள் ஆண்டதாகவும் ஏற்படுகின்றது[1]. வேறொரு சாசனத்தால் இருபத்தெட்டு ஆண்டுகள் ஆண்டான் எனவும் உணரக்கூடும்[2]. எவ்விதத்திலும் இவன் ஆட்சி, கி. பி. 1173-ம் ஆண்டுடன் முடிவுபெறும். இவன் காலத்திலேயே, இவனுடைய பெண்வயிற்றுப் பேரனை இராஜாதிராஜன் என்பானைத் தனக்குப் பின் ஆளுவதற்காக இவன் தேர்ந்தெடுத்து, அவனுக்குத் தான் இறப்பதற்கு எட்டு ஆண்டுகளுக்கு முன்னரே இளவரசுப் பட்டம் சூட்டித் தன்னுடன் வைத்து இராஜராஜன் II ஆண்டு வந்தான். இவனுக்கு இறக்குங்கால், ஓராண்டுள்ள ஓர் ஆண்மகவு இருந்ததென்று சிலரும், இவனுக்கு இரு பெண்மக்களன்றி ஆண்மகன் இல்லையெனச் சிலரும் கூறுவதால், இவனுக்கு உண்மையாக ஆண்மகன் உண்டா என்ற செய்தி தேறமுடியவில்லை.

இராஜராஜன் II இறப்பதற்குச் சில ஆண்டுகளுக்கு முன்னரே, பாண்டிய நாட்டில் சோழர்களின் கீழ் அரசாண்டு வந்த இரு பிரிவினரான பராக்கிரம பாண்டியன் என்பானுக்கும், குலசேகர பாண்டியன் என்பானுக்கும் அரசுரிமையைக் குறித்து ஒரு பெரிய போர் தொடங்கிற்று. அதில்

---

[1] 703 & 704 of 1920. [2] 181 of 1899.

ஒரு பிரிவினர் ஈழத்தரசனை முதல் பராக்கிரம பாஹு-வின் உதவியை நாடவே, மற்றொரு பிரிவினர் இராஜராஜன் II உதவியைக் கோரினர். இரு திறத்தாருக்கும் பெரும் போர் நிகழ்ந்தது. அதில் இராஜாதிராஜன் சென்று பொருது உதவி செய்த அப்போரின் விரிவு, அவன் இளவரசாட்சியில் கூறப்படவேண்டிய முக்கிய நிகழ்ச்சியாதலால் இங்கு விரித்துக் கூறவில்லை. இங்ஙனம் உண்டான போரால் ஒருவருக்கும் நலன் பெருகவில்லை. இதன் பயனாகப் பாண்டியர்கள் வலிமை மிக்குப் பின் சோழ நாட்டையே அழித்தற்குக் காரணமாயினர் என்பது மட்டும் உணரத்தகும்.

# 7. அரசியல் நிலை

## 1. கருமத் தலைவர்கள்

சோழர்களின் ஆட்சி 'ஏகசக்ராதிபத்தியம்' அல்லது 'தனியரசாட்சி' ஆகவே இருந்து வந்தது. அரசன் தன்னிச்சைப்படி ஆளலாமாயினும், தன் கருமங்களனைத்தையும் அமைச்சர்களுடன் கலந்தே இயற்றுவது வழக்கமாக இருந்தது. இங்ஙனம் அரசனுக்கு ஆலோசனை கூறுவோர் 'உடன் கூட்டது அதிகாரிகள்'[1] என்று கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன. இவர்கள் அரசனது பட்டப் பெயரையும் தமது இயற்பெயருடன் சேர்த்து வைத்துக் கொண்டிருப்பதால், இவர்கள் அரசன் ஆலோசனைச் சபையார் எனக் கருதல் தகும். இவர்கள் எப்பொழுதும் மன்னனுடன் துன்னியே உறைவர். இவர்கள் அரசனுக்கு நுண்ணிய செய்திகளைத் தெள்ளிதின் விரித்துரைத்தும், அவன் ஆணைகளைப் புறத்தோர்க்கு அறிவித்தும் துணைபுரிவர்.

அரசன் ஆணையைக் கேட்டு 'ஆணத்தி' எழுதப் பல அதிகாரிகள் உண்டு. அவர்களுக்குத் 'திருமந்திர ஓலை எழுதுவோர்' என்று பெயர். அவர்கள் தலைவன் 'திருமந்திர ஓலை நாயகன்' எனப் பெயர் பெறுவான். அவர்கள், அரசனுக்குத்

---

[1] S. I. I. Vol. III, Page 35.

தொழிலியற்றுங் காலங்களைத் தெரித்துரைப்பர். சில சாசனங்களில் 'நம் ஓலை நாயகம் நமக்குச் சொல்ல' எனக் கூறுவதால் இது வெளிப்படை.

அரசன் ஆணைகள், தான் இன்ன இடத்திலிருக்கையில் இவ்வாணை பிறப்பிக்கப்பட்டது என்பதைத் தெரிவிக்கும். காட்டாக, 'ஸ்ரீ ராஜராஜ தேவர் தஞ்சாவூர்ப் பெரிய செண்டு வாயிற் சித்திரகூடத்துத் தெற்கில் கல்லூரியில் எழுந்தருளி'[1] என்று ஒரு சாசனம் தொடங்குவதால் இது புலனும். இவ்வாறு அரசன் அனுப்பும் கட்டளைகளைப் பெற்ற ஊரார், ஊர்ப் பொது மண்டபத்தே கூட்டங்குறைவறக் குழுமியிருந்து வாசித்து, உத்தரோத்தரம் பயன்படுவதாயின் தம்மூர்த் தேவாலயத்தே சுவரில் அவைகளைப் பொறித்து வைப்பர்.

இவ்வாணைகளைத் தீட்டி வைப்பவர் 'புரவுவரி' என்றும் 'தீட்டு' என்றும் பெயர் பெறுவர். அவர் 'வரிப் பொத்தகத்தில்' இவைகளைத் தீட்டி வைத்த பின்பே, அதிகாரிகளுக்குக் காட்டிப் 'பட்டோலை' அதிகாரியைக் கொண்டு ஊராருக்கு அனுப்புவார். இனி 'விடை அதிகாரிகள்'[2] எனவும் சில அதிகாரிகள் உண்டு. அவர்கள், கிராமச் சபையினின்றும், பிற அதிகாரிகளிடத்திருந்தும் வரும் ஓலைகளைப் படித்துப் பார்த்து, அவைகளுக்குத் தக்க விடை அனுப்புவர்.

---

[1] S. I. I. Vol. III, Page 14.
[2] Do Page 36.

## 2. நாட்டின் பிரிவுகள்

சோழ ராஜ்யம் பல மண்டலங்களாகவும், மண்டலங்கள் கோட்டங்களாகவும், கோட்டங்கள் கூறுகளாகவும், கூறுகள் வளநாடுகளாகவும் பகுக்கப்பட்டிருந்தது. இம்மண்டலங்க ளெல்லாம் அரசனுடைய பட்டப் பெயராலேயே வழங்கப்படும். ஜயங்கொண்ட சோழ மண்டலம், இராஜராஜ சோழமண்டலம், மும்முடிச்சோழ மண்டலம், நிகரிலி சோழ மண்டலம் என்பதால் இதைத்தெளியலாகும். தொண்டை நாடு, ஜயங்கொண்ட சோழ மண்டலமாகும். இலங்கை மும்முடிச் சோழ மண்டலமாகும். நுளம்பப்பாடி நிகரிலி சோழ மண்டலமாகும். பாண்டி நாடு இராஜராஜ சோழ மண்டலமாகும்.

இம்மண்டலங்களை ஆள்வோர் 'மண்டலீகர்' எனப்படுவார். இத்தகைய பதவியைப் பெரும்பாலும் அரச மரபினரே பெற்று வந்தனர் என்பதை முன்னர்க் கூறியுள்ளோம். இராஜராஜ சோழன் காலத்தில் சோழ மண்டலம், இராஜேந்திர சிங்க வளநாடு, இராஜாச்சிரய வளநாடு, க்ஷத்திரியசிகாமணி வளநாடு, உய்யக்கொண்டார் வளநாடு, நித்தவினோத வளநாடு, அருண்மொழித்தேவ வளநாடு, கேரளாந்தக வளநாடு, இராஜராஜ வளநாடு, பாண்டிய குலாசனி வளநாடு என ஒன்பது வளநாடுகளாகப் பகுக்கப்பட்டிருந்ததை அறியலாம்.[1]

---

[1] S. I. I. Vol. II-Introduction.

இவ் வளநாடுகள் இடைஇடையே தற்காலத்தைப் போல் பெரும்பாலும் ஆறுகளால் பிரிக்கப்பட்டு இருந்தன எனத்தெரிகிறது. ஏனெனில் ஒரு கல்வெட்டில் ‘அரிசிலுக்கும் காவிரிக்கும் நடுவான உய்யக் கொண்டார் வளநாட்டு திரைமூர் நாட்டுப் பள்ளிச்சந்தம், இறக்கின நெற்குப்பை அளந்தபடி நிலம்[1]’ எனக் குறிக்கப்படுவதால், உய்யக்கொண்டார் வளநாடு, அரிசிலாற்றுக்கும் காவிரிக்கும் இடையிலுள்ள பூபாகம் என்பது போதரும். மாயவரம் தாலூக்கா இலுப்பைப் பட்டியிலுள்ள மற்றொரு சாசனத்தில் கொள்ளிடத்துக்கும் காவிரிக்கும் இடையுள்ள பிரதேசம், விருதராச பயங்கர வளநாடு என வழங்கி வந்ததையும் அறியலாம்.

ஒவ்வொரு சோழ மன்னனும் தனது காலத்துக்கு முன் வளநாடுகளுக்கு இடப் பெற்றிருக்கும் பெயர்களைத் தான் அரியணை ஏறியதும் நீக்கிவிட்டுத் தனது பட்டப் பெயரைச் சூட்டி வழங்கச் செய்வது வழக்கம். ராஜராஜன் காலத்து வழங்கிய க்ஷத்திரிய சிகாமணி வளநாடு முதல் குலோத்துங்கன் பட்டமெய்தியதும், குலோத்துங்க சோழ வளநாடு என மாற்றம் அடைந்தது.

வளநாடுகளின் உட்பகுதி நாடுகளாகும், அவைகளிற் சிலவற்றைக் கூற்றங்கள் எனவும் கூறுவதுண்டு. பல கிராமங்கள் சேர்ந்தது கூற்றமாகும். சில சமயங்களில் பெரிய கிராமங்களைத் ‘தனியூர்’ எனவும் அவைகளுள் ஒன்றே ஒரு கூற்றமாகவும் வழங்

1. I. S. I. I. V. of II, No 4.

கப் பெறும். பல தனியூர்கள் சதுர்வேதி மங்கலம் எனவும் படும்.

## 3. முடிமன்னனும் இளமன்னனும்

இந் நாடுகளுக்குச் சோழ மன்னரே தலைவராவர். அவர்கள் 'சக்கரவர்த்திகள்' எனப் பட்டம் பெறுவர். முதல் குலோத்துங்கன் காலம் முதல் அவர்கள் 'திரிபுவன சக்கரவர்த்திகள்' எனவும் பட்டம் சூட்டிக் கொண்டனர். இவ் வரசர்களுக்கு வெகு காலம் தஞ்சாவூர்தான் தலைநகராக இருந்துவந்தது. இராஜேந்திரன் I காலத்திலிருந்துதான் கங்கை கொண்ட சோழபுரம் தலைநகரமாயிற்று. அரண்மனையில் சூழ்பரிவாரமும், ஏவற்பரிவாரமும் பலர் உண்டு. தவிர அரசனுக்கு மெய்க்காப்பாளர் (Body-guards) எனத் தனியாகப் பாதுகாக்கும் வீரர்கள் உண்டு.

சோழ மன்னர்களில் தமக்குப் பல மக்களிருப்பினும், ஒவ்வொரு மன்னனும் தனக்குப் பின் பட்டம் பெறுவதற்குரியாரை முன்னரே தேர்ந்தெடுத்து, அவருக்கு இளவரசுப் பட்டம் சூட்டித் தன்னுடன் வைத்துக் கொண்டு அரச கருமங்களில் பழக்குவதுண்டு என்று முன்னரே உரைத்தாம். இவ் விஷயத்தை முறையே, முதல் குலோத்துங்கன் ஆட்சியிலும், விக்கிரம சோழன் ஆட்சியிலும், குலோத்துங்கன் II ஆட்சியிலும், இராஜராஜன் II ஆட்சியிலும் காணலாம்.

தலைநகரில் பெரிய பண்டாரம் ஒன்றும், கோயில்கள் ஒவ்வொன்றிலும் ஒரு பண்டாரமும் வைக்கப்பட்டிருக்கும். படைத் தலைவர்களுக்கும், ஏனைய உத்தியோகஸ்தர்களுக்கும் மாத நிவேதனம் வழங்கும் வழக்கம் உண்டெனத் தெரிகிறது. கோயிற் பண்டாரங்களில் நிலங்களிலிருந்து வரும் வரிப்பணமும், பிறர் தானம் கொடுக்கும் பொருளும் வந்துசேரும். இக் கோயிலிலுள்ள பொருளில், கோயிற் செலவுக்குப்போக எஞ்சியதை நாட்டின் நன்மைக்காகவே செலவிட்டு வந்தனர் எனக்கருத இடமுண்டு. முற்காலங்களில் குடிகளுக்கு முட்டுப்பாடு நேர்ந்தால், தமது நிலத்தை ஈடாக வைத்துக் கோயிற் பண்டாரத்தே பணம் கடனாகப் பெறுவது வழக்கமுண்டு. இவ்வாறு தாம் பெறும் பணத்துக்குப் பொலிசை (வட்டிப்பணம்)யாக, கோயிலுக்கு வேண்டும் எண்ணெயோ, கற்பூரமோ, சபையார் கட்டளைப்படி பணம் பெற்றவர்கள் கொடுக்க வேண்டும்.

## 4. படைகள்

சோழ மன்னர்கள் மூவகைப் படைகள் மட்டுமே வைத்திருந்தனர் என்பது தெரிகிறது. யானைப் படையை இயக்குவோர் குஞ்சரமல்லர் எனவும், ஆனையாட்கள் எனவும், குதிரைப் படையைச் செலுத்துவோர், பரிக்காரர் எனவும், குதிரைச் சேவகர் எனவும், காலாட்படையினர் தூசிப்படையினர் எனவும் பெயர் பெறுவர். பல்லாயிரம் வீரர்கள் எக்காலத்தும் போருக்குச் சித்தமாக இருப்பர்.

இவர்கள் வில், வேல், வாள், அம்பு, விட்டேறு என்ற ஆயுதங்களை உபயோகித்தனர். பின் மூன்றும் குலோத்துங்கன் காலத்தே ஒருவன் பெயர் ‘எரி மருந்து நாராயணன்’ எனக் காணப்படுவதால், வெடிமருந்து அக் காலத்தே உபயோகிக்கப் பட்டிருக்கலாம் என ஐயுற இடம் உண்டு.

சோழர்களுக்குக் கடற்படையாகிய கப்பற் படை உண்டு என்பது திண்ணம். இவற்றின் உதவியைக் கொண்டே இராஜேந்திரன் முதலியோர் கடல் கடந்து கடாரத்தைக் கொண்டனர். ‘காந்தளூர்ச் சாலை கலமறுத்தருளி’ எனப் பன்முறை இவர்கள் கல்வெட்டுக்களில் காணப்படுவதால், கப்பல் போரும் நிகழ்வதுண்டு என விளங்குகிறது.

படைத் தலைவர்களுக்கு, மகா சாமந்தன், சேனாதிபதி, தண்டநாயகன், தண்டத்தலைவன் எனப் பட்டப் பெயர்களுண்டு. தற்காலம் போலவே ஒவ்வொரு படைப் பிரிவுக்கும் தனித்தனிப் பெயர் அளிக்கப்பட்டிருந்தது. ‘பராந்தக கொங்கவாளர்’[1] ‘நிகரிலி சோழன் தெரிந்த உடநிலைக் குதிரைச் சேவகர்’ ‘மும்முடிச் சோழன் தெரிந்த ஆனைப்பாகர்’ என்ற பெயர்களால் இது தேற்றம். படையாளர்கள், போரற்று அமைதியாயுள்ள நாளில் பயிர்த்தொழில் முதலியன செய்துகொண்டு இருப்பதுண்டு. வென்ற நாடுகளில் அரசர் ‘நிலைப்படை’யை நிறுவி வைப்பதும் வழக்கமுண்டு.

---

[1] S. I. I. Vol. II, Page 274.

# 5. போர் முறை

ஒரு அரசன் எதிரியை வென்றால், அவன் பெண்டு, பண்டாரம், கொடி முதலியவைகளைக் கைப் பற்றுவதும், மனைவி மக்களை மூக்கு முதலிய உறுப் புக்களை அறுத்து மான பங்கப்படுத்துவதும், அவர் நாட்டிலுள்ள சில ஊர்களைத் தீக்கொளுவுவதும் வழக்கமென அறியலாம்.

பல சமயங்களில், சோழ அரசர்கள் தம்மால் கைக்கொள்ளப்பட்ட நாட்டைத் தோற்ற மன்னர் களுக்கே மீண்டும் அளித்து அவர்களைத் தம்கீழ் ஆளுமாறு செய்விப்பதும், தமது மக்களை அவர்களுக் குக் கொடுத்து மணஞ் செய்வித்து நட்பினராக்கி வைத்துக் கொள்ளுதலும் வழக்கமாகும். பின்னுஞ் சிலபோது தோற்ற மன்னனை, யானைக் காலிலிட்டு இடறச் செய்வதும், அவன் தலையைக் கொய்து கொண்டு போவதும் உண்டு.

போர்க் களத்தில் வெந்நிட்டு ஓடுபவனை படை யாளர் ஒருகாலும் அணுகுவது கிடையாது. ஊர்களை அழிக்கும்போது குளங்களை இடித்துப் பாழாக்குவது இல்லை. தோற்ற மன்னன் புரிந்துள்ள அறச் செயல் களை ஒருபோதும் அழிப்பது இல்லை.

போரில் இறந்த வீரர்களுக்கும், வேட்டை ஆடும்போது மடிந்தோர்க்கும், அவர் நினைவுக்கு அறிகுறியாக நடுகல் அல்லது மாஸ்திக்கல் என்று அவர்கள் போல் உருவந்தீட்டி கல்லொன்று நடு வது வழக்கம் உண்டு.

## 6. சமய நிலை

சோழ மன்னர்கள் பெரும்பாலும் வைதிக மதத்தினராகவே திகழ்ந்தனர். முதல் குலோத்துங்கனைப் பற்றிக் கூறுங்கால் கவிச்சக்கரவர்த்தி சயங்கொண்டார்,

*‘வேதங்கள் நான்கினையும் வேதியர்*
*பாற் கேட்டருளி.’* கலிங்கத்துப் பரணி 230

என்றும்,

*‘முந்நூல் பெருமார் பிற்சிறந் தொளிரப்*
*பிறப்பிரண்டாவது பிறந்து சிறந்த பின்னர்.’*
கலிங்கத்துப் பரணி 220

என்றும் கூறுவதால் தெளிவுறலாம்.

ஆனால் வேத மதத்தின் உட்பகுதிகளான சைவம் வைணவம் என்ற இரு கூறுகளுள், இவ்வரசர்கள் பெரும்பாலும், சைவர்களாகவும், சிலர் சைவ சிகாமணிகளாவும் இலங்கி யுள்ளனர். பராந்தகன் நாள் தொட்டுக் குலோத்துங்கன் II நாள் ஈறுகச் சோழ மன்னர்கள் பலரும் தில்லை நடராஜப் பெருமான் ஆலயத்தின் மேல் விதானத்துக்குப் பொன் வேய்ந்து வந்தனர். எனினும் குலோத்துங்கன் II போல் வைண மதத்தைப் வெறுத்தவர்கள் மிகச் சிலரே. பலர் திருமாலுக்குக் கோயில்கள் கட்டியும் பிற சீரிய திருப்பணிகள் புரிந்தும் இருக்கின்றனர்.

சோழ மன்னர் பலர் நிலங்களைச் சில விஷ்ணு ஆலயங்களுக்குத் ‘தேவதானம்’ என்ற பெயருடன்

வழங்கியுள்ளனர். இத்துடன் இவர்கள் வேதத்துக்குப் புறம்பான சமண பௌத்த மதங்களையும் வெறுக்கவில்லை. சமணர்களுடைய பள்ளிகளுக்காகப் 'பள்ளிச் சந்தம்' என்ற பெயருடன் மிகுதியாக நிலங்களைத் தானம் செய்துள்ளனர். நாகைப்பட்டினத்திலுள்ள 'சூடாமணி விஹாரம்' போன்ற பௌத்த விஹாரங்களைக் கட்டியும், அவைகளின் பரிபாலனத்துக்கு ஆனை மங்கலம்போன்ற கிராமங்களைத் தானம் செய்தும், புத்தமதத்தைக் காத்துள்ளனர். இவையேயன்றி அறச்சாலைகளுக்குச் 'சாலாபோகம்' என்ற பெயருடன் மிகுதியாக நிலங்களை அளித்துமுள்ளனர். வேதமோதும் ஒழுக்கத்தில் சிறந்த பார்ப்பனருக்குப் 'பட்ட விருத்தி' என்னும் பெயருடன் நிலங்களை அளிப்பதுண்டு.

இங்ஙனம் மன்னன் ஊர்களைக் கோயில்களுக்கும் பிற அறச் செயல்களுக்கும் வழங்குங்கால், அவற்றிலுள்ள இறையிலி நிலங்களை ஒழித்தே கொடுப்பான். 'ஊர்நத்தமும், ஸ்ரீ கோயில்களும் குளங்களும், பறைச்சேரியும் சுடுகாடும் முதலியன நீக்க வேண்டியவை' என ஒரு சாசனத்தில் கண்டுள்ளது.[1]

## 7. அரசிறை

தற்காலத்தை யொப்பச் சோழ மன்னர்களுக்கும் முக்கியமான வருவாய் நிலவரியேயாம். இதை நிலவரி என்றும் காணிக்கடன் என்றும் கூறுவர்.

---

[1] S. I. I. Vol. II, Page 43.

இதை வசூலிப்பதே உத்தியோகஸ்தர்களது முக்கிய கடமையாகும். இதைப் பொன்னுங் காசுமாக வாதல், நெல்லின் ஒரு பகுதியாகவாதல் குடிகள் செலுத்துவது வழக்கம்.[1] அதிகாரிகள் இதைக் குடிகளிடமிருந்து வசூலித்து அரசாங்கப் பண்டா ரத்துக்கு அனுப்புவர். இரு ஆண்டுகள் நிலவரி கொடாமலிருந்து மூன்றாம் ஆண்டு தொடங்கிவிடின், ஊர்ச் சபையார் அன்னார் நிலத்தைப் பறிமுதல் செய்து விற்று வசூலிப்பர். பின் அப்பொருளை அரசாங்கப் பொக்கிஷசாலைக்கு அனுப்பிவிடுவர். இதைப் பின்வரும் சாசன வாக்கியத்தால் அறிய லாம். "ஸ்ரீ ராஜராஜ தேவர்க்கு யாண்டு 24-வது முதல் ஈராண்டு நிரம்பி மூவாண்டு ஊரிடுவரிப்பாடு இறைஇறுது போனர். காணி உடையாரைத் தவிர அவ்வவ் ஊர்களிலாரே விற்றுக்கொள்ளப் பெறு வார்களாகவும்."[2]

இறுக்கப்பட்ட வரிகளைக் கணக்கில் பதிவு செய் பவர்கள் 'வரியிலார்' எனப்படுவர். எவ்வாறு வரிப் பணத்தைச் செலவிடுவது என்று பகுத்துக் கொடுப் பவர் 'வரி கூறு செய்வார்' எனப்படுவார்.

இங்ஙனம் வரி வசூலிப்பதற்கு, முதலில் நிலம் முழுதையும் செவ்வனே அளந்து பதிந்திருந்தா லன்றி முடியாதல்லவா? ஆகவே சோழர்களில் முதல் இராஜராஜனும் முதல் குலோத்துங்கனும் விக்கிரம சோழனும் தமது ஆட்சியில் நாட்டிலுள்ள

---

[1] S. I. I. Vol. II, No. 4 & 5.

[2] S. I. I. Vol. III, No. 9.

நிலங்கள் முழுதும் ஒவ்வொரு முறை அளந்திருக்கின்றனர் என்பதை, 'உடையார் சுங்கந் தவிர்த்தருளின குலோத்துங்க சோழ தேவர்க்கு யாண்டு 19-வது அளக்கக் குறைந்த நிலம்'[1] என்று கூறுவதால் தெளியலாம். நிலங்களை அளக்குங்கால் மிகவும் நுட்பமாகக் கணக்கிட்டனர் என்பது 'இறையிலி நீங்கு நிலம் முக்காலே, இரண்டு மாகாணி, அரைக் காணி முந்திரிகைக் கீழ் அரையே இரண்டுமா, முக்காணிக் கீழ் அரையே இரண்டு மா,' முதலியவற்ருல் அறியலாம்.

மேற்கண்ட நிலவரியே யன்றி, நீர்க்கூலி, தறியிறை, தரகு, குசக்காணம், கண்ணாலக்காணம், தட்டாரப் பாட்டம், இடைப்பாட்டம், ஓடக்கூலி, செக்கிறை, வண்ணாரப்பாறை, நாடுகாவல், உல்கு, ஈழம் பூட்சி முதலிய பலவகை வரிகளும் இருந்தனவாகத் தெரிகிறது.[2] தற்காலத்தில் தொழில் வரி விதிப்பது போல் அக்காலத்தில் ஒவ்வொரு தொழிலினருக்கும் வரி விதித்திருந்தனர் போலும். வரிகளின் எண் தொகை மிகுதியாகக் காணப்படினும் அவை ஒவ்வொன்றும் ஒவ்வொருவரிடமிருந்தும் வசூலிக்கப் படவில்லை. ஒவ்வொரு தொழிலாளரும் தாம் இறுக்க வேண்டிய ஒரே கடமையைத்தான் செலுத்த வேண்டும். ஆகவே அக்காலத்தில் வரிச்சுமை மிகுதி எனக் கூறுவது பிழை. கடன், இறை, பாட்டம், பூட்சி முதலியன வரியை உணர்த்தும் ஒரு பொருட் பல கிளவிகளாம்.

[1] திருவீழிமிழலைச் சாசனம் [2] S. I. I. Vol. II, Pages 98 & 99.

கண்ணாலக்காணம் என்பது வதுவரர் கலியாணத்தன்று அரசனுக்குக் கொடுக்க வேண்டிய வரியாம் என்பது முதல் பராந்தகன் கல்வெட்டால் தெரிகிறது.[1] ஊரைக் காத்தற்காக வாங்கப்படும் வரி பாடிகாவலாகும். உல்கு என்பது சுங்கம்போலும். ஈழம்பூட்சி என்பது கள் இறக்குவதற்குச் செலுத்த வேண்டிய இறையாகும். அனேகமாகக் குடிகள் அக்காலத்தே செலுத்த வேண்டிய வரியை முட்டுப்பாடின்றிச் செலுத்தி வந்தனர். வரி செலுத்த இயலாத சில போழ்து, குடிகள் ஊரைவிட்டும் வெளியூருக்குச் சென்றுவிடுவதுண்டு. இது விக்கிரமசோழன் ஆட்சியில் வற்கடம் நேர்ந்தபோது நடந்தது என்று முன்னரே அறிவோம்.

## 8. அளவைகள்

சோழர்கள் காலத்தில் எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல் என நால்வகை அளவைகளும் உண்டு. பொன், வெள்ளி முதலிய சீரிய உலோகங்கள் மஞ்சாடி, கழஞ்சு, குன்றி முதலிய நிறைகளாலும், செம்பு, வெண்கலம் முதலிய தாழ்ந்த உலோகங்கள் இரண்டாயிரம் பலம், மூவாயிரம் பலம் என்றும் நிறுக்கப் பெற்றுள்ளன. அரசாங்க முத்திரை பொறித்த நிறுத்தல் அளவைக்கல் உண்டு. அதற்குக் 'குடிஞைக் கல்' என்று பெயர். மணங்கு, பாரம் முதலிய அளவைகள் அக்காலத்தில்லை போலும்.

[1] The Historical Sketches of Ancient Deccan, Pages 34 and 49.

நெல், உப்பு, பால், நெய் முதலியன, செவிடு, ஆழாக்கு, உழக்கு, உரி, நாழி, குறுணி, பதக்கு, தூணி, கலம் முதலிய முகத்தலளவைகளால் அளக்கப்படும். மரக்கால்கள் அரசன் பெயரால் வழங்கப்படும் என்பதற்கு, இராஜராஜன் காலத்தில் 'ஆடவல்லான் மரக்கால்' 'அருண்மொழி தேவன் மரக்கால்' என்று வழங்கியதே போதிய சான்றாம்.

முகத்தல் அளவை

| | |
|---|---|
| 5 செவிடு | 1 ஆழாக்கு |
| 2 ஆழாக்கு | 1 உழக்கு |
| 2 உழக்கு | 1 உரி |
| 2 உரி | 1 நாழி |
| 8 நாழி | 1 குறுணி |
| 2 குறுணி | 1 பதக்கு |
| 2 பதக்கு | 1 தூணி |
| 12 குறுணி | 1 கலம் |

நீட்டல் அளவை

| | |
|---|---|
| 8 தோரை | 1 விரல் |
| 12 விரல் | 1 சாண் |
| 2 சாண் | 1 முழம் |

எடுத்தல் அளவை

| | |
|---|---|
| 2 குன்றி | 1 மஞ்சாடி |
| 20 மஞ்சாடி | 1 கழஞ்சு |

## 9. நாணயங்கள்

சோழர் காலங்களில் பொன்னாலும், வெள்ளியாலும், செம்பாலும் செய்யப்பட்ட நாணயங்கள் வழங்கி வந்தன. அக்காலத்தில் தங்கக் காசுகள், கலப்படம் இன்றிச் சுத்தப் பொன்னால் செய்யப்பட்டன என அறியலாம். கழஞ்சு என்ற பெயருள்ள ஒரு தங்கக்காசு மிகுதியாக வழங்கப்பட்டு வந்தது. அது சுமார் 72 குன்றிமணி எடை உள்ளதெனத் தெரிகிறது. அதற்குப் பொன் என்றும், மாடை

என்றும் பெயருண்டு. நாணயங்கள் எல்லாம் அக்காலத்திலும் ஒரே எடை உள்ளவையாய் இருந்து வந்தன. பொன்னினது தூயதன்மையை அறிவதற்கு உரை கற்களும் உண்டு. அவைகளுக்குத் ‘ தண்டவாணி ’ என்பது பெயர்[1]. சோழர் காலத்து நாணயங்கள் பலவிடங்களில் நமக்கு அகப்பட்டுள்ளன.

## 10. கல்வி

அக்காலத்தே தற்காலத்தில் இருப்பதைவிடக் கற்றோர் மிகுதியாக இருந்தனர் எனக் கருதவே இடமுள்ளது. மடங்களிலும், மரத்தின் நிழலிலும் பள்ளிக்கூடங்கள் நடப்பதுண்டு. அங்குப் பாடம் கற்பிக்கும் உவாத்தி என்பான், கிராமத்தில் பொதுவாக அவனுக்கு விடப்பட்டுள்ள மானிய நிலத்தின் வரும்படியைக் கொண்டு ஜீவனம் செய்ய வேண்டும்.

தேவாரத் திருமுறைகளையும், ஆழ்வார் பிரபந்தங்களையும், இராமாயணம், மகாபாரதம் போன்ற இதிஹாசங்களையும், வேதங்களையும் நெட்டுருச் செய்து ஓதுதற்கு ஏற்ற கல்விச் சாலைகள் பலவிடங்களிலமைந்து கிடந்தன. உயர்தரக் கல்வி, இலக்கியம், தர்க்கம், வியாகரணம், மீமாம்சை முதலியவைகளில் பயிற்சி அளிப்பதற்கும் பள்ளிகள் நிறுவப்பெற்றிருந்தன. அங்ஙனம் தென்னாற்காடு ஜில்லா இராஜராஜ சதுர்வேதி மங்கலம் என்னும் ஊரில் 340 மாணவர்களும், 14 ஆசிரியர்களும்

[1] S. I. I. Vol. II, Page 21.

கொண்டுள்ள ஒரு கல்விச் சாலை இராஜேந்திரன் I காலத்தில் இருந்ததாக அறியலாம்.[1] அதேபோல் புதுச்சேரிக்கடுத்த திரிபுவனம் என்ற ஊரிலும் 200 மாணவர்களும், 12 ஆசிரியர்களும் உள்ள ஒருகல் லூரி இராஜாதிராஜன் காலத்தில் இருந்ததாகத் தெரிகிறது.[2]

விக்கிரம சோழன் ஆட்சி மூன்றாவது ஆண்டில் ஏற்பட்ட ஒரு கல்வெட்டில், திருவாடுதுறை என்ற ஊரிலுள்ள மடத்தில் உணவளிக்க வேண்டியவர்களைக் குறிக்கும்போது, வைத்திய சாஸ்திரம் இலக்கண சாஸ்திரம் கற்போருக்கும், வாக்பட்டர் அஷ்டாங்க ஹிருதயம் காரகஸம்ஹிதை ரூபாவதாரம் கற்போருக்கும், உணவளிக்க வேண்டியது எனத் தீட்டப்பெற் றிருக்கிறது.[3] திருவொற்றியூரில் கண்ட மற்றொரு சாசனத்தால், பாணினியின் வியாகரண சூத்திரங்களைத் திருவொற்றியூர்க்கோயிலிலுள்ள வியாகர்ணதான மண்டபத்தில் கற்பிக்க வேண்டியதென்றும், அதற்காக 65 வேலி நிலங்கள் விடப்பட்டுள்ளன என்றும் அறியக்கூடும்.[4] இவைகளால் வைத்தியநூல் முதலியவையும் அக்காலத்துப் பள்ளியில் கற்பிக்கப்பட்டு வந்தன என்பது விளங்கும். வீரசோழன், குலோத்துங்கன் II போன்ற அரசர்கள், தாமே புலவர்களாய்த் திகழ்ந்ததால் கல்வியைப் பரப்புவதில் ஊக்கங் கொண்டிருந்தனர் எனவும் கருதலாம்.

---

[1] 332 of 1917. [2] 17 of 1919. [3] 159 of 1925. [4] 202 of 1912.

## 11. நீதி முறை

வழக்குகளை விசாரணை செய்து நியாயம் வழங்குவதற்காகத் தனியான அதிகாரிகள் இருந்துவந்தனர். அவர்களுக்கு 'நியாயத்தார்' என்று பெயர். பல சாசனங்களில் 'தர்மாசனம்' ஒன்று உண்டு எனக் கண்டிருக்கிறது. அநேகமாக இதுதான் அரசனது நியாய சபை எனத் தோன்றுகிறது. அரசன் தன் முன் கொண்டுவரப்பட்ட வழக்குகளை, நியாய சாஸ்திரத்தில் வல்ல தர்மாசனப்பட்டர்களின் உதவியைக் கொண்டு விசாரிப்பது வழக்கம் எனத் தெரிகிறது.

சிறிய குற்றங்களையும் உரிமை வழக்குகளையும் ஊர்ச் சபையாரே விசாரணை செய்தனர். குற்றங்களுக்கு ஏற்ற தண்டனைகள் விதிக்கப்பட்டன. ஆனால் கொலைக்குச் கொலைத் தண்டனை விதிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. எடுத்துக் காட்டாக, ஏழாட்டைப் பிராயத்துப் பையன் ஒருவன், கொடுவாள் கொண்டு மரக்கொம்பை வெட்டச் சென்ற போது, அவனுடன் சென்ற மற்றொரு ஆறாட்டைப் பிராயத்துப் பையன் தன் கையைத் தற்செயலாக நீட்ட, வெட்டுண்டு இறந்தான். இதை ஊர்ச் சபையார் சேர்ந்து விசாரணைசெய்து, இக்குற்றம் தற்செயலாக நடந்து விட்டதாயினும் இனி இன்னணம் நேராவாறு, கோவிலில் அரை விளக்கு எரிக்கச் செலவாகும் தொகையைத் தண்டமாகக் கொடுக்கப் பணித்தனர். இத் தொகை குற்றவாளியின் தகப்பனிடமிருந்து வசூலிக்கப்பட்டது.

மற்றக் குற்றங்களுக்கும், சிறையிடுதல், தளை புகுத்தல் முதலிய தண்டனைகளும் விதிக்கப்பெற்றுள் ளன என்பது 'இவன் சாவிலும், போகிலும், சிறை தளை சங்கிலி புகிலும் இவ்வனைவோம் முன்பு நின் றேமே சந்திராதித்தவல் நெய்யட்டுவதாய்ப் புணைப் பட்டோம்[1]' என்பதால் அறிக.

கோயில்களில் நெய் விளக்கெரிக்க ஒப்புக் கொண்டு பொன் பெற்றவர்கள், அங்ஙனம் செய்யா மற் போனால், ' இத் தர்மம் முட்டின பொழுது இவர் கள் நிசதி ஐங்கழஞ்சு பொன் தர்மாசனத்தே மன்ற ஒட்டி குடுப்பாராக' என்று தண்டனை விதிக்கப் படும். இஃது அபராதம் விதித்தல் போன்றதாகும். பிறர் பொருளை வெளவுதல், பிறன்இல் விழைதல், கூடலேகை (பொய்க் கை எழுத்திடல்) முதலிய பெரிய குற்றங்களுக்குக் குற்றவாளிகளைக் கழுதை மேல் ஏற்றி ஊரைச் சுற்றிவரவும் செய்வதுண்டு.

இராசத் துரோகம் முதலிய குற்றங்களை அரசன் நேரிலேயே விசாரிப்பது வழக்கம். அவனே தண்டனைகள் விதிப்பதுடன் குற்றவாளிகளின் சொத்தையும் பறிமுதல் செய்து விற்று விடுவதும் உண்டு.

விக்கிரம சோழன் காலத்தில் திருச்சிராப் பள்ளி ஜில்லாவில் உற்றத்தூர் என்ற கிராமத்துச் சாசனத்தில் கண்டதாவது வருமாறு.[2] ஒருவன் அரைக் காணி நிலத்தைக் கிரயத்துக்கு வாங்கினான்.

[1] S. I. I. Vol. III, Page 28.
[2] 512 of 1912.

ஆனல் அதற்குச் செலுத்த வேண்டிய வரி பாக்கியைச் செலுத்த அவனல் இயலவில்லை. அதை அந்நிலமுள்ள ஊரான ஸ்ரீகாந்த சதுர்வேதிமங்கல சபையார் விசாரித்து அவனை இருபது காசு அபராதம் செலுத்துமாறு தண்டித்தனர். அதைச் செலுத்தாததால் அவன் நிலத்தை விற்று, வரியையும் அபராதத்தையும் வசூலித்தனர்.

ஒருகால் ஒரு போர்வீரன் மற்றொரு வீரனைக் கொன்றுவிட, கொன்றவன் மாண்டோனது மக்களுடன் கலந்து அன்னார் அநுமதியால் கோயிலில் விளக்கு எரிக்க நிவந்தம் அமைத்தான் என ஒரு சாசனம் கூறும்.[1] இதனல் இவ்விதக் குற்றங்களுக்குக் கழுவாய் அமைக்கும் உரிமையும் மக்களுக்கு உண்டு என உணரலாம்.

[1] 48 of 1897.

# 8. முப்பெருஞ் சான்றோர்

## 1. ஒட்டக் கூத்தர்

ஒட்டக் கூத்தர் செங்குந்தர் மரபில் பிறந்தவர். இவரைக் கூத்தமுதலியார் எனவும் வழங்குப. தில்லை நடராஜப் பெருமான் திருநாமத்தை இவருக்குச் சூட்டினர் போலும். இவர் பிறந்த ஊர் மணவை என்று சிலர் கூறுப. ஆயின் இவர் பிறந்தது சோழ நாட்டிலுள்ள மலரி என்ற ஊரேயாகும். இது சாசன வாயிலானுந் தெளிவு.[1] பின்வரும் தண்டி அலங்கார மேற்கோட் செய்யுளும் இதை வலியுறுத் தும்.

சென்று செவியளக்குஞ் செம்மையவாய்ச் சிந்தை
நின்றளவிலின்ப நிறைப்பவற்றுள்—ஒன்று [யுள்ளே
மலரில்வரும் கூந்தலார் மாதர் நோக்கு: ஒன்று
மலரிவருங் கூத்தன்தன் வாக்கு.

இவர் சடையப்ப வள்ளல் தந்தையான சங்கரன் என்ற ஒரு சிற்றரசன் இல்லத்தின்கண் உதவித் தொழில் செய்பவராய் அமர்ந்திருந்தார். அங்ஙனம் வாழுநாளில் காங்கேயன் என்பவனொரு வன் இவருடைய அறிவு ஆற்றல்களின் திறனையும் பெருமையையும் உணர்ந்து, இவரை உயர் பதவியில் அமர்த்தினன் என்ப. அக்காரணங் கொண்டே

[1] 109 of 1928.

அன்னார்மீது காங்கேயன் நாலாயிரக்கோவை என்ற ஒரு பிரபந்தமும் பாடினர் எனவும் கூறுப.

தென்னாற்காடு ஜில்லா புதுவைக்கு அருகுள்ள திருபுவனம் என்ற ஊரின்கணிருந்த சோமன் என்பானும் இவரை ஆதரித்தனன் என்பர். இவர் அறிவின் பெருமையை வியந்து, விக்கிரம சோழன் இவரைத்தன் அவைக்களப் புலவராய் அமர்த்திக் கொண்டான். அப்பதவியில் திகழுங்கால் அம் மன்னன் மீது, 'விக்கிரம சோழன் உலா' என்ற ஒரு உலாப் புறமும் பாடினர். பின்னர் விக்கிரமன் கான்முளைகளான, குலோத்துங்கன் II இராஜ ராஜன் II இவர்களது அவைக்களத்தும் இவர்பெரும் புலவராய் இலங்கினர். அன்னாரில் குலோத்துங்கனுக்கு இவர் வித்யா குருவாயும் இருந்தனர் என்ப. இவ்விருவரைக் குறித்துக் 'குலோத்துங்க சோழன் உலா,' 'இராஜராஜ சோழன் உலா' என்று வேறு இரு பிரபந்தங்களும் பாடி, ஒவ்வொரு உலாவையும் அவ்வவ்வரசர் அவைக்களத்தே அரங்கேற்றித் தக்க பரிசும் பெற்றனர். இம் மூன்று உலாக்களும் குழுமி 'மூவருலா' எனப்பெயர் பெறும்.

இவையன்றிக் குலோத்துங்கன் I, வட கலிங்கப் போரில் பெற்ற வெற்றியைக் குறித்துக் கவிச் சக்கரவர்த்தி சயங்கொண்டாரால் 'கலிங்கத்துப் பரணி' என்ற நூலைப் பாட்டுண்டது போல், விக்கிரம சோழனும், தன் இளவரசாட்சியில் தென் கலிங்க நாட்டில் இயற்றிய போரையும், பெற்றவெற்றியையும் குறித்து ஒட்டக் கூத்தரால் மற்றொரு 'கலிங்கத்துப்

பரணி' பாட்டுண்டான் எனவும் விளங்குகிறது. இதன் உண்மையை,

'செருத்தந் தரித்துக் கலிங்கரோடத்
தென்றமிழ்த் தெய்வப் பரணிகொண்டு
வருத்தந் தவிர்த்துல காண்டபிரான்
மைந்தற்கு மைந்தனை வாழ்த்தினவே[1].

என்ற தாழிசையின் கீழ் உரையாசிரியர், 'இப் பரணி பாடினர் ஒட்டக் கூத்தரான கவிச் சக்கரவர்த்திகள். இப் பரணி பாட்டுண்டார் விக்கிரம சோழ தேவர்' எனக் கூறுவதால் அறிக. மற்றும் ஒட்டக் கூத்தர்,

'விரும்பரணில் வெங்களத்தீ வேட்டுக் கலிங்கப்
பெரும்பரணி கொண்ட பெருமாள்—தரும் புதல்வன்[2]'

'தரணி யொருகவிகை தங்கக் கலிங்கப்
பரணி புனைந்த பரிதி—முரணி
புரந்தர னேமி பொருவ வகில
துரந்தரன் விக்கிரம சோழன்[3]'

எனப் பாடி இருத்தலாலும் இவரும் ஒரு கலிங்கத்துப் பரணி பாடியுள்ளார் என்பது தேற்றம். இவர் குலோத்துங்கன் II மீது ஒரு பிள்ளைத் தமிழும் பாடியுள்ளார். இவரிடத்துக் காட்டிய பேரன்புக் கறிகுறியாக அம் மூன்று சோழ மன்ன

[1] தக்க. பரணி 776.
[2] குலோ—உலா 55-56.
[3] இராஜ-உலா 52-56.

ருள் ஒருவன், அரிசிலாற்றங்கரைக் கண்ணதாகிய ஓர் ஊரை இன்னருக்கு அளித்துளான். அதற்கு இன்றும் கூத்தனூர் என்று பெயர் வழங்குகிறது. இது தஞ்சை ஜில்லா பூந்தோட்டத்துக்கு அருகேயுள்ளது. கூத்தர் கலைவாணியின் அருள் பெற்றுப் பொலிந்தவராதலின், அவ்வம்மையின் திரு உருவை அவ்வூரில் பிரதிஷ்டை செய்து, ஒரு கோயிலும் எடுப்பித்து வழிபட்டு வந்தார். இஃது,

> "ஆக்கம் பெருக்கு மடந்தை வாழியே
> ஆற்றங் கரைச்சொற் கிழத்தி வாழியே
> கோக்குந் தமிழ்க்கொத் தனைத்தும் வாழியே
> கூத்தன்கவிச் சக்கர வர்த்தி வாழியே[1]"

என்பதால் புலனும்.

விக்கிரம சோழன், தன்மீது இயற்றியுள்ள உலாவின் ஒரு கண்ணியை ஒட்டி ஒரு செய்யுள் இயற்றுமாறு சொல்ல, இவர் அவ்வாறே விரைந்து பாடினமையின் சிலர் ஒட்டக்கூத்தர் எனப் பெயர் பெற்றனர் என்ப. பின்னும் சிலர் வேறு கட்டுக் கதைகளையும் புனைந்து கூறுப. இவர் மூன்று உலாக்களிலும், சொற் சுவை, பொருட் சுவை, பாடின கவி நயம் முதலியவற்றில் தலைசிறந்து திகழும் இராஜராஜ சோழன் உலாவைப் பாடி அரங்கேற்றிய பொழுது, அதன் ஒவ்வொரு கண்ணிக்கும் ஆயிரம் பொன் விழுக்காடு அவன் வழங்கினன் என்பது,

[1] தக்க. பரணி 813.

சங்கரசோழனுலாவில்,

"தெள்ளித்தம்

முன்னு யகரினவன் மூதுலாக் கண்ணிதொறும்
பொன்னு யிரஞ் சொரிந்த பூபதியும்"

என்ற வாக்காலும்,

"கூடல்

நராதிபன் கூத்தனெதிர் நண்ணியோர் கண்ணிக்கு
ஓராயிரம்பொன் னீந்த உலாவும்"

என்ற தமிழ் விடுதூதுச் செய்யுளாலும் மலையிலக்கு. இவர் மும்மன்னர் அவைக்களத்தை அலங்கரித்த பெரும் புலவராதலால், இராஜராஜ சோழன் II காலத்தில் வயதில் மிக்க முதிர்ச்சி யடைந்திருந்தன ராதல தெளிவெனினும், இவர் வாக்கு மிக்க மிடுக்காயிருப்பது வியக்கற்பாலதே.

இவர் இயற்றியனவாக 'ஈட்டி எழுபது' 'சரஸ்வதியந்தாதி' 'அரும்பைத் தொள்ளாயிரம்', முதலிய நூல்களும் உள என்று கூறுவர். எனினும் ஒட்டக்கூத்தர் பெருமையையும் புலமையையும் உலகில் அழியாமல் நிலவுமாறியற்ற இவர் பாடியுள்ள, உலாப் புறங்களும், தக்கயாக பரணியும், குலோத்துங்கன் பிள்ளைத் தமிழுமே சாலும்.

## 2. கம்பர்

கவிச் சக்கரவர்த்தி கம்பர் தஞ்சாவூர் ஜில்லா மாயவரம் தாலூக்காவிலுள்ள திருவழுந்தூர் நாட்டில் வசித்து வந்த உவச்ச குலத்தினரான ஆதித்தன் என்பவனது மகன் என்று கூறுப. இவர்

இளமையில் கல்வி கேள்விகளுற்று விளங்கும் போதே, புதுவை நகரைச் சார்ந்த ஒரு திரிகர்த்தத் தலைவன் சடையப்பன் என்கிற சரராமனால் ஆதரிக்கப் பெற்று விளங்கினார் என்றும் சொல்லுப. இந்தத் திரிகர்த்தத் தலைவனைப்பற்றி ஒட்டக்கூத்தர் விக்கிரம சோழன் உலாவில்,

"மோட்டாரணக்
கொங்கைக் குலைத்துக் குடகக் குவடொடித்த
செங்கைக் களிற்றுத் திகத்தனும்" (174-76)

என்று கூறுகிறார். மூவலூரிலும் திருக்கோடிக்காவலிலும் உள்ள கல்வெட்டுக்கள், இத்திரிகர்த்தத் தலைவன் கங்க குலத்தைச் சேர்ந்த சேதிராயன் என்று புகலும்.[1] கம்பரை அக்காலத்திய சோழ அரசன் ஆதரித்தான் என்றும், 'கம்பர் மேடு' என்ற பெயருள்ள சில நிலங்களைத் தானமாக அளித்தான் எனவும், கவிச் சக்கரவர்த்தி என்ற பட்டமும் வழங்கினான் எனவும் கூறுவர். அத்துடன் கம்பனை அக்காலத்திய பாண்டிய மன்னனும், காகதீய கணபதியும் ஆதரித்தனர் என்றும் வரலாறு வழங்குகிறது. இவைகளின் உண்மையை முற்றும் உய்த்துணர இயலவில்லை.

இனிக் கம்பர் திகழ்ந்த காலத்தைக் குறித்துச் சிறிது ஆராய்வோம்.

---

[1] 25 & 34 of 1925. இத்துடன் வேளாள ரனைவரும் தம்மைக் கங்கை குலத்தவர் எனக் கூறலும் ஈண்டு அறியற்பாலது.

ஆசிரியர் T. T. கனகசுந்தரம் பிள்ளை, B. A., அவர்கள் தாம் பதிப்பித்த 'பாலகாண்டத்தில்'

[வாழ்வு

'எண்ணிய சகாத்தம் எண்ணூற் றேழின்மேல் சடையன்
கண்ணிய வெண்ணெய் நல்லூர்தன்னிலே கம்பநாடான்
பண்ணிய இராம காதை பங்குனி அத்த நாளில்
கண்ணிய அரங்கர் முன்னே கவியரங் கேற்றி னானே'

என்னும் செய்யுளுக்குப் பொருந்த, கி. பி. 885 என்று கூறியுள்ளார். சாதவாஹன சகத்துக்கும் கிறிஸ்துவ வருஷங்களுக்கும் 78 ஆண்டுகள் வேற்றுமை என அறிக.

பின் இலக்கண விளக்க ஆசிரியர் பரம்பரையினரும், கல்வெட்டு ஆராய்ச்சியில் வல்லுநருமான தமிழ் அறிஞர் திருவாரூர் சோமசுந்தர தேசிகர், கம்பர் காலத்தைப் பற்றிக் கூறியன வருமாறு: 1. வீரசோழியம் என்னும் இலக்கண நூல் வீரராஜேந்திரன் காலத்தில் அவன் பெயர் அமைய இயற்றப்பட்டதாம். அவன் காலம் கி. பி.1063-1070 என்று அறிவோம். அந் நூலின் வேற்றுமைப் படலத்து ஏழாம் செய்யுளின் உரையில், 'கம்பனுரிடைப் பெருமையுளது' என்று கம்பர் பெயர் அந்நூலின் உரையாசிரியரால் எடுத்துக்காட்டாகக் குறிக்கப்பட்டுள்ளது. வீரசோழியத்துக்கு உரையிட்ட பெருந்தேவனுர், அந் நூலாசிரியரான புத்தமித்திரனுரை அடுத்திருந்தனர் என்பதும், அபயனுகிய முதல் குலோத்துங்கன் காலத்துக்கு முற்பட்டவர் என்பதும், அவருக்கும் அந் நூலாசிரிய

ருக்கும் நெருங்கிய தொடர்பு இருந்திருக்க வேண்டும் என்பதும் ஆராய்ச்சியால் விளங்கும்.[1] ஆகவே வீரராஜேந்திர சோழன் காலத்துக்கும் பல ஆண்டுகள் முன்னரே கம்பர் பெரும்புகழ் அடைந்திருக்க வேண்டும் என்பது துணிபு.

2. சடையப்ப முதலியார் பல்லவர்களுள் கடைசியாக ஆண்ட கம்பவர்மன் ஆட்சிக் காலத்தில் அவன் வேண்டுகோளுக்கு இணங்கி ஒரு சமயம் 1000 காடி நெல்லும், உக்கல் என்ற ஊரிலுள்ளார்க்கு 500 காடி நெல்லும், கொடுத்ததாகக் கல்வெட்டுக்கள் குறிக்கின்றன. இந்தக் கம்பவர்மனைப் பற்றி மதுராந்தக உத்தம சோழனது செப்புப் பட்டயம் ஒன்றிலும் கூறப்பட்டிருக்கிறது[2].

3. பராந்தகன் I (906-932) க்கு பின், அவன் பெரியப்பன் கண்டராதித்தன் மகனாகிய மதுராந்தகன் அரசு புரிந்தான் என்றும், மதுராந்தகனுக்கு உத்தம சோழன் என்னும் மறுபெயர் இருந்தது என்றும் விளங்கும்[3].

ஆகவே "பத்தாம் நூற்றாண்டிலிருந்த மதுராந்தக உத்தம சோழனது பட்டயத்தில் குறிக்கப்பட்ட கம்ப வர்மன், இந்தச் சோழனுக்குப் பல ஆண்டுகள் முன்னரே இருந்திருக்க வேண்டும் என்பதும், அந்தக் கம்பவர்மன் காலத்தில் இருந்த சடையப்ப வள்ளலால் ஆதரிக்கப் பெற்ற கம்பர் கி. பி. 885-ல்

[1] செந்தமிழ் Vol. 24, Pages 166 - 67.
[2] S. I. I. Vol. III.
[3] சோழவம்ச சரித்திரம், Page 12.

இராமாயணத்தை அரங்கேற்றினர் என்பதும் பொருந்தும்" என்பர்.

பின்னும் இக் கருத்தை உறுதிப் படுத்துவார் கூற்றும் வருமாறு.

கம்பராமாயணம், பால காண்டம் குலமுறை கிளத்த படல முதற் செய்யுளில், 'ஆதித்தன் குல முதல்வன் மனுவினை யார் அறியாதார்' எனத் தொடங்கி யிருப்பதால், கம்பன் இராமாயணம் பாடிய காலத்தில் அரசு செய்துவந்த ஆதித்த சோழனையும், இராமனது குல முதலான ஆதித்த பகவானையும் இரட்டுற மொழிதலாகக் கூறினர் எனவும் கொள்ள இடமுண்டு. அங்ஙனமாயின் சோழர் மரபில் விஜயாலயனுக்குப்பின் ஆதித்தன் (870-906) அரசு செய்தவன். ஆதலால் கம்பரும் இக் காலத்தில் வாழ்ந்தனராகக் கருதல் தகும்.

ராவ்சாஹிப் மு. ராகவையங்கார் அவர்கள் உபகரித்துள்ள 'ஆழ்வார்கள் காலநிலை' என்னும் நூலில், (பக்கம் 132) ஆழ்வார்கள் பதின்மரும் அவதரித்து விளங்கிய காலம் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து, எட்டாம் நூற்றாண்டின் முற்பகுதிவரையிலும் என்பது தெற்றெனவிளங்கும். அப்பெரியாருள் முக்கியமானவரான சடகோபர் எனக் கூறப்பெறும் நம்மாழ்வார் விளங்கிய காலம் எட்டாம் நூற்றாண்டின் முற்பகுதி எனவும், திருமங்கையாழ்வார் திகழ்ந்தது அந்நூற்றாண்டின் பிற்பகுதி எனவும் கூறுவர். கம்பர் இராமாயணத்தில் காப்புச் செய்யுளாக,

"தருகைநீண்ட தயரதன் தான்தரும்
இருகை வேழத்து இராகவன் தன்கதை
திரிகை வேலைத் தரைமிசைச் செப்பிடக்
குருகை நாதன் குரைகழல் காப்பதே"

என்று நம்மாழ்வாரைத் துதி செய்திருத்தலாலும், 'சடகோபரந்தாதி' என்னும் தனிப் பிரபந்தமும் ஒன்று அப்பெரியார்மீது பாடியிருத்தலாலும், அவ் வாழ்வாரின் காலத்துக்குக் கொஞ்சம் பின்னிட்டு, அவ்வாழ்வாரின் வைபவமும், பிரபந்தத்தின் பெருமையும் சாலவும் விளங்கிய காலமாகிய ஒன்பதாம் நூற்றாண்டாக இருக்கலாம் என்பர்.

கம்பர் தாமியற்றிய இராமாயணத்தை அரங்கர் திருமுன்பு, ஆயிரக்கால் மண்டபத்தில், ஸ்ரீவைஷ்ணவ ஆசாரியருள் தலைவரான ஸ்ரீமந் நாதமுனிகள் திருசெவிசாய்க்க அரங்கேற்றினர் என்ற பாடலும் கர்ண பரம்பரையும் நெடுநாளாய் வழங்கிவரக் காண்கிறோம். ஸ்ரீமந் நாதமுனிகளைப்பற்றிக் கூறும் நூல்களான, பிரபன்னாமிருதம், கோயிலொழுகு முதலியவைகளில் இவர் அவதரித்த கலி வருஷம் குறிப்பிட்டிருப்பதால், அதற்குச் சரியானது கி. பி. 825 என்றும், பரமபதித்தது கி. பி. 918 என்றும் அறியக் கிடக்கின்றன. பரமயோகி எனக் கூறப் பெறும் இப்பெரியார் 93 திருநக்ஷத்திரங்கள் எழுந்தருளி வாழ்ந்திருக்கலாம். ஆகவே கம்பர் காலமும் ஒன்பதாம் நூற்றாண்டாக இருக்கக்கூடும் என்பர்.

ஆசிரியர் திருமணம் செல்வக்கேசவராய முதலியார் M. A., அவர்கள் தாமியற்றிய 'கம்ப நாடர்' என்னும் நூலுள் கூறுவதாவது,

"கம்பர் கூத்தரினும் இளையவர். ஆதலால் கம்பர் இரண்டாம் குலோத்துங்கன் காலத்தில் கவிப்புலமை எய்தி யிருந்தார் என்பது யூகிக்கலாம். விக்கிரம சோழன் உலாவில் சோழனோடு புடை சூழச் சென்றவர்களில் சடையப்ப முதலியாராகிய 'திரிகர்த்தன்' ஒருவராகச் சேர்த்துப் பாடப்பட்டிருப்பதும் இதனை வற்புறுத்தும். ஆகவே கம்பர் 12-ம் நூற்றூண்டின் பிற்பகுதியில் பெருஞ் சிறப்புற்றிருந்தமை தெரியப்படும்" என்பதாகும்.

ஸ்ரீமான் பாஷாகவிசேகர, சேது சமஸ்தான மகா வித்துவான் ரா. ராகவய்யங்கார் சுவாமிகள், "'எண்ணிய சகாத்தம் எண்ணூற்றேழின் மேல்' என்ற பாட்டைக் 'கருதிய சகாத்தம் எண்ணப்பட்ட நூற்றேழின் மேல்' எனப் பொருள்படுத்தி, ஆயிரமாகிய பேரெண்ணை ஒழித்து உலக வழக்கு நெறியே தழுவிச் சிற்றெண்ணே கூறியதாம் எனக் கொண்டு, சகாத்தம் 1107 அதாவது கி. பி. 1185 என இணக்கிக் கொள்வது உசிதமாகும்" என்பர்.[1] ஆனல், 'எண்ணிய சகாத்தம் முன்னூற்றேழின் மேல்' எனவும் இதற்குப் பாட பேதமுமுளது.

அத்துடன் சகாத்தம் 807 என்று கூறுவோர் இராமாயணத்தைக் கம்பன் அரங்கன் சன்னதியில் ஸ்ரீமந் நாதமுனிகள் திருமுன்பு அரங்கேற்றி

[1] செந்தமிழ் Vol. III. Page 179.

னர் என்ற ஆதரவற்ற கர்ண பரம்பரைச் செய்தியை ஒட்டிக் கூறுகின்றனர். இச்செய்தி திவ்விய சூரிசரிதத்திலாதல், குரு பரம்பரையிலாதல் காணப் படவில்லை என்பர்.

பின்னும் நாலாயிரப் பிரபந்தத்துக்கு வியாக்கியானம் செய்தருளிய பெரியவாச்சான்பிள்ளை என்பார் கலி. 4329-ல் பிறந்தவர். அதாவது கி.பி. 1228 ஆகும். இவர் உரையிட்ட, பெரிய திருமொழி, 'மஞ்சுலாஞ் சோலை வண்டறை மாநீர் மங்கையர்' என்ற பாசுரத்தின் உரையில், 'வண்டறை' என்கிறது சோலைக்கு விசேஷணமாகவுமாம்; மாநீர்க்கு விசேஷணமாகவுமாம். ஜலத்தினுடைய ரஸ்யதையாலே, 'ஈக்கள் வண்டொடு மொய்ப்பது' என்று ஆற்றுவரவுகளிலே சொல்லுவாராய்த்துத் தமிழர்' என்று உரைத்துப்போந்தனர். இங்கே குறிப்பது கம்பராமாயணம், பாலகாண்டம், ஆற்றுப் படலம் 10-வது பாட்டின் 'ஈக்கள் வண்டொடு மொய்ப்ப வரம்பிகந்து' என்ற அடியாகும். இதனல் 13-வது நூற்றாண்டுக்கு முன்னர்த் தோன்றியவர் கம்பர் என்பதும், அந் நூற்றாண்டில் கம்பராமாயணம் சாலப் பெருமையுற்று மேற்கோளாட்சிக் குரியதாய் இருந்தது என்பதும் ஒருதலை.

அத்துடன் கம்பராமாயணம், உயுத்த காண்டம், மருத்துமலைப் படலம் 58-வது செய்யுளில்,

'வன்னிநாட் டியபொன்மௌலி வானவன் மலரின்மேலோன்
கன்னிநாட் டிருவைச் சேருங் கண்ணனு மாளுங் காணி

சென்னிநாட் டெரியல் வீரன்தியாகமாவினோ தன்றெய்வப்
பொன்னிநாட் டுவமை வைப்பைப் புலன்கொள நோக்கிப்
போனான்'

என்ற செய்யுளில், சோழன் 'தியாமாவினோதன் பொன்னி நாடு' என்று குறிப்பிடுவதாலும், தியாகமாவினோதன் என்பது, விக்கிரம சோழனது பட்டப்பெயரை நினைவூட்டுவதாலும் இவன் காலமே கம்பன் காலமென்பது பொருத்தமுடையதாகும். சைவ வைணவங்கள் ஒன்றிலும் கடும்பற்றுள்ளம் இல்லாதவனாய், தில்லைக்கும் அரங்கத்துக்கும் ஒக்கத் திருப்பணிகள் புனைந்துள்ளவனாய், சிவ மதத்தினனாகை இருந்தும் பிறமதங்களைத் தன் தகப்பன் முதல் குலோத்துங்கனைப் போலவே கையாதவனாய், சோழர் குலதிலகனான விக்கிரம சோழன் காலமே நமது வைணவ சிகாமணியாகிய கம்பநாட்டாழ்வாரின் காலம் எனக் கூறல் ஏற்புடைத்து. அற்றன்றி இவன் மகன் குலோத்துங்கன் II காலம் எனக் கொள்வதில் இழுக்கு என்னை யெனின், அவன் நடராஜப் பெருமானிடம் மால்மிக்குக் கோவிந்தராஜனிடம் வெறுப்புற்றுப் பின்னோன் திருவுருவையும் கடலிவிட்டிருப்பதாலும், இராமாயணம் திருமாலின் அவதாரமாகிய சக்கரவர்த்தி திருமகனரைப்பற்றிய சீரிய காவியமாதலாலும், அதை இயற்றுவதற்கு அவன் ஆதரவு அளித்திருப்பான் எனக் கருதல் அத்துணை ஏற்றதன்று. இதனினும்சேக்கிழார்பெருமானின் திருத்தொண்டர் புராணம் இவன் காலத்து

இயற்றப் பெற்றதென்பதே சாலப் பொருந்திய தென்பதை முன்னர் விரிப்போம்.

தவிர, திருத்தக்க தேவர் இயற்றிய சீவக சிந்தாமணி என்ற நூல், க்ஷேத்திர சூடாமணி என்னும் நூலைப் பின்பற்றுவதாலும், அந்த க்ஷேத்திர சூடாமணி என்ற நூல் குணபத்திரரின் உத்தர புராணத்தைத் தழுவியதாதலாலும், அவ்வுத்தர புராணம் கி. பி. 898-ல் இயற்றப்பெற்றதென ஏற் படுவதாலும், சிந்தாமணி இக் காலத்துக்குப் பின் னரே பாடப்பெற்றிருக்க வேண்டும். ஆதலால் அது கி. பி. பத்தாம் நூற்றாண்டில் எழுதப்பெற்ற தாதல் தகும். கம்பர் பாடிய இராமாயணத்தில் சிந்தாமணியி லிருந்து அடிகளையும் கருத்துக்களையும் இறையும் பிறழாது புகுத்தி யுள்ளாராதலால், இவர் நூல் இயற்றியது சிந்தாமணிக்குச் சில காலம் பிந் தியே யாகும் என்பதும் தெளிவு.

சீவக சிந்தாமணி சிறப்படைந்து, பெருவழக் காய்ப் பயிலப்பட்டு, பின்னோர்கள் அதன் கணிருந்து பொருள்களைத் தமது நூலில் எடுத்தாளுவது என்றால் அந்நூல் இயற்றி நூறு ஆண்டுகளுக்கு மேலாவது இடையிட்டு இருக்க வேண்டும். அங்ஙனமாயின் கம்பராமாயணம் 12-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இயற்றப்பட்டிருத்தல்கூடும் என்பது பல்லாற்றானும் ஏற்புடைத்தே.

விக்கிரமசோழன் ஆட்சியில் இயற்றியது என் பதில் ஐயம் நிகழுமானால், ஆசிரியர் செல்வக்கேசவ ராய முதலியார் கூறுமாறு, அவன் பேரனையும்

பாட்டனைப்போலவே விழுந்த வைணவத்தை மீண்டும் எழச்செய்தவனும், முத்தமிழ்க்குத் தலைவன் எனப் பட்டப் பெயர் புனைந்தவனும், தன்னாட்சி முற்றும் நாட்டில் அமைதியே உருவுடன் திகழ இலக்கிய வளர்ச்சி பெருக்கெடுத் தோடுமாறு புரிந்தவனும், புலவரின் கலைகனும், அருங்கலை விநோதனும் இலங்கிய இரண்டாம் இராஜராஜன் காலம் எனக் கொள்ளல் பின்னும் பொருந்தியதே. ஆயின் ராவ்சாகிப் இராமநாதபுரம் மு. ராகவையங்கார் சுவாமிகள், தாமியற்றியுள்ள, 'சாஸனத் தமிழ்க் கவி சரிதத்தில்' வருமாறு கூறுவார்.

"கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பநாடர் விளங்கியது, மூன்றும் குலோத்துங்கன் ஆட்சிக் காலமே யாகும். இம் மகாகவி தம் இராமாயணத்தே 'சென்னி நாட்டெரியல் வீரன் தியாக விநோதன் தெய்வப் பொன்னி நாட்டு' என்று தங்காலத்துச் சோழனைச் சிறப்பிக்கிறார். இத் தியாக விநோதன் என்ற சிறப்புப் பெயர் இவனுக்கு வழங்கிய தென்பது, இவன் காலத்து அதிகாரிகளும் நன்மக்களும் ஊர்களும் அப் பெயரைத் தம் கௌரவ நாமமாகத் தரித்திருத்தலினின்று தெளியலாம்.

"தியாக விநோதன் மூவேந்த வேளான்"[1]
"தியாக விநோத பட்டன்"[2]
"தியாக விநோத நாற்றூர்"[3]

எனக் காண்க. இவற்றால் கம்பர் புகழ்ந்த வீரன் தியாக விநோதன் என்பான், திரிபுவன வீர தேவ

[1] S. I. I. 28 of 1927. [2] 160 of 1927. [3] 290 of 1927

ஞன மூன்றும் குலோத்துங்கன் என்றே கொள்ளத் தகும்." இவன் ஆண்டது கி. பி. 1178-1216 ஆகும்.

எனினும், பெருஞ் சோழர் ஆட்சிக் குலையத் தலைப்பட்ட இப் பிற்றை நாளினும், அவர் ஆட்சி சீருற்றிருந்து இலக்கியக் கிளர்ச்சி மிக்கிருந்த முன்னுளே கம்பர் வாழ்ந்ததாகக் கொளற்கு ஏற்றதெனத் தோற்றுகிறது. எங்ஙனமாயினும் மகாகவி கம்பர் காலத்தை, கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டெனக் கூறுதல் ஒருவாற்றானும் ஒவ்வாது என ஓர்க.

## 3. சேக்கிழார்

சேக்கிழார் தொண்டை மண்டலத்தில் புலியூர்க் கோட்டத்தைச் சார்ந்த குன்றைவள நாட்டிலுள்ள குன்றத்தூர் என்ற கிராமத்தில் வேளாளர் குலத்தில் பிறந்தவர். இவரைச் சேவைக் காவலர் எனவும், கங்கை குல திலகர் எனவும் கூறுவதுண்டு. பின் இவர் சோழ மன்னனிடம் உத்தியோகத்தில் அமர்ந்து உத்தம சோழ பல்லவன் என்ற பட்டமும் பெற்றார். சிவபெருமானிடம் பக்தி மிக்கவராய்த் தன்னூரிலுள்ள சிவாலயத்தையும் புதுக்கிக் கட்டினர் என்ப.

அக் காலச் சோழ மன்னன் சீவக சிந்தாமணியைக் கற்று அதன் சுவையில் தோய்ந்திருப்பவனைக் கண்டு, அவன் மனத்தைத் திருத்திச் சிவபெருமான் தொண்டர்களது சரித்திரத்தைக் கற்பதில் ஈடுபடுமாறு இயற்றினர். அன்னணம் திருத்திப்

பணிகொள்ளப்பட்ட அரசன், சேக்கிழாரையே திருத்தொண்டர்களின் வரலாற்றை விரிவாக வரையுமாறு வேண்ட, அவரும் ஒருப்பட்டுச் சிதம்பரத்துக் கேகி அங்கு நடராஜப் பெருமானுல் அசரீரி மூலம் 'உலகெலாம்' என்று நூலுக்கு அடியெடுத்து அளிக்கப் பட்டவராய்த் திருத்தொண்டர் புராணத்தைப் பாடி முடித்தனர் என்ப. பின்னர், தில்லைக் கண்ணே நடராஜப் பெருமான் ஆயிரக்கால் மண்டபத்து இப்புராணம் சிறப்புடன் அரங்கேற்றப் பெற்றுப் பன்னிரண்டாம் திருமுறையாகவும் இணைக்கப்பட்டது. சேக்கிழார் மிக்க சிறப்பெய்தியதுடன் 'தொண்டர்சீர் பரவுவார்' எனவும் பட்டமிடப் பெற்ருர். அப்புறம் சேக்கிழார் தில்லையிலேயே இருந்து மெய்த்தவம் புரிந்து வைகாசிப் பூச நாளிலே திருக்கூத்தன் திருவடி நிழலை அடைந்தார் என்பர். அரசன் அவர் தம்பியாகிய பாலரூவாயர் என்பாரை வரவழைத்து அமைச்சராக்கிக் கொண்டான். இவரும் தொண்டைமான் என்ற பட்டம் பெற்று நெடுநாள் அரசுரிமை செலுத்திஞர். இவர் பெயரால் குன்றத்தூரில் பாலரூவாயர் குளம் என்றும் பொய்கை ஒன்று உளது.

இனிச் சேக்கிழார் வாழ்ந்த காலத்தைக் குறித்துத் தேர்வாம்.

சேக்கிழார் தமது திருத்தொண்டர் புராணம் என்ற பெரிய புராணத்தில் பத்து இடங்களில் மன்னர் பெருமான் அநபாயன் பெயரைக் குறிக்கிருர். இப் பாக்களால் சோழ அரசன் அபயன், குலோத்

துங்கன் என்ற பொதுப் பெயரும், அநபாயன் என்ற சிறப்புப் பெயரும் பூண்டிருந்தான் எனத் தெரிகிறது. இம் மன்னன் தில்லைத்திருவெல்லையைப் பொன் வேய்ந்தான் என்றும் பேரம்பலத்தைப் பொன் வேய்ந்தான் எனவும் தெரிகின்றன.

ஆசிரியர் S. சோமசுந்தர தேசிகர் அவர்கள் தாமியற்றிய 'சைவ சிகாமணிகள் இருவர்' என்னும் நூல் பக்கம் 120-ல், 'பெரிய புராணம் பாடச் சொன்னவன் இராஜேந்திரனே என்பது விளங்காமற்போகாது. * * எவ்வாறாயினும் சேக்கிழார் காலம் முதல் குலோத்துங்கன் காலமல்ல என்பதும் அதற்கு முற்பட்ட தென்பதும் ஏற்படும்' எனக் கூறுகிறார்.

ஸ்ரீமான் T. A. கோபிநாதராவ் அவர்கள், 'சோழ வமிச சரிதம்' பக்கம் 27-ல் பின் வருமாறு கூறுகிறார். 'திருவாரூர்ச் சாசனம் ஒன்றில் முதல் குலோத்துங்கன் அநபாயன் என்று அழைக்கப்படுகிறான். இவனைக் குறித்துப் பெரிய புராணத்தில்,

"சேயவன்றிருப் பேரம்பலஞ் செய்ய
தூயபொன்னணி சோழனீ டூழிபார்
ஆய்சீர் அநபாய னரசவை"

என்றும், "கொற்றவனநபாயன்" "மன்னுசீரனபாயன் வழிமுதல்" என்றும்,

"மூவாத்தமிழ் பயந்த முன்னூன் முனிவாழி
யாவாழி வாழி யருமறையோர் – காவிரிநாட்
டண்ண லனபாயன் வாழி அவன்குடைக்கீழ்
மண்ணுலகில் வாழி மழை"

என்று தண்டியலங்கார உரையிலும் பலவாறு புகழ்ந்திருக்கின்றனர். ஆகையால் சேக்கிழார் காலம் முதல் குலோத்துங்கன் (1070-1118) காலமே" என்றார். பின்னும் பலர் இக் கருத்தையே தழுவலாயினர். அக் காலத்தில் இரண்டாங் குலோத்துங்கனைப் பற்றி ஒன்றுமே தெரியாததால், திருவாரூர்க் கல்வெட்டில் கண்ட, குலோத்துங்கன், அநபாயன் என்ற பெயர்கள் தாமறிந்த, முதல் குலோத்துங்கனையே குறிப்பதாகக் கொண்டனர்.

திருவாரூர்க் கல்வெட்டில் கண்டதாவது[1] "பூமன்னு பதுமம்பூத்த........கோ இராஜகேசரி பன்மரான திரிபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவர்க்கு யாண்டு ஏழாவது திருவாரூர் உடையார் ஸ்ரீ மூலத்தனமுடையார் கோயிலில் எழுந்தருளியிருக்கும் ஆளுடைய நம்பிக்கும் பரவை நாச்சியார்க்கும் அற்சனை போக இறையிலியாக பழம்பெயரும் முன்னிறை கட்டினபடியுந் தவிர்ந்து யாண்டு ஏழாவது முதல் அநபாயநல்லூரென்னுந் திருநாமத்தால்..... இக்கோயிலில் எழுந்தருளி யிருக்கும் ஆளுடைய பிள்ளையார்க்கும் திருநாவுக்கரச தேவர்க்கும் அற்சனைகளுக்கு விடப்பட்ட நிலம்" என்பதாகும்.

பின் திருமக்காளம் என்ற ஊரில் கண்ட இரண்டாம் குலோத்துங்கன் கல்வெட்டொன்றில், "[2]ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவர்க்கு யாண்டு பதினைன்ராவது தநு ஞாயிற்று இரண்டாந் திதியும்,

[1] S. I. I. Vol. II, Page 153. [2] 109 of 1910.

சனிக்கிழமையும் பெற்ற பூசத்தின் நாள்" எனக் குறிக்கப்படும் காலம் முதல் குலோத்துங்கன் காலம் அன்று எனவும், இரண்டாம் குலோத்துங்கனுடையது எனவும் ஸூவெல் (Mr. Sewell) என்பார் அறுதியிட்டு 1912-ல் எழுதினர். இக் கல்வெட்டு "பூமன்னு பதுமம்" என்றே தொடங்குகிறது. ஆகவே மேற்கூறிய திருவாரூர்க் கல்வெட்டுக்கும் இக் கருத்து மிக்க இசைவுடையதா யிருக்கிறது. இதனுல் பெரிய புராண ஆசிரியர் காலமும், இந்த இரண்டாம் குலோத்துங்கன் காலமே என்றும், அவனே அநபாயன் எனப் பட்டமும் பூண்டவன் என்றும் விளங்குகின்றன. சகம் 1065-ம் ஆண்டின் செல்லூர் செப்பேட்டாலும் இவை பின்னும் விளங்குகின்றன. ஸ்ரீமான் ரா. ராகவையங்கார் சுவாமிகள், குலோத்துங்க சோழன் உலாவின் இறுதியிலுள்ள கண்ணிகளிலும், வெண்பாவிலும் 'அநபாயன்' என்ற பெயர் பயின்று வருதலால், விக்கிரம சோழன் மகனை இரண்டாம் குலோத்துங்கனே அநபாயன் என்ருர்.[1]

மற்றும் 'பூமருவிய'[2] எனத் தொடங்கும் கல்வெட்டொன்றில் 'நம் பேரால் திருநீற்றுச் சோழன் திருமடை விளாகம்' என்று பேர் இடுமாறும், அவன் காலத்து வேறொரு கல்வெட்டில் 'பழம்பேர் தவிர்த்து குலோத்துங்க சோழன் திரு

[1] செந்தமிழ் Vol. III, Pages 298, 348.

[2] S. I. I. Vol. VII, No. 407 & 445 of 1912.

நீற்றுச்சோழ நல்லூர் என்று பேரிட்டு'[1] எனக் கூறுவதாலும் குலோத்துங்கன் II-க்கு இப்பெயர் உண்மையும், இவன் சிவபக்தியும் போதரும்.

இவன் பேரம்பலத்துக்குப் பொன் வேய்ந்ததும் தில்லை நடராஜப் பெருமானுக்குச் சிறப்பான திருப்பணிகள் பல இயற்றினதும், பேரம்பலத் திருந்த கோவிந்தராஜனை அப்புறப்படுத்திக் கடலில் விட்டதும், இவன் கல்வெட்டுக்களாலும், குலோத்துங்க சோழன் உலாவாலும் தெள்ளிதின் புலனும்.

தவிரத் தஞ்சை ஜில்லா கோட்டூர்ச் சாசனத்தில் "ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவர் யாண்டு இரண்டாவது குலோத்துங்க சோழவள நாட்டுக் குன்றத்தூர் நாட்டுக்குன்றத்தூர் சேக்கிழான் பாலறுவாயன் களப்பாளராயர் உபையமாக ஒரு நொந்தாவிளக்கு" என்று காணப்படுவதாலும், இஃது இரண்டாம் குலோத்துங்கன் காலத்திய கல்வெட்டா யிருப்பதாலும், இப் பாலறுவாயர், சேக்கிழார் தம்பி அல்லது மகனுதல் வேண்டும் எனத் தெரிவதாலும், சேக்கிழார் இரண்டாம் குலோத்துங்கன் காலத்தவர் என்பது ஐயமறத் தெளிவாம்.

---

[1] 363 of 1911.

# 9. பிந்திய சோழர்

இரண்டாம் இராஜாதிராஜன் இளவரசா யிருக்கையிலேயே பாண்டியர்களுள் இரு வமிசத்தினருக்கும் பெரும் போர் நிகழ்ந்தது என முன்னர்க் கூறியுள்ளோம். அப்போரில் முதலில் தோற்றவனை குலசேகர பாண்டியன் என்பான் இராஜாதிராஜன் துணையை வேண்ட, அவனும் ஒரு பெரிய படையைப் போக்கித் துணை புரிந்தான். அப்போது பாண்டிய, சோழ, கொங்கு சேனைக் குழாம் குழுமி, எதிர்த்த பாண்டியனையும் அவனுக்குத் துணையாக வந்த இலங்காபுரி என்ற படைத்தலைவனையும் வென்றது. இதற்குப் பின் சில காலம் இராஜாதிராஜன் ஆண்டான். பிறகு மூன்றும் குலோத்துங்கன் கி. பி. 1178-ல் சிம்மாசனம் ஏறினன். இவனுக்கு வீரராஜேந்திரன் என்றும் 'மதுரையும் ஈழமும் கொண்டான்' என்றும் பட்டமுண்டு. மீண்டும் ஒரு முறை பாண்டியர்களுக்குள் கலகம் உண்டாய்ப் போர் நிகழ, அதில் குலோத்துங்கன் III என்பான் குலசேகர பாண்டியனுக்கு உதவி செய்து அவனுக்கு எதிரியான மற்றொரு பாண்டிய மன்னனையும் ஈழத்தரசனையும் வென்ருன்.

இருப்பினும், இக்காலத்திய சோழ அரசர்கள் தேக வலிமை இழந்து, நாட்டிலுள்ள அமைதியின் மிகுதியால் சிற்றின்பங்களில் ஈடுபட்டுக் காலங்கழிப்பாராயினர். ஆகவே இராஜ ராஜக் காடவராயன்

என்பானும், குலோத்துங்க வாணகோ வரையனும், மற்றொரு காடவராயனும் சேர்ந்து, குலோத்துங்கன் III ஆட்சியை எதிர்க்கத் தலைப்பட்டனர். அப்போது பிற சிற்றரசர்களெல்லாம் ஒருமித்துத் திரண்டு, குலோத்துங்கனுக்கே உதவி புரிவதாகப் பிரமாணம் செய்து கொடுத்தனர். பின் இவன் காலத்தில் 24-ம் ஆண்டில் ஒரு பஞ்சமும் நேர்ந்தது. அப்போது 'காசுக்கு உழக்கரிசி விற்றதென்று' திருவண்ணாமலையில் ஒரு கல்வெட்டு அறிவிக்கிறது.[1]

குலோத்துங்கன் III-க்குப் பிறகு மூன்றாம் இராஜராஜன் கி. பி. 1216-ல் பட்டமெய்தினான். இவன் காலத்தே சோழ நாடு மிகப் பரந்திருந்த போதிலும் சிற்றரசர்கள் முன்னிலும் வலுத்து விட்டனர். ஆயினும் அவர்களது துப்பாலும் துணையாலுமே இவன் தன் நாட்டை ஆண்டு வந்தான். இக் காலத்தில் பாண்டி நாட்டில், மாறவர்மன் சுந்தர பாண்டியன் என்பவன் மிக்க பலசாலியாய் ஆண்டு வந்தான். அவன் சோழர் ஆட்சியின் வலிக்
குறைவை ஓர்ந்து, அந் நாட்டைக்
வும் எண்ணினான். அங்ஙனமே சுந்
சோணாட்டின் மீது படை எடுத்து வ
என்பது, அவன் கல்வெட்டுக்கள், ஸ்ரீ
இடங்களில் காணப்படுவதாலும்
பின் திரும்பவும் அந்தச் சோழ
அளித்து விட்டான் என்பது, "

[1] 506 of 1902. [2] No. 52 of 1897.

THE MADURA TAMIL SANGAM